# பொச்சங்கள்



வ. அ. இராசரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொச்சங்கள்

வ. அ. இராசரெத்தினம்

வெளியீடு:

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு – கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title: POCHANGALL

Author: V. A. IRASARATHINAM

Author's Address: THIRIKOODAM, MUTHUR.

Right : AUTHOR'S

Date of Publication: APRIL, 1999.

Pages: 176

Publisher: MINISTRY OF EDUCATION, CULTURAL AFFAIRS, & SPORTS.
N. E. P.

Printers: PRINTING DEPARTMENT, TRINCOMALEE.

100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இன்றைய நாட்களில் படைப்பாளிகள் தமது ஆக்கங்களை அச்சிற் கொண்டுவருதல் என்பது மிகவும் இடர் மிகுந்த ஒன்றாகும். அதைவிடவும் அதை அச்சிற் பதிப்பித்தாலும் இன்னும் இடர் தருவது அதனைச் சந்தைப்படுத்துவது. இன்றைய நுகர்வுக் கலாசாரத்தில் நூல்நுகர்வு என்பது இழிந்தபண்டங்களில் ஒன்றாகிவிட்டது. இழிந்தபண்டம் உடலுக்கு நோயைக் கொண்டுவருதல் போலவே தரமற்ற நூல்களின் அல்லது சீரழிவைக் கொண்டுவரும் நூல்களின் நுகர்வும் உளப்பண்பாட்டிற்கும் ஊறு விளைவிப்பனவாக அமைகிறது. வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு இதுகுறித்து மிகுந்த கவனத்துடன் செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. தரமான நூல்களிற்கான விருது, தரமான நூல்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு, கலை, இலக்கிய, பண்பாட்டு விழாக்கள், பல்வேறுதுறை சார்ந்த கருத்தரங்குகள், பட்டறைகள் எனப் பலபட இயங்கிவருகின்றோம்.

மேற்படி எமது இயங்குதலுக்கு ஒத்துழைத்து நல்ல நூல்களைத் தந்துதவுமாறு நாம் பிரபலமான பல எழுத்தாளர்களை வேண்டிக்கொண்டோம். அதற்கு இசைவான ஒத்துழைப்பை நல்கிய வ. அ. இராசரெத்தினம் அவர்களை நாம் முதலில் பாராட்டியாகவேண்டும். ஒருமுதிர்ந்த, தமிழ் இலக்கிய உலகு நன்கறிந்த எழுத்தாளரான இவரது நூலை வெளியிடுவதன் மூலம் நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

'பொச்சங்கள்' என்னும் இந்நூல் பல்துறை சார்ந்த நூல்களைப் பற்றிய ஓர் அசை போடல் அல்லது இரைமீட்டலாகும். புதிய நூற்றாண்டை அண்மித்து நிற்கும் நாம் பழையவற்றை அசைபோடல் என்பது வெறும் பழங்கணக்குப் பார்க்கும் சங்கதிமட்டுமல்ல, அசைபோட்டுக் கணிப்பீடு செய்தலின் மூலம் புதியயுகம் நோக்கிப் பயணிப்பதற்கான பாதைவகுத்தல் என்பதாகும். பழையவை புதியவற்றிற்கு உரமாக மாறும். மேலும் மேலும் புத்தகப் பண்பாட்டிற்கு உரமூட்டவல்லவற்றை நாம் எதிர்பார்க்கிறோம். எமது பதிப்பித்தல் முயற்சிக்கு மேலும் உரமேற்றவல்லதாக எழுத்தாளர்களின் உதவியையும் எதிர்பார்க்கிறோம். அத்தகைய எதிர்பார்ப்பை நிறைவேற்றிய திரு. வ. அ. இராசரெத்தினத்திற்கு நாம் மிகவும் கடப்பாடுடையோம்.

எஸ். எதிர்மன்னசிங்கம்,
உதவிப்பணிப்பாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வ. கி. மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத்தின் பிரபல எழுத்தாளரான திரு. வ. அ. இராசரெத்தினம் அவர்கள் எம்மத்தியில் இன்றும் வாழ்ந்துவரும் மூத்ததலைமுறை எழுத்தாளர் ஆவார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரி தொட்டு இன்றைய தினக்குரல் நாளிதழ்வரை, இடைவிடாது எழுதிக்கொண்டே இருப்பவர். இடையறாத வாசிப்பும், இடையறாத எழுத்துமென சமகாலப் பிரக்ஞையோடு பாரம்பரியப் பிணைப்பும் கொண்ட ஒரு தொடரோட்டத்தை நாம் இவரில் தரிசிக்கலாம். கடந்த ஆண்டில் இவர் எம்மால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை இவ்வேளையில் நினைவுகூரும்போது எமது பாரம்பரியத்திற்கும், அதேசமயம் எமது ஆசிரிய பாரம்பரியத்திற்கும் நாமளித்த கௌரவமாகவே அதை நான் கருதுகிறேன். ஏனெனில் இவர் ஓர் ஆசிரியராக இருந்தவர். ஓர் ஆசிரியர் எவ்வாறு பரந்த வாசிப்புக்குரியவராயிருத்தல் வேண்டும் என்பதற்கு இவர் ஓர் உதாரணம். இதன்மூலம் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்களும் எவ்வாறு இருப்பர் என்பதும் எனது மனக்கண்முன் தரிசனமாகின்றது. பல்பரிமாணம் உடைய வாசிப்புப்பயிற்சியுடைய ஆசிரியனும், படைப்பாளியுமான ஒருவனுடைய மாணவரும்சரி, வாசகரும்சரி பன்முகத்தரிசனங்களின் அனுபவங்களை எய்துவர்.

பன்முகத்தரிசனம் என்பது ஒரு பண்பாட்டுக்குச் சொந்தக்காரருக்கு அவசியமானது. எந்தப்பண்பாடும் தனக்குச் சொந்தமான பண்பாட்டு அம்சங்களை சிறப்பாகக் கொண்டிருப்பதோடு, பலதிறத்தான பண்பாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லியற்கூறுகளை தன்வசமாக்கிக்கொள்தல் அவசியம். பண்பாடு என்பது கலப்புப் பண்பாடு ஆதல் என்பது இதன் பொருளன்று. கொண்டும் கொடுத்தலுமான உறவின் மூலமாகப் பெறுகின்ற நல்லம்சங்களின் தன்மயமாக்கல் என்பதாகும். இதற்கு பன்முகவாசிப்பும், பலதுறை, பல்லினக்கூறுகள் பற்றிய பண்பாட்டு விளக்கமும், வரலாற்று ஆய்வும் அவசியமாகும்.

இத்தகைய பல்பரிமாணத்தை முழுவதுமாக வ. அ. இயின் இந்நூலின்மூலம் நாம் நுகரமுடியாவிடினும், அதை எட்டுவதற்கான முன்முகர்தலை அனுபவிக்கலாம். அதைநோக்கிய பயணவாசனையை முகர்ந்தபடி முன்செல்லலாம். வ. அ. இயும் தமது எழுத்துத்துறையில் நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, வரலாறு, மொழிபெயர்ப்பு, நூற்பதிப்பு எனப் பலபரிமாணம் கொண்டவர், அதன் ஒருகூறாக இந்தப் 'பொச்சங்கள்' என்னும் இந்நூலும் இணைந்துகொள்கின்றது. இவரது இத்தகைய பரிமாணத்திற்கு அணிசேர்க்கும் வகையில் இப் 'பொச்சங்களை' வெளியிடுவதில் எமது பண்பாட்டலுவல்கள் துறையும் இணைந்துகொள்வது மகிழ்ச்சியளிக்கின்றது. இத்தகைய முயற்சிகளில் தரம்மிக்கவற்றைத் தந்துதவி அணிசேருமாறு எழுத்தாளர்களை இதன்மூலம் அழைக்கிறோம்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு.
30.03.1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

1975ல் திடீரென இறந்த என் மனைவியின் பேரிழப்பைக்கூடச் சில வருடங்களில் சுதாரித்துக்கொண்டு எழுந்துவிட்டேன்.

ஆனால் அதற்கும் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னால் இரண்டாங் கட்ட ஈழப்போரின்போது ஏற்பட்ட இழப்பைச் சுதாரித்துக்கொள்ள இன்றைக்கும் என்னால் முடியவில்லை. அந்த உள்நாட்டுப்போரில் நான் அரை நூற்றாண்டுகளாக எழுதிய என் படைப்புகளின் பத்திரிகை நறுக்குகளும், என்நூலகமும், எனக்கு வருவாயைத் தந்துகொண்டிருந்த என் அச்சகமும், என் இலக்கிய நண்பர் கிண்ணியா எஸ். எம். சாலிஹ் என்ற இயற்பெயருடைய கவிஞர் அண்ணலின் படைப்புக்கள் அடங்கிய பத்திரிகை நறுக்குகள் எல்லாமுமே தீக்கிரையாகின. எரிந்துபோன என் படைப்புக்களையும், என் நூலகத்தையும் நினைவுகூர்ந்து கண்ணீர் விடாமலிருக்க இன்றைக்கும் என்னால் முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் இழந்து அகதியாகத் திருக்கோணமலைப் பட்டினத்திற்குப் புலம்பெயர்ந்த நான் மீண்டும் ஊருக்கே வந்துவிட்டேன்.

திருக்கோணமலைப் பட்டினத்தில் வாழ்க்கையில் அங்கிருந்த நூல்நிலையங்கள் பகல் வேளைகளில் என் சரணாலயமாக இருந்தன. வடக்கு – கிழக்கு மாகாணக் கூட்டுறவு மனிதவள அமைச்சின் செயலாளராகவிருந்த (காலஞ்சென்ற) சி. பற்குணம் அவர்கள் நிறுவிய மனிதவள மேம்பாட்டு நிலைய நூல்நிலையம் என் வாசக வேட்கையைத் தீர்த்தது. திருக்கோணமலை நகரசபை நூல்நிலையமும் அதனைச் செய்தது.

மூதூருக்கு மீண்டபின்னர், மாதம் இருதடவையாவது திருக்கோணமலைக்குச் சென்று மூதூரில் கிடைக்காத இலக்கிய சிற்றிதழ்களையும், நூல்களையும் மனிதவளமேம்பாட்டு நூல் நிலையத்திலிருந்து படித்துவிட்டு, அந்நூல்நிலையத்திலும் நகரசபை நூல்நிலையத்திலுமாக நான்கு புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு ஊருக்கு மீள்வேன்.

ஆனால் திரு. சி. பற்குணம் அவர்கள் வேறு அமைச்சுக்கு மாற்றப்பட்டபின்னர், அவரிடத்திற்கு வந்தவர்கள், பற்குணம் அவர்கள் நிறுவிய நூல்நிலையத்தை மூடிவிட்டார்களே! யாழ்ப்பாணத்து நூல் நிலையத்தை எரித்தவர்களுக்கும், திருக்கோணமலை மனிதவள மேம்பாட்டு நூல்நிலையத்தை மூடியவர்களுக்கும் இடையே எந்த வேற்றுமையையும் என்னாற் காணமுடியவில்லை.

மனங்கசந்துபோன என்னால், என்முதுமை காரணமாக அடிக்கடி நூல்நிலையம் போகவும் முடியவில்லை. திருக்கோணமலைக்கென்ன? மூதூர்ப் பட்டினசபை நூல் நிலையம் செல்வதற்குக் கூட என்னால் முடியவில்லை. என் 'பிச்சைக்காரப் பென்சனில்' புதிய புத்தகங்களையும் என்னால் வாங்கவும் முடியவில்லை. இத்தகைய கையறுநிலையில், எரிந்துபோன என் நூல் நிலையத்தை எண்ணி மீண்டும் கண்ணீர் வடிக்கிறேன். மீண்டும் மீண்டும் படிக்கலாமே என்றெண்ணி ஏங்குகிறேன். 'பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பதுபோல' என் நூலகத்திலிருந்த நூல்களை நினைவு கூருகிறேன்.

என் நூல் நிலையத்திலிருந்த சில நூல்கள் என் பழைய நினைவுகளைக் கிளறவல்லனவாகவும் இருந்தன. முப்பதுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கத்தில் என் தந்தையார் கிண்ணியாவைச் சேர்ந்த தாமரைவில் என்ற கிராமத்துப் பாடசாலையின் ஒரே ஆசிரியர்! மாலை வேளைகளில் அந்தக் கடலோரக் கிராமத்து வெண்மணலில் அமர்ந்துகொண்டு தந்தையாரிடம் அரிச்சுவடி எழுதக் கற்றபோதே அவர் எனக்குச் சூடாமணி நிகண்டுப் பாடல்களையும் மனனம் பண்ணுவித்தார். அவர் எனக்களித்த சூடாமணி நிகண்டின் பிற்பக்கத்து வெற்றிடத்தில் அம்மா தன் பிள்ளைகள் எல்லோரதும் பிறந்த நாள், மாதம், வருடம் ஆகியவற்றை வரிசைக் கிரமமாக எழுதிவைத்திருந்தார். அதை ஒரு ஆவணமாகவே நான் பேணிப் பாதுகாத்து வைத்திருந்தேன். அந்நூல் எரிந்தே விட்டது!

1938ல் நான் மூதூர்ப் புனித அந்தோனியார் பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது சுகாதாரத் திணைக்களம் ஒரு கட்டுரைப்போட்டி நடத்தியது. எனக்கு மேல்வகுப்பிலுள்ளவர்களே கலந்துகொண்ட அந்தப் போட்டியில் என்னையும் பங்குபற்றும்படி என் ஆசிரியர் கரவெட்டி அ. சி. லிகோரி அவர்கள் தூண்டினார். நானும் போட்டியில் கலந்து கொண்டேன். முதலிடத்தையும் பிடித்தேன். பரிசாக வித்வான் சி. கணேசையர் எழுதிய ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரிதம், என்ற நூல் தரப்பட்டது. பிற்காலத்தில் தகவல் எழுதவேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டால், அந்நூலைப் பிரித்துப்

போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே
மாற்றருஞ் சிறப்பின் வண்டமிழ்ப் புலமைப்
பாவல்லீரும் நாவல்லீரும்
போற்றுகம் வம்மே, போற்றுகம் வம்மே

எனத்தொடங்கும் அகவற்பாவை மீண்டும் ஒருமுறை படித்தால் எழுதவேண்டிய அகவல் அணையுடைத்த வெள்ளமாய்ப் பீறிட்டுப்பாயும். அந்த நூலும் எரிந்துவிட்டது.

அந்தக்காலத்தில் நான் பூசைப்பரிசாரகன். என் வயதினரான மற்ற மாணவர்களைவிட ஆங்கிலமும் நன்கு வாசிப்பேன். லத்தீனில் எழுதப்பட்டவைகளையும் பொருள் விளங்காமற் படிப்பேன். அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DAILY MISSAEL என்ற ஆங்கில லத்தீன் மொழிகளில் எழுதப்பட்ட பூசைப் புத்தகத்தை காலஞ்சென்ற அருட்திரு. அலோசியஸ்மேரி அடிகளார் எனக்கு அன்பளிப்புச் செய்தார். பிற்காலத்தின் பூசைகள் தமிழ் மொழியில் செய்யப்பட்டபோதும் அந்நூலை நான் மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தேன். அதுவும் எரிந்துபோயிற்று!

1951ம் ஆண்டு டெனியாயா புனித மத்தியூஸ் கல்லூரியில் ஆசிரியனாக இருந்தேன். அந்த ஆண்டு இந்நாட்டின் சிறந்த சரித்திர ஆசிரியர்களில் ஒருவரான அருட்திரு. S. G. பெரேரா S. J. அவர்கள் காலியில் மரணமானார். அவரது மரணச்சடங்குகளிற் கலந்து கொண்ட நான் அவர் எழுதிய 'A PRIEST'S LETTER TO A NIECE ON LOVE, COURTSHIP AND MARRIAGE' என்ற நூலை வாங்கிவந்து என் பிற்கால மனைவிக்கு அன்பளிப்பாகக்கொடுத்தேன். 'எனக்கு ஆங்கிலம் தெரியாதெனக் கேலிசெய்கிறீர்களா?' என்று அவள் கோபித்துக்கொண்டாள். அந்த நூலும் எரிந்துவிட்டது! எனக்குத்திருமணமான சில மாதங்களில் முஸ்லீம்களின் றம்ஸான் மாதம் பிறந்தது. 1953ல் நோன்பு விடுமுறையிலிருந்த என் மனைவியையும் அழைத்துக்கொண்டு நான் ஆசிரியப்பணிபுரிந்த மொறட்டுவாவிற்குச் சென்றேன். புனித செபஸ்தியார் கல்லூரியில் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக இருந்த கேரளத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் என்ற சக ஆசிரியரும் மணம்முடித்துக்கொண்டு தம் மனைவியையும் கூட்டிக்கொண்டு வந்திருந்தார். அவர் மனைவி, என் மனைவிக்குக் கொடுத்த அன்பளிப்பு 'கேரளத்தின் சிறிய புஷ்பம்' என்ற நூல்! இளம் வயதில் மரணமான கேரளத்துச் சங்கைக்குரிய சகோதரி ஒருத்தியின் வாழ்க்கைவரலாறடங்கிய அந் நூலை என் மனைவி மிக்க ஆர்வத்துடன் படித்தாள். அந்த நூலும் என் நூல் நிலையத்திலிருந்து எரிந்து போயிற்று.

இப்படியாக என்னால் மறக்கமுடியாத, என் நினைவுகளைக் கிளறி, உணர்வுகளைத் தூண்டக்கூடிய பல நூல்கள் என் நூலகத்திலிருந்தன. எரிந்துபோன அந்நூலகம் பழைய நினைவுகளைக் கிளறி என்னை அலைக்கழித்தது.

1946ம் ஆண்டு நான் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவனாக இருக்கையிலேயே நான் மாதாமாதம் புத்தகங்கள் வாங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிட்டேன். மாதாமாதம் அரசாங்கம் தந்த உபகாரச்சம்பளம் இருபது ரூபாயில் ஐந்து ரூபாய்களுக்காவது புத்தகங்கள் வாங்குவேன். டி. கே. சியின் இதய ஒலி, அவர் மகன் தீத்தாரப்பனின் அரும்பிய முல்லை, சத்தியமூர்த்தி மகளுக்கு எழுதிய கடிதங்கள், மகாத்மாகாந்தியின் சத்தியசோதனை வெ. சாமிநாதசர்மாவின் கால்மாக்ஸ், மனிதன் கடவுள் ஆகிய நூல்கள் அந்தக்காலத்தில் வாங்கியவையே.

1948ல் ஆசிரியரானபின் மாதம் பதினைந்து ரூபாவிற்காவது புத்தகங்கள் வாங்குவேன்.

1953ல் இலங்கை வானொலிக்கு நாடகங்கள் எழுதத்தொடங்கினேன். மாதம் ஒரு நாடகமாவது ஒலிபரப்பாகும். அந்நாடகங்களுக்குக் கிடைத்த சன்மானத்திற்குப் புத்தகங்களே வாங்குவேன்.

நான் ஈழகேசரியிற் தொடர்ந்து எழுதிய கொழுகொம்பு என்ற நாவலை 1956ல் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது பொன்னையா நினைவு மன்றத்தினர் அதனை நூலாக வெளியிடும் உரிமையை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு ஐஞ்நூறு ரூபா பணம் தந்தனர். அந்தக்காலத்தில் அது பெரியதொகை. அப்பணத்திற்கு நூல்களே வாங்கினேன். கம்பராமாயணத்தின் ஏழுகாண்டங்களும் (உரையுடன்) சங்க இலக்கிய நூல்கள் பலவற்றையும் அப்போதுதான் வாங்கினேன்.

எங்காவது புது ஊர் சென்றால் அதன் நினைவாகப் புத்தகமே வாங்குவேன். முதல் முறை யாழ்ப்பாணம் சென்றதன் நினைவாக நான் வாங்கிய நூல் பாரதியார் பாடல்கள்.

மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ பிறந்தநாட் பரிசாகக் கொடுக்கவும் புத்தகங்களையே வாங்கினேன்.

கொழும்பிலே நடைபாதையிலுள்ள பழைய புத்தகக் கடைகளில் ஆற அமர இருந்துகொண்டு நூல்களைத் தேடிப் பிடித்து வாங்குவேன். பல ஆங்கிலக் 'கிளசிக்' குகளை இப்படித்தான் வாங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாகச் சுமார் ஐம்பது ஆண்டுகளாகச் சேர்த்த பல நூற்றுக்கணக்கான நூல்கள் என் நூல் நிலையத்தில் இருந்தன. சங்க இலக்கியங்கள் தொடக்கம் 'இன்குலாப்' பின் புதுக்கவிதை நூல்கள் வரை, தமிழ் வசன நடையைத் தொடக்கிவைத்த இத்தாலியரான அருட்திரு. றோபட் டி. நொபிலி என்ற தத்துவ போதகரின் நூல்கள் தொடக்கம் இன்றைய சுந்தரராமசாமியின் நூல்கள்வரை தமிழ் நூல்கள் இருந்தன. பல ஆங்கிலப் புலவரின் நூல்களும், ஆங்கில ஐரோப்பிய, அமெரிக்கக் 'கிளசிக்' குகளும் என் நூலகத்திலிருந்தன.

ஆனால் என் முதுமைக்காலத்தில் அவைகளைப் படிக்க முடியவில்லையே என்ற ஏக்கமே என்னைக்கவர்ந்த சில நூல்களைப்பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணத்தைத் தந்தது.

கட்டுரைத் தொடரை எழுதத் தொடங்கியபோது, புதிய நூல்கள் சிலவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனப்பட்டது. ஆம்! என் வாசிப்பே என்னை எழுத்தாளனாக்கியது. என்னால் ஓரிரு நாட்கள் எழுதாமலிருக்க முடியும். ஆனால் ஒரு நாட் கூட வாசிக்காமல் இருக்கமுடியாது!

இந்நூல் மாணவ சமுதாயத்திடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் என்பது என் நம்பிக்கை.

வணக்கம்,

வ. அ. இராசரெத்தினம்,
திரிகூடம்,
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை



தாயின் கருவிலிருக்கையிலேயே
நீ தேர்ந்தெடுக்கப்பட்டாய்
அந்த உணர்வினாலேயே
உனக்கு யூஜின் எனப்பேரிட்டோம்.
அமல மரித்தியாகிகள் சபைத்தாபகரான
யூஜின் அடிகளாரை
'புரட்சியிற் பூத்த பூ' என்றார்
கரவைச் செல்வம் அடிகளார்.

கொடுங்கோல் மன்னர் ஓயிசையும்
அவனை ஆதரித்த பிரபுக்களையும்
மாடாதிபதிகளையும்,
குளட்டின் இயந்திரங்கள்
தலையைச் சீவியெறிந்த
பிரஞ்சுப் புரட்சியின் போதுதான்
தாபகர் யூஜின் தோன்றினார்.

நீயும் யுத்தத்தால் மயான பூமியாகிவிட்ட
யாழ்ப்பாணத்திற் படித்தாய்,
போரிற் சிக்கிப் புலம்பிய
மட்டக்களப்பிற் குருத்துவப் பட்டம் பெற்றாய்.
சுடுகாடாகிவிட்ட, நீ பிறந்த மூதூர்மண்
அதைக்கண்டு பெருமையுற்றது.

ஏனென்றால் நீ மூதூரின்
முதலாவது அமலமரித்தியாகிகள் சபையினன்.
எம் கூப்பிய கரங்களால்
உன்னை நிவேதித்த
2. 5. 98ன் பரவச நினைவுகளுக்கு
இந்நூல் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நிகண்டு | - 17 |
| 2. | இலக்கணநூல் | - 21 |
| 3. | செம்மீன் | - 26 |
| 4. | சிங்கள நாவல் | - 31 |
| 5. | அரும்பியமுல்லை | - 36 |
| 6. | திவ்யப் பிரபந்தம் | - 41 |
| 7. | விவிலியம் | - 46 |
| 8. | உலக சரித்திரம் | - 51 |
| 9. | மட்டக்களப்புத் தமிழகம் | - 57 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 10. | நம்பியகப் பொருள் | - 62 |
| 11. | யாப்பு | - 68 |
| 12. | தண்டியலங்காரம் | - 75 |
| 13. | உள்மன யாத்திரை | - 80 |
| 14. | மதங்க சூளாமணி | - 86 |
| 15. | தேம்பாவணி | - 94 |
| 16. | பந்த நூல் | - 102 |
| 17. | குறும்பா | - 108 |
| 18. | உருவகக் கதைகள் | - 114 |
| 19. | மகா பாரதம் | - 121 |
| 20. | பூர்த்தியடையாத மட்டக்களப்புக் காவியம் | - 127 |
| 21. | சிறுவர் இலக்கியம் | - 134 |
| 22. | சரணம் (மலையகநாவல்) | - 140 |
| 23. | ஒரு பறவையின் பாடல் | - 146 |
| 24. | கண்டியரசன் நாடகம் | - 152 |
| 25. | பெ. பொ. சி கவிதைகள் | - 160 |
| 26. | சரித்திர நாவல் | - 165 |
| 27. | திருக்கடைக்காப்பு | - 172 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

எம். ஏ. ர.்.மான்.

தினக்குரல்.

சந்ரா.

கல்வி, பண். விளை. அமைச்சு, வ. கி. மா.

பதிப்பகத் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகண்டு

**தற்போது** அகராதிக் காலம். மாணவன் புதிய ஒரு வார்த்தைக்கு அர்த்தம் தெரிவதாயின் அகராதியைப் புரட்டுகிறான். வீரமாமுனிவரின் சதுரகராதி தொடக்கம் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதிவரை நூற்றுக் கணக்கான அகராதிகள் தற்போது புழக்கத்திலுள்ளன. மதுரைத் தமிழ்ப் பேரகராதி. ஆனந்தவிகடன் அகராதி, கழகத் தமிழ்க் கையகராதி. அப்பாடா! எத்தனை எத்தனை அகராதிகள்.

ஆனால் இந்த அகராதிகள் எல்லாமே கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக எழுதப்பட்டவைதான். அப்படியாயின் நம் முன்னோர் அகராதிகளையே வைத்திருந்ததில்லையா? மேலை நாட்டவரான வீரமாமுனிவர் தம் நாட்டு மரபைப் பின்பற்றித் தமிழுக்கு முதன் முதலாகத் தமது சதுரகராதியைத் தந்தார்.

ஆனால் அதற்கு முன்னர் அகராதிகள் நிகண்டு என்ற உருவத்தில் இருந்தன.

முப்பதுகளின் தொடக்கத்தில் நான்ஆரம்பப் பாடசாலை மாணவன். கிண்ணியாவைச் சேர்ந்த தாமரைவில் என்ற கடலோரக் கிராமத்துப் பாடசாலை மாணவன். என் தந்தையார்தான் அந்த சின்னப் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியரும்.

சூரியன் பொன்னொளிபரப்பும் மாலைக் காலத்தில் நான் அக்கிராமத்து வெண் மணலில் சம்மணங்கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துகொண்டு ஆனா; ஆவன்னா எழுதுவேன். ஆத்தி சூடி, கொன்றைவேந்தன். வெற்றிவேற்கை என்ற நீதி நூற்பாடல் களையும் தந்தையார் எனக்குச் சொல்லித் தருவார். பால்ய வகுப்பிலேயே நான் பஞ்சதந்திரக் கதைகளையும் என் தந்தையார் மூலம் அறிந்திருந்தேன். அந்த நாட்களில்தான் தந்தையார் எனக்கு ஒரு பாடலையும் மனனம் செய்வித்தார். இன்றும் கூட எனக்கு மனனமாகி விட்ட அந்தப் பாடல் :-

**பொன்னு நன் மணியும் முத்தும்,**
**புனைந்த முக்குடை நிழற்ற**
**மின்னுபூம் பிண்டி நீழல்**
**வீற்றிருந்த வனை வாழ்த்தி**
**மன்னிய நிகண்டு சூடா**
**மணியென ஒன்று சொல்வேன்**
**இந்நிலந்தன்னில் மிக்கோர்**
**யாவரும் இனிது கேண்மின்**

இந்த முதலாவது செய்யுளை மனனம் பண்ணிய பின்னர் தந்தையார் என்னிடம் சூடாமணி நிகண்டையே புத்தகமாகத் தந்தார்.

தமிழிலே வைத்திய - சோதிட நூல்கள் எல்லாமே செய்யுள் நடையில் எழுதிவைக்கப்பட்டிருந்தது போலத் தமிழ் அகராதியும் வீரமாமுனிவருக்கு முன்னால் செய்யுள் நடையிலே அமைந்திருந்தது. எனக்குக் கிடைத்தது சூடாமணி நிகண்டு. இதை விடத் திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு எனப் பல நிகண்டுகளும் இருந்தனவாம்.

நான் சூடாமணி நிகண்டைப் புரட்டினேன். தேவர் பெயர்த் தொகுதி, மக்கள் பெயர்த் தொகுதி, விலங்குப் பெயர்த் தொகுதி எனப்பல தொகுதிகள் இருந்தன. நான் ஆர்வத்தோடு சூடாமணி நிகண்டைப் படித்தேன். அதிலே தேவர் பெயர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியிற் சிவபிரானின் பெயர்கள் இப்படிக் கூறப் பட்டிருந்தன:-

**சங்கரன் இறையோன் சம்பு**
**சதாசிவன் பேயோடாடி**
**பொங்கரவணிந்த மூர்த்தி**
**புராந்தகன் பூதநாதன்**
**கங்கை வேணியன் கங்காளன்**
**கடுக்கையள் கண்ணிசூடி**
**மங்கையோர் பாகன் முன்னோன்**
**மகேச்சுரன் வாமதேவன்**

இப்படியே மும் மூர்த்திகளுக்கும் அவரின் மனைவி யருக்கும் அவர்களது பிள்ளை குட்டிகளுக்கும், உற்றார் உறவினர் ஆகிய சகல தேவர்களுக்கும் நிகண்டு பெயர்களை வரிந்து கட்டிக் கொண்டு சொல்கிறது.

இதே பாணியில் மக்கட் பெயர்த் தொகுதியிலும், விலங்குப் பெயர்த் தொகுதியிலும் பாடல்கள் இடம் பெறுகின்றன.

இப்படியான பெயர்த் தொகுதிகள் போனால் சாதாரண வார்த்தைகளுக்கான அர்த்தத்தை ககரவெதுகை, ஙகரவெதுகைப் பாடல்கள் சொல்கின்றன. பகவன் என்ற பதத்திற்கு அர்த்தம் வேண்டுமா? நிகண்டு சொல்கிறது பகவனே ஈசன், மாயோன், பங்கையன், சினனே, புத்தன் என்று.

மகரம் என்ற பதத்திற்கு, மகரமே சுறா பூந்தாதாம் என்கிறது சூடாமணி நிகண்டு. அதேபோலப் பாக்கு என்னும் பதத்திற்கு பாக்கென்பது எதிர்காலத்தைப் பற்றிடைச்சொல், துவர்க்காய் என்று அர்த்தம் சொல்கிறது.

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கையில் ஏறத்தாழ சூடாமணி நிகண்டு முழுவதையும் மனனம் பண்ணிவிட்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தையார் எனக்களித்த சூடாமணி நிகண்டை சுமார் 60 ஆண்டுகளாக மிகக் கவனமாகப் பேணிப் பாதுகாத்து வந்தேன்! ஆனால் யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்த பேரினவாதம் எனது சூடாமணி நிகண்டையும் எரித்து விட்டது.

எனது சூடாமணி நிகண்டு எரியுண்ட பின்னால் நான் எந்த நிகண்டையும் இதுவரை கண்ணால் காணவில்லை. இனியும் காண்பேனோ என்னவோ!

ஏனென்றால் நிகண்டுகள் வழக்கொழிந்து விட்டன. இனிமேல் யாரும் வேலைமினக்கெட்டு நிகண்டைப் பதிப்பிக்கப் போவதில்லை. அந்நியநாடுகளில் அகதிகளாக புலம்பெயர்ந்து சென்ற நம்மவர்கள் சில வேளை மைக்ரோ படமாக நிகண்டுகளைப் படம் பிடித்து நெருப்புப்பெட்டி அளவிலான நூலாக ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டு நூல் நிலையத்தில் அவற்றைப் பாதுகாத்து வைக்கலாம். நம் நாட்டிலே நூல் நிலையங்கள் இன்னமும் எரிக்கப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? நான் வைத்திருந்த சூடாமணி நிகண்டின் கடைசிப் பக்க வெற்றுத் தாளில் என் தாயார், என்னுடையதும், எனது இரு சகோதரிகள் - மூன்று சகோதரர்கள் ஆகியோரதும் பிறந்த திகதியையும், பெயரையும் பதிவு செய்து எங்களையும் மக்கட் பெயர்த் தொகுதியில் சேர்த்திருந்தார். அந்த வகையிலும் அந்நூல் என் உணர்வு களைத் தூண்டவல்லதாயிருந்தது.

அந்த நூல் மட்டும் - இல்லை - ஏதாவது ஒரு நிகண்டு கிடைத்தால் ஒட்டு மாம்பழத்தை முகர்ந்து கன்னத்தோடு ஒட்ட வைத்துக் களிப்பது போலக் களிக்க ஆசையாக இருக்கிறது. நிகண்டு எங்கே கிடைக்கும்?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கண நூல்

**தமிழுக்குக்** கிடைத்த இலக்கண நூல்களில் அகத்தியம் நமக்கு பெயரளவிற் தான் தெரியும். தொல்காப்பியத்தைப் பண்டிதரல்லாதார் தீண்டுவதில்லை. ஆனால் அவைகட்குப் பின்னால் வந்த நன்னூல், இருபது - இருபத்தைந்து ஆண்டு களுக்கு முன்புவரை பாடசாலைகளிற் கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய க.பொ.த. உயர்தர வகுப்புத் தமிழ் மாணவ னுக்குக் கூட நன்னூல் என்ற இலக்கண நூல் இருக்கிறது என்ற விவகாரம் தெரியாமற்கூட இருந்தாலும் ஆச்சரியப்பட மாட்டேன். ஆனால் ஐம்பதாண்டுகளுக்கு முன்னே என் மாணவப் பருவத்தில் பாடசாலைகளில் எல்லாம் இலக்கணத் திற்காக நன்னூல் கற்பிக்கப்பட்டது.

நன்னூல் சிறப்புப் பாயிரம், நன்னூல் எழுதப்பட்ட நோக்கத்தையும் தமிழ் வழங்கும் நாட்டையும் அழகுபடச் சொல்கிறது.

கிழக்கே கீழ்கடலையும், தெற்கே கன்யாகுமரியையும், மேற்கே குடக நாட்டையும், வடக்கே திருவேங்கடத்தையும் எல்லையாகவுடைய நிலத்து மொழியாகிய தமிழ்ப் பாடையி னுள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணத்தையும், இலக்கியப் பயிற்சியின் வலியவரேயன்றி, எளியவரும் அறியும் பொருட்டுத் தொகுத்தும், வகுத்தும் விரித்தும் செய்யப்படும் யாப்பினாற் செய்து தருக எனச் சீயகங்கன் சொல்லத் தொல்லாசிரியர் நூலின் வழியே நன்னூல் என்னும் பெயரினாற் செய்தவன் பவணந்திமுனிவன் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பவணந்தி முனிவர் தமது நன்னூலில் எழுத்து, சொல் என்ற இரண்டோடும் அமைந்து கொண்டு பொருள் யாப்பு அணி என்ற மூன்றையும் விட்டுவிட்டார். இலக்கியப் பயிற்சியற்ற எளியோர்க்கு பிந்திய மூன்றும் தேவையில்லை எனக் கருதியிருக்கலாம்.

இலக்கியப் பயிற்சியற்ற நாங்கள் ஐந்தாம் வகுப்பிலேயே நன்னூலில் எழுத்ததிகாரத்தைக் கற்றுவிட்டோம். குறில், நெடில் இனவெழுத்து எழுத்துகள் பிறக்கும் இடம், குற்றியலுகரம், பகுதி, விகுதி, இடைநிலை, சாரிகை, சந்தி என்று எல்லா வற்றையுமே - சூத்திரங்களை மனனமாக்கிக் கொண்டு படித்துத் தீர்த்தோம்.

ஆறாம் வகுப்பிற் புணரியல் படித்தோம். யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த சிப்பிரியான் பிள்ளை என்பவர்தான் எங்கள் இலக்கணஆசிரியர். கிழவர் பொக்கர் ஐயா என்றுதான் நாங்கள் அவரை அழைப்போம். அந்த மனிதர்க்கு நன்னூல் முழுக்கத் தளதண்ணிப்பாடம் நூலைப் பிரிக்காமலே

மரம் +அடி = மரவடி

மரம் + கிளை = மரக்கிளை

என்று உதாரணங்களைத் தந்து புணர்த்திய பின்னர்

**மவ்வீறொற்றழித்து துயிரீறொப்பவும்**
**வன்மைக் கினமாய்த் திரிபவுமாகும்**

எனச் சூத்திரத்தையும் படிப்பித்தார். இன்றைக்கும் புணரியற் சூத்திரங்கள் எல்லாமே எனக்கு மனனமாகியுள்ளது.

ஆறாம் வகுப்புக்கு மேல் ஏழாம், எட்டாம் வகுப்பு களில் சொல்லதிகாரம் முழுமையுமே படிப்பிக்கப்பட்டாயிற்று. வேற்றுமையுருபுகள், அவற்றின் பொருள் - ஆகுபெயர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைநிலை, வழுவமைதி என்ற எல்லா இலக்கணங்களையுமே நன்னூற் சூத்திரங்களை மனனம் பண்ணியே படித்தோம்.

நன்னூல் தந்த இந்த இலக்கண அறிவு நான் ஆசிரியரான பின்னரும் வளர்ச்சியடைந்தது. 1970 களில் க.பொ.த. உயர்தர வகுப்பிற்குத் தமிழ் இலக்கணமும், இலக்கியமும் படிப்பிக்க நேர்ந்தது.

பேராசிரியர் செல்வநாயகம் அவர்களது தமிழ் இலக்கியச் சரித்திரத்தை நெட்டுருப்பண்ணி, இலக்கணச் சுருக்கத்தை மேலோட்டமாகப் படித்து, கடந்த காலப் பரீட்சை வினாப்பத்திரங்களுக்கு விடையெழுதி இன்னும் சில வினாவிடைப் புத்தகங்களையும் நெட்டுருப் பண்ணினால் தமிழ் இலக்கணம் சித்தியடைந்து விடலாம் என மாணவர்கள் நம்பினர். பரீட்சையிற் சித்தியடைவது மட்டுமே அவர்கள் குறிக்கோள். அதற்கு மேற் தமிழார்வமாவது மண்ணாவது?

இந்த மனோபாவமுடைய மாணவர்களுக்கு நான் நன்னூலையே இலக்கண பாடத்திற்குப் படிப்பித்தேன். ஆரம்பத்தில் சற்றுச் சிரத்தையில்லாதிருந்த மாணவர்கள் பின்னர் மிக்க விருப்போடு தமிழ் இலக்கணத்தை நன்னூலிற் சொல்லப்பட்டவைக்கும், மேலாக இடம் பிடித்துக் கொண்டதை மாணவர்களுக்கு எடுத்துக்காட்டினேன். மிக்க விருப்போடு தமிழ் கற்ற என் மாணவர்கள் பரீட்சையிலும் அதிவிஷேட சித்தி பெற்றுப் பின்னர் கலைமாமணிப் பரீட்சையில் தமிழை விஷேடமாகவும் படித்து ஒனர்ஸ் சித்தியடைந்தார்கள்.

ஆனால் இன்று எந்த மேல்வகுப்பு மாணவனாவது நன்னூலைப் படிக்கிறானா? நன்னூல் என்றொரு இலக்கணநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதென்றாவது மாணவர்களுக்குத் தெரியுமா? எனக்குச் சந்தேகந்தான்.

எல்லாப் புத்தகங்களையும் நாம் நூல் என்றே அழைக்கிறோம். ஆனால் நன்னூல் என்ற பெயர் அந்த இலக்கண நூலுக்கு இடுகுறிப் பெயராகவே அமைந்துவிட்டது. அந் நூலின் பெயர்க் காரணத்தைப் பவணந்தி முனிவர் நன்னூலில் இப்படிக் கூறுகின்றார்.

**பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்**
**செஞ்சொற் புலவனே சேயிழையாய் - எஞ்சாத**

**கையே வாயாகக் கதிரே மதியாக**
**மையிலா நூன் முடியுமாறு**

அதாவது சொற்கள் பஞ்சாகவும், பாடல்கள் இழையாகவும், சொல்லறிந்த புலவன் நூற்கும் பெண்ணாகவும், ஓயாத வாய் கையாகவும், அறிவு கதிராகவும் குற்றமில்லாத கல்வி நூலானது முடியும் வழி இதுவே என்று உருவகிக்கிறார் பவணந்தி முனிவர்.

நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதிய நாவலரும் தம் தமிழ் வண்ணத்தால் உரையையும் செம்மையுற வார்த்துள்ளார்.

பொதுவியலில் பாற்பொதுமை நீங்கி நெறி என்ற தலைப்புக்கு எழுதிய சூத்திரத்துக்கு உரை செய்து உதாரணந் தருகையில்

**ஆயிரம் மக்கள் போர் செய்யப் போயினார்**
**என்புழி, மக்களென்னும் உயர்திணை**

ஆண், பெண் இருபாற்கும் பொதுப் பெயரும், போயினார் என்னும் உயர்திணை ஆண், பெண் இருபாலர்க்கும் பொது வினையும் போர் செயலெனும் குறிப்பினாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பாலை ஒழித்தன என்கிறார் உரைகாரர்.

அந்த உரையினை இன்று படித்தாலும் எனக்குப் புளகாங்கிதம் ஏற்படுகின்றது.

ஆனால் இப்போது நன்னூல் படிப்பவர் எவருமில்லையே. நான் நன்னூலைப் படிப்பது பற்றி எழுதுவது காலத்திற்குப் பொருந்தாத 'அனார்க்ரோனிசம்' ஆகவும் இருக்கக்கூடும். எனக்கு இப்போதெல்லாம் ஒரு ஆசை. நன்னூலைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருக்கும் ஒரு உயர்தர வகுப்பு மாணவனை என் கண்களாற் காண வேண்டும். அவ்வளவுதான்.

அப்படிப் படிக்கிறவர்கள் இருந்தால் எனக்குக் காட்டுவீர்களா?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மீன்

**தகழி** சிவசங்கரப்பிள்ளையைத் தெரியாத தமிழ் வாசகன் இருக்கவே மாட்டான் என்பது எனது நம்பிக்கை. ஆகக் குறைந்தது அன்னாரது செம்மீன் என்ற நாவலில்லாவிட்டாலும் செம்மீன் திரைப்படத்தையாவது பார்த்திருப்பார்கள்.

தகழியின் பல சிறுகதைகளையும், நாவல்களையும் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் மூலம் படித்திருந்தாலும் அவை களெல்லாவற்றையும்விடச் செம்மீனே எனக்கு மிகவும் பிடித்தமானது.

செம்மீன் ஒரு காதல் கதை. தகழியின் பல கதைகளில் ஆண், பெண் உறவுகள் சித்திரிக்கப் பட்டிருப்பினும் செம்மீன் மட்டும்தான் ஒரு காதற்கதை!

தகழிக்கு முப்பத்தெட்டு வயதாக இருந்தபோது எழுத் தாளர் கேசவதேவ் தகழியிடம் உனக்கு உன்னுடைய மனைவி யின் காதலனாவதற்குக் கூட முடியாது. ஒருபோதும் உன்னால் ஒரு காதற்கதையை எழுதவும் முடியாது என்று கேலியாகச் சொன்னாராம்.

இதைத் தகழி ஓர சவாலாக எடுத்துக் கொண்டாரோ என்னவோ ஆனால் இரண்டு வருடங்களின் பின்னர் தனது நாற்பதாம் வயதில் எழுதிய நாவல்தான் செம்மீன். அது ஒரு துன்பியற் காதற்கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதற்கதை என்றால் கல்யாணமாகாத ஆண் பெண் இருவரிடையே ஏற்படும் மன உணர்வுகள் மட்டுந்தான் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் நமது எதிர்பார்ப்பு. காலங்காலமாக நம்முள் நாம் வளர்த்துக் கொண்ட பண்பாட்டுக் கோலம் அப்படி!

கல்யாணமானவர்களும் கூடத் தங்கள் கல்யாணத்தின் பின்னால் கணவன் அல்லது மனைவியை விடவும் வேறு மூன்றாவது நபரைக் காதலிப்பதாக எழுதுவது மேல்நாட்டு நாவல்களில் மிகவும் தாராளமாக இடம் பெறுகின்றது. நம்மவரைப் பொறுத்தவரையில் அது விரஸமானது என்றே கருதப்படும். தி. ஜானகிராமனின் நாவல்களில் இத்தகைய விரசட் இருப்பதாகத் தமிழ் வாசகர்கள் பலர் முகஞ்சுழித்துக் கொள்வதை நான் அறிவேன்.

தகழியின் செம்மீனிலும் இத்தகைய காதல் வருகிற தாயினும் அதை விரஸமென எவரும் சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் அந்த நாவலைப் படித்தாலும் கருத்தம்மா பழனியை மணமுடித்த பின்னரும் பரீக்குட்டியின் மேற் காதலாகவுள்ளது நம்மால் ஒப்புக்கொள்ளக் கூடிய தூய காதல்தான் என்றே சொல்லுமளவிற்கு தகழி மிக லாவகமாகக் கதையை வளர்த்துச் செல்கிறார். செம்பன் குஞ்சு, அவனுடைய மனைவி சக்கி, மகள்கள் கறுத்தம்மா, பஞ்சமி, கறுத்தம்மாவின் காதலன் பரீக்குட்டி, அவளது கணவன் பழனி என்போர் முக்கியமான கதாபாத்திரங்கள், கறுத்தம்மாவும் பரீக்குட்டியும் தான் கதாநாயகியும் நாயகனும். ஆலப்புழைக்குத் தெற்கே, நீர்க்குன்னம் கடற்கரைதான் கதைக்களம்.

தகழி தொழிலால் சட்டத்தரணி ஆனாலும், உள்ளத்தாலும் மரபாலும் விவசாயி. தன்னைக் குட்டநாட்டு விவசாயி என்று சொல்லிக்கொள்வதிற் பெருமைப்படுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பிராந்தியமான மலையாளக் குட்டநாடு நீர்வளம் கூடியது. திருவனந்தபுரத்திலிருந்து பஸ் ஏறினால் இரண்டரை மணிநேரப் பயணத்தில் அம்பலப்புழையை அடையலாம். ஆலப்புழையிலிருந்து தகழிக்கு அடிக்கடி பஸ் உண்டு. சுமார் ஏழு கிலோ தூரத்திற்தான் தகழி உள்ளது. தகழியில் ரெயில்வே கேட்டின் அருகாமையில் தகழியின் சங்கர மங்கலம் என்ற வீடு நாட்டோடு வேய்ந்த பழங்காலத்து மலையாள வீடு.

திருவனந்தபுரத்திலிருந்து சென்ற ஆண்டு நான் தகழியைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். நான் அறிவித்து விட்டுச் செல்லவில்லை. நான் அவர் வீட்டை அடந்தபோது தகழி வெளியூர் சென்றிருந்தார். அந்தக் கதை இருக்கட்டும்.

குட்ட நாட்டிலே தகழியைச் சேட்டன் என்றே எல்லாரும் அழைக்கிறார்கள். மக்கள் அத்தனை மரியாதை செய்கிறார்கள் அவருக்கு! காதலே பண்ணத் தெரியாத அந்தச் சேட்டன் தன் நாற்பதாம் வயதில் எழுதிய காதற்கதைதான் செம்மீன். விவசாயி எழுதிய கடற்கரைக் கதை!

செம்பவன் குஞ்சுவின் மகள் கறுத்தம்மா, பால்ய வயதில் மீன் வியாபாரியாகக் கடற்கரைக்கு வரும் பரீக்குட்டியுடன் பழகுகிறாள். இருவருக்கும் நட்பு வளர்கிறது. ஆனால் பருவ மடைந்ததும் தந்தை, கறுத்தம்மாவை அடுத்த ஊரவனான பழனி என்ற மீனவனுக்கு மணம் முடித்து வைக்கிறார். மணமான பின்னர் கறுத்தம்மாவும் கணவன் வீட்டுக்குப் போகிறாள். பரீக் குட்டியும் அவளைக் கணவன் வீட்டுக்கு வழியனுப்பி வைக்கிறான். ஆனால் அவள் கணவன் வீடு சென்ற பின்னும் காதல் தொடர்கிறது. அது விபசாரம் என்ற அளவிற்குப் போகவில்லை. உடற் தொடர்பே கிடையாது. ஆனாலும் கடற்கரையிலிருந்து பரீக்குட்டியும் கறுத்தம்மாவும் ஒருவருக்காக ஒருவர் ஏங்குவது மிக அழகாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டிருக்கிறது. மதம், சமூகக் கட்டுப்பாடுகள் என்ற பிணைப்புகளுக்கும் அப்பால் அவர்களிருவரது காதலையும் மானஸீகமாக வளர்த்திருப்பதுதான் தகழி சிவசங்கரப் பிள்ளையின் வெற்றி என்று எனக்குத் தோன்றுகிறது. கரையிலிருக்கும் மீனவப் பெண்ணின் கற்புநெறிதான் கடலிலே செல்லும் மீனவர்களைப் பத்திரமாகக் கரை கொண்டு வந்து சேர்க்கும் என்ற மீனவ மக்களின் நம்பிக்கையும் கதைக்குத் தூய்மையான காதலையும் அக்காதலர்களின் ஏக்கத்தையும் தகழி தன் நாவலிற் கொண்டு வந்ததுபோல படத்திலே கொண்டு வரப்படவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

தகழியின் இன்னோர் சிறுகதையும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. சாகஸம் என்ற அச் சிறுகதையில் மாதவிதான் பாத்திரம். அப்பாத்திரம் சிறுவயதிலிருந்தே தகழியோடு (தன்மையில் அக்கதை எழுதப்பட்டது) அவன் முதுகில் குதிரை விட்டுப் பழகுகிறாள். மிக நெருக்கமாக அவனோடு வாழ்கிறாள். அவன் மேற்படிப்புக்காக வெளியூர் செல்கிறான். மீண்டும் ஊருக்கு வருகையில் மாதவி பருவப் பெண்ணாய் வனப்போடு பூரித்து நிற்கிறாள். அவன் மனம் குழம்புகிறது. தன் வீட்டில் இருந்தபடியே அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருக்கிறான். ஒருநாள் அவள் குளித்து விட்டு ஈர உடையுடன் வருகிறாள். அவளின் அழகு அவன் மனதை அலைக்கழிக்க அவன் அவளை நெருங்க வேண்டி வேகமாக நடந்து வருகிறான். அவள் சௌந்தர்யம் அவனை மயக்குகிறது. வேகமாக வந்தவன் அவளை நெருங்கியபோது அவள் வீட்டுக்குட் சென்றவள் உடை மாற்றி வந்து "எப்பண்ணா வந்தீங்க" என்று கேட்கிறாள்.

என்றாலும் அன்றிரவு விளக்கு வைக்கும் நேரத்தில் அவள் அறைக்குட் சென்று ஒளிந்து, கையைப் பிடித்துக் கொள்கிறான். அவள் "நீங்க என்னைத் தூக்கி விளையாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன்தான். என் உடன் பிறப்பாகத்தான் கருதினீங்க. இது அம்மாக்குத் தெரிஞ்சுட்டா, நெனச்சுப் பாருங்கண்ணே என்கிறாள்."

அவள் உபதேசத்தில் அவன் வெளியே ஓடி வந்து விட்டான்! என்று முடிவு பெறும் சாகஸமும் என்னைக் கவர்ந்த கதையே!

தகழியின் ஏராளமான சிறுகதைகளையும் செம்மீன், ஏணிப்படிகள் தோட் டியுடெ மகன், ரண்டிடங்கழி, பதித பங்கஜம் ஒசேப்பின்ட மகன் ஆகிய நாவல்களையும் படித்திருக்கிறேன்.

கயறு என்ற நாவலையும் எழுதியுள்ளாராம் தகழி. 900 பக்கங்களுக்கு மேலே நூற்றி முப்பத்தொன்பது அத்தியாயங் கள் உள்ள அந்நாவலை இன்னமும் படிக்கவில்லை. குட்ட நாட்டின் நீண்டகாலக் கதையைக் கட்டங் கட்டமாக எழுதி யிருப்பதாக அறிகிறேன். திருவனந்தபுரத்துச் சர்வகலா சாலையைச் சேர்ந்த டக்ரர் அய்யப்பப் பணிக்கரின் விமர்சனம் மூலமே இவை தெரிய வந்தது.

அந்த நாவலைப்படிக்க வேண்டும் என்பது என் ஆசை. திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை நூல் நிலையங் களிலும் புத்தகக் கடைகளிலும் அந்நூலைக் காணவில்லை. வேறெங்காவது தேடிப்பிடித்துப் படிக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். இலக்கிய அன்பர்கள் நூல் கிடைக்கு மிடத்தைத் தெரிவிப்பார்களா?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள நாவல்

**ஈழத்தின்** இனப்பிரச்சினை தொடர்பான வகுப்புக் கலவரங்களும், உள்நாட்டுப் போரும் லங்காராணி என்ற அருளரின் நாவல் தொடக்கம் சில நாவல்கள் உருவாக்க வழி சமைத்தது. நாவல்கள் மட்டுமல்ல பல சிறுகதைகளும் எழுதப்பட்டன.

தமிழராகிய நாம் மட்டும் ஈழப் பிரச்சினை பற்றிச் சிந்திக்கிறோம் என்று எண்ணிவிடக் கூடாது. மனிதாபிமான முள்ள நமது சிங்களச் சகோதர எழுத்தாளர்களும் யுத்தத்தின் கோரத்தைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்து நாவல்களும் சிறு கதைகளும் எழுதியிருக்கிறார்கள்.

சிங்கள மொழி நம்மிற் பலருக்குத் தெரியாததினால் நாம் அவைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

சமீபத்தில் சந்திரா பண்டார என்ற சிங்கள நாவலாசிரியர் எழுதிய வனசப்பு மாலா என்ற நாவலை 'பணய நகர்' (HOSTAGE CITY) என்ற தலைப்பிலான ஆங்கில மொழி பெயர்ப்பு மூலம் படிக்க நேர்ந்தது.

டிஆர். விஜயவர்தனா ஞாபகார்த்தப் பரிசுப் போட்டியில் 1991 ஆம் ஆண்டிற் பரிசு பெற்ற அந்த நாவலான வனசப்பு மாலா. ஸ்ரீலங்கா - கனடா அபிவிருத்தி நிதியுதவியுடன் விஜிதா பெர்னாண்டோ என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மொழி பெயர்ப்புக்கான முன்னுரையில் மூல ஆசிரியரான சந்திரா பண்டார அவர்கள் "நமது இளைஞர்கள மனிதாபிமானமற்ற சம்பங்களை நாளாந்தம் அனுபவித்துக் கொண்டிருப்பதற்கு முற்பிறவியில் நாம் என்ன பாவஞ் செய்தோமோ என நான் கவல்கிறேன்.

"இலங்கையில் உள்நாட்டுப் போர் தொடங்கி ஒரு தசாப்தம் கழிந்துவிட்டது. அந்த யுத்தம் எண்ணிக்கையற்ற ஆண்களையும் பெண்களையும் வீரமுள்ள படைவீரரையும் அவர்களின் எதிரிகளாகக் கருதப்பட்டவர்களையும் கொன்று ஒழித்துவிட்டது. பெற்றோரையும் ஆண், பெண் பாலாரான பிள்ளைகளையும் தங்கள் அன்பிற்குரியவர்களையும் இழந்த மைக்காக அழ வைத்துவிட்டது. யுத்தத்தை ஆதரிப்பவர்கள் அதன் வீரப்பிரதாபத்தையே விரும்புகின்றார்களேயொழிய யுத்தத்தின் பின்னாலுள்ள அழிவுகளைப் பொருட்படுத்துவதே இல்லை."

"யுத்தம் நமது சமூக, பொருளாதார, ராஜியக் கட்டுக் கோப்புகளையும் நமது மனிதாபிமானத்தையும் வாழ்க்கை விழுமியங்களையும் கொன்றுவிட்டது."

"வடக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் சரியா பிழையா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஏனென்றால் நான் அரசியல்வாதியல்ல. யுத்தத்தின் காரணமாக முகிழ்த்துவரும் மனித குலத்தின் அழுகையையும், அவலங்களையுமே நான் எழுத முனைகின்றேன். ஒரு கலைஞனால் அதைத்தான் செய்யமுடியும்... என்று குறிப்பிடுகிறேன்."

இனி நாவலுக்குச் செல்வோம். கொண்டச்சி கோவில் என்ற கிராமத்திலிருந்து கிளர்ச்சிக்காரர்களின் தளம் படையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரால் அழிக்கப்பட கொண்டச்சி கோவிலைச் சேர்ந்த ஊரவர்கள் எல்லாரும் அங்கிருந்து வலசை வாங்கி பாடசாலைக்கு அகதிகளாகி வருகின்றனர். அப்படி அகதியாக வந்தவர்களில் காஸ்ட்ரோவும் ஒருவன். அவன் தன் தாயோடு வந்திருந்தான்.

அகதிமுகாமின் சன நெருக்கடியையும் இயற்கைக் கடன்களைக் கழிக்கக்கூடிய வசதிகளின்மையையும், குளிப்பதற்குத் தண்ணீர் கிடையாமையையும் அதன் காரணமாக அம்முகாமில் எழுந்த நாற்றத்தையும் ஆசிரியர் வர்ணித்திருப்பதைப் பார்த்தால் ஒருகாலத்தில் அகதி முகாமிலிருந்த எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

முகாமிற்கு வந்த கதாநாயகனான காஸ்ட்ரோ சர்வகலாசாலை மாணவனாக இருந்தவன். அவனுடைய தந்தையாரான ஆறுமுகம் வேலாயுதம், தன் பேத்தியாரின் அரவணைப்பிற் கொழும்பில் வளர்ந்தவர். வெஸ்லிக் கல்லூரியில் படித்தவர். யாழ்ப்பாணத்துச் சராசரி மனிதனை விடப் பல விடயங்களில் முற்போக்கானவர். வாலிப வயதிலே கொம்யூனிஸ்ற் தத்துவங்களைக் கற்றுக் கொம்யூனிஸ்ட்ராகவே வாழ்ந்த அவர் தன் பிள்ளைகளுக்கு காஸ்ட்ரோ, லெனின், றோசா என்று கொம்யூனிசத் தலைவர்களின் பெயரையே சூட்டினார். ஆனால் என்னதான் முற்போக்காளராகவும் சுயதொழில் செய்து ஓரளவு பணக்காரராகவும் இருந்தாலும் யாழ்ப்பாணத்து வெள்ளாள சமூகம் அவரைப் பொருட்படுத்தவில்லை.

வேலாயுதம் இறந்த பின் மூத்தவனான லெனினும் இறந்துவிட்டான். றோசா வெளிநாடு சென்று ஐரோப்பிய நாடொன்றில் வசதியாக வாழ்கிறாள். கிராமம் தாக்கப்பட காஸ்ட்ரோ தன் தாயாருடன் அகதிமுகாமுக்கு வருகிறான்.

இட நெருக்கடியும் பல வசதியீனங்களும் இருப்பினும் அகதி முகாமிலே திருட்டு நடக்கிறது. கஞ்சா போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப் பொருட்களும் புழங்குகின்றன. ஆளுக்காள் கோள் மூட்டலும் நடக்கிறது. முல்லர் என்றவனின் கோள் காரணமாக காஸ்ட்ரோ படையினராற் சந்தேகிக்கப்படுகின்றான். ஆனால் விசாரணை நடத்திய படையதிகாரியினால் காஸ்ட்ரோவிற் குற்றங்காண முடியவில்லை. விடுவிக்கப்பட்டாலும் தாயாருக்கு இது மனக்கவலையைக் கொடுக்க அவளுக்கிருந்த நோய் முற்றுகிறது. நோய் முற்றிய நிலையில் அவள் படையினரால் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படுகிறாள். விசாரணையின் பின்னர் வந்த காஸ்ட்ரோ தாயைப் பற்றிய செய்திகளைக் கேள்விப்பட்டுக் கலங்குகிறான். தன் தாயை எப்படியாவது காணவேண்டும் என்ற ஆவலில் அகதி முகாமை விட்டு ஒளித்து ஓடுகிறான். காட்டு வழியே செல்கை யில் புலிகளிடம் பிடிபடுகிறான். புலிகள் அவனை விசாரிக் கின்றனர். அவன் சொல்வது உண்மை எனக் கண்டு புலிகளே அவனை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கின்றனர்.

ஆனால் அவன் யாழ்ப்பாணம் வைத்தியசாலையை அடைந்தபோது தன் தாயார் இறந்துவிட்ட செய்தியைத்தான் அவன் கேட்டான். மனங்கலங்கிய அவனால் மேலே என்ன செய்வது? எங்கு போவது? என்பதே அர்த்தமாகவில்லை. புலி களுடன் சேர்வதைத் தவிர வேறுவழியே இல்லைப் போலத் தோன்றுகிறது. இளைஞனை அவன் மன அரங்கில் பாட சாலைக் காதலியும் அடிக்கடி தோன்றித் தொல்லை கொடுக்கிறாள். அவளும் இப்போது வெளிநாட்டில்!

தாய் இறந்ததைக் கேள்வியுற்ற வெளிநாட்டு மகள் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் தம்பி காஸ்ட்ரோவைச் சந்திக்கிறாள். தன்னுடன் வெளிநாடு போக வரும்படி அவனை அழைக்கிறாள். வந்தால் தன் காதலியை மணம் முடிக்கலாம் என்றும் ஆசையைத் தூண்டுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாற் காஸ்ட்ரோ எப்படிப் புலிகளை விட்டுப் போக முடியும்?

அலுத்துப்போன அக்கா றோசா. நான் இன்னும் இரண்டு மாதங்கள் கொழும்பில் நிற்பேன். அதற்குள் ஒரு முடிவெடுத்துக் கொண்டு என்னுடன் வெளிநாட்டுக்கு வா என்று கூறி விட்டுக் கொழும்பு செல்கிறாள்.

மேலும் கதை தொடர்கிறது.

அகதி முகாமின் கோரங்களையும், யுத்தத்தின் அவலங்களையும் புலிப்போராளிகளின் லட்சிய நோக்கையும், அவர்களது தீரத்தையும் நாவல் மிக அழகாகச் சொல்கிறது. ஒரு சிங்கள நண்பர் கிளிநொச்சி வட்டார அகதி முகாமையும், யாழ்ப்பாண மக்களின் யுத்தகால வாழ்க்கையையும் எத்தனை தத்ரூபமாகச் சித்திரித்துள்ளார் என்பது வியப்பாகவே இருக்கிறது.

சமீபத்தில் நான் மிகவும் ரசித்துப் படித்த வனசப்பு மாலாவை HOSTAGE CITY என்ற அதன் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது என் ஆசை.

மூல ஆசிரியர் சந்திரா பண்டாரவிற்கு அதற்கு அனுமதி கேட்டுக் கடிதம் எழுதியுள்ளேன். அனுமதி கிடைத்ததும் அந்த நாவலைத் தமிழில் மொழிபெயர்ப்பேன். தமிழ் வாசகர்களும் அந்நாவலைப் படிக்க வேண்டும் என்பது என் ஆசை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பிய முல்லை

**மகாகவி** பாரதி வயது பதினாறிருக்கும் இளவயது மங்கையை அழகுத் தெய்வமாகக் கண்டு பரவசித்துப் பாடுகிறான். மனிதப் பருவத்தில் பதினாறு வயது ஒரு முக்கியமான வயதுதான்.

இந்த வயதில் இளைஞர்களின் உடலிலும் உள்ளத்திலும் பல்வேறு மாற்றங்கள் நிகழும். அவர்களின் உதட்டுக்கு மேலே பூனை மயிராக மீசை அரும்பும், குரல் உடைந்து குமரப் பருவம் வந்துவிட்டதைப் பறைசாற்றும்.

உள்ளத்தில் எத்தனையோ சிருங்கார நினைவுகள் எழும். பாலியல் சம்பந்தமான நினைவுகள் மனதிலே தோன்றும். 'அப்போன்' படங்களுடன் கூடிய பெரிய எழுத்து கொக்கோக நூல்களை (அவைகள் எல்லாவற்றையுமே அதிவீரராம பாண்டியன்தான் எழுதினான் என அவற்றின் முன்னட்டை அடித்துச் சொல்லும்) எங்காவது மறைவிடத்துக்குக் கொண்டு சென்று வாசிக்கத் தூண்டும் இந்த 'அடொலோ சென்ஸ்' பருவத்தில் இளைஞர்கள் பல்வேறு நாகரீகமற்றதான செயல்களில் ஈடுபடுவதும் உண்டு.

ஆனால் சூழ்நிலையையும் மனவளத்தையும் பொறுத்து இந்தப் பருவத்திலே பலர் கவிஞர்களாகவும் எழுத்தாளர் களாகவும் மாறியதுண்டு. மகாகவி அல்லாமா இக்பால் தன் பதினாறாம் வயதிலேயே கவியரங்குகளிற் கவிபாடிப் புகழ் பெற்றார். புகழ் பெற்ற இந்தியச் சுதந்திரப் போராளியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தன் பதினான்காம் வயதிலேயே அல்ஹிலால் என்ற பத்திரிகையை ஆரம்பித்து அந்நியரான பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கெதிராகப் புரட்சி செய்தாராம். ஏன் இந்த வயதிலேதான் நமது சிறுவர்களும், நாட்டு நடப்புகளின் வேதனைகளால் மனந்திரிந்து எவருக்குந் தெரியாமலே புரட்சிக் குழுக்களிற் சேர்ந்து கொள்கின்றனர் என்பதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம்.

ஆனால் இந்த வயதிலே இளைஞர்கள் சரியான வழிக்குத் திருப்பி விடப்பட்டால் அவர்கள் சிறந்த கவிஞராகவோ, தத்துவ மேதையாகவோ, விஞ்ஞானியாகவோ, சைத்ரீகனாகவோ ஆகலாம். இந்த வயதிலேதான் இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாரின் மகன் தீத்தாரப்ப முதலியார் சிறந்த கவிஞராகவும் எழுத்தாளராகவும் ஆனார்.

டி.கே.சி. தமிழின் மிகமிக உன்னதமான ரசிகர். தமிழ் பிறந்த பொதிகை மலைச்சாரலில் அதன் அழகை ரசித்துக் கொண்டே இலக்கிய வட்டம் நடத்தியவர். எழுத்தாளப் பெருமக்களும், கவிஞர்களும், தமிழறிஞர்களும் கூடிய திருக்குற்றால இலக்கிய வட்டத்தில் கம்பனை ஆற அமரப் படித்தவர். கம்பன் காவியத்திலுள்ள இடைச்செருகல்களை யெல்லாம் கண்டு பிடித்து நீக்கிய மாமேதை டிகே.சி.

அந்த மாமேதையின் தமிழ் உள்ளமும் 'பக்கம் வாழைப் பாய் கனியோடு பலவின்தேன் கொக்கின்கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்' என்று திருஞான சம்பந்தராற் பாடப்பெற்ற குற்றாலமலையின் வனப்பும் வளமும் டி.கே.சி. யின் மகனது உள்ளத்திலும் படிந்து கிளர்ச்சியை ஊட்டியிருக்கும். தனது பதினாறாம் வயதிலேயே அந்தக் கிளர்ச்சியினால் உந்தப்பெற்ற தீத்தாரப்ப முதலியார் கவிதை - கதை - கட்டுரை என எழுதத் தொடங்கிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அன்னார் எழுதத் தொடங்கி ஓரிரு ஆண்டு களிலேயே காலமாகிவிட்டது நமது அவப்பேறு!

அன்னாரது கதை - கவிதை - கட்டுரை அடங்கிய நூல் அரும்பிய முல்லை என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. 1948 இல் நான் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையிற் படித்துக் கொண்டிருந்தபோது அரும்பிய முல்லையை மட்டக்களப்பு புத்தகக் கடை ஒன்றிலிருந்து வாங்கி ரசித்துப் படித்தேன்.

நூலாசிரியரான தீத்தாரப்ப முதலியார் அகாலத்தில் மரணமானதுபோல எனது அரும்பிய முல்லையையும் தீயுண்டுவிட்டது! ஆனால் அந்நூல் பற்றிய நினைவு இன்றும் என்னுள்ளே பசுமையாக இருக்கிறது. அந்நூலிலே சுந்தரி என்ற ஒரு சிறுகதை.

வாலைப் பருவத்தினளான அவள் தன் பித்தளைக் குடத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நாட்காலையிலும் குளத்தங்கரைக்கு வருகிறாள். புளியும் சாம்பலும் போட்டு அப் பித்தளைக் குடத்தை, அக்குடத்திலே தன் முகம் தெளிவாகத் தெரியும்வரை விளக்குகிறாள். அவள் குடத்தை விளக்கிக் கொண்டிருப்பதைத் தன் வீட்டிலிருந்தவாறே ஓர் இளைஞன் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஒவ்வொரு நாளும் அப்படிப் பார்த்துக் கொண்டிருப்பது அவனக்கு இன்பந்தரும் பொழுதுபோக்கு!

ஒரு நாள் அவள் குளத்தங்கரைக்கு வரவில்லை!

அதற்கடுத்த நாளும் வரவில்லை!

இப்படியாக அங்கலாய்க்கும் ஆசிரியர் இனிமேல் அவள் குளத்தங்கரைக்கு வரவே மாட்டாள்! என்பதை அறுதியிட்டுச் செல்லிவிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், அவள் பெரிய மனுஷியாகி விட்டாள். அதனால் அவள் இனிவரமாட்டாள் என்பதை நமக்குச் சொல்லாமற் சொல்லிவிடுகிறார் ஆசிரியர்.

சிங்கார ரஸம் சொட்டும் அச்சிறுகதையை மீண்டும் படிக்க வேண்டும் போலிருக்கிறது. எனக்கு மேலே அரும்பிய முல்லையிலிருந்து ஒரு கவிதையையும் பார்ப்போம்.

அந்தக் கவிதையின் தலைப்பை மறந்துவிட்டேன். ஆனாற் தழுவற் சுகத்தை அனுபவிக்க விழையும் ஓர் இளைஞனின் உள்ளத் துடிப்பு அக்கவிதையிற் தெரிகிறது. அக்கவிஞன் பாடுகிறான்.

**காதிலூசலாடுமந்தக்-**
**கர்ண குழையாகேனோ**
**கோதிவிட்ட குழலுமாகிக்**
**கன்னந் தொட்டுக் களியேனோ**
**மார்புடனே விம்மி விம்மி**
**மகிழ்ந்தசைந்தே இன்பமுற**
**மார்பிலணி அந்த முத்து**
**மணியார மாகேனோ**

இப்படியாக இளம் பெண் அணிந்திருக்கும் நகைகளி லொன்றாக நான் இருக்க மாட்டேனோ என அக்கவிஞன் 'வேங்கடபுரத்து மீனாகமாட்டேனோ' என்று பாடும் ஆழ்வாரைப் போலப் பரவசத்தோடு பாடுகிறான்.

சிருங்காரம் மட்டுமல்ல வேறு வேறு உணர்வுகளையும் பொருள்களையும் அவன் பாடியுள்ளான்.

**சூரியோதயத்தைப் பாருங்கடி - அதன்**
**சோதியில் மனமும் சேருங்கடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிதியிலே ஒரு சூரியகாந்தி
மலர்ந்து வருவதைப் பாருங்கடி

என்று சூரியோதயத்திற் கும்மி பாடிய கவிஞன் அக்கும்மிக் கடைசிக் கண்ணியை

கட்டுமரம் ஒன்று தோணுதடி - அது
கதிரவனை முட்டப்போகுதடி - கை
கொட்டி அதனை நிறுத்துங்கடி - அது
முட்டி விட்டாற் பெரும் மோசமடி

என்ற அங்கலாய்ப்போடு முடிக்கிறான். கடற்கரையில் நின்று சூரியோதயத்தைப் பார்த்தவர்களுக்கு அந்த அங்கலாய்ப்பு விளங்கும்!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் ரசித்த அந்த அரும்பிய முல்லையை, (அது என்னிடமிருந்து எரிந்தபிறகு) எங்குமே காணவில்லை. ஆனாலும் அந்நூலை மீண்டும் ஒருதரம் படிக்க வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்யப் பிரபந்தம்

**தமிழிலே** பக்தி இலக்கியங்கள் மிக அதிகமாகவே உள்ளன. தமிழ் இரக்கத்தின் மொழி என்கிறார் சுவாமி தனிநாயக அடிகளார். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரின் தேவாரங்களும், மாணிக்கவாசகரின் திருவாசகமும் மனத்தைக் கொள்ளை கொள்ள வல்லன. அம்மையே அப்பா ஒப்பிலாமணியே என்று திருவாசகத்தைப் பாடி உருகாத தமிழனே இருக்க முடியாது. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனுடைய வண்ணங் கேட்டாள்' என்று திருத்தாண்டகம் ஒரு அருமையான காதற் பாட்டு. தேவாரங் களில் வரும் இயற்கை வருணனைகளும் கூட மனத்தைக் கொள்ளை கொள்வனதான்.

இந்தத் தேவார திருவாசகங்களுக்கும் மேலாக திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமூல நாயனாரின் திரு மந்திரம், சேரமான் பெருமானாயனாரின், கபில தேவநாயகனார், நக்கீரர் முதலியோரின் பாடல்கள் ஒன்பதாம், பத்தாம், பதினோராம் திருமுறைகளாகவும் இறுதியாகப் பன்னிரண்டாம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டுத் தமிழ் இலக்கியத்தின் பக்தி நூல்கள் தமிழராய நாம் எல்லாரும் பெருமைப்படு மளவுக்குப் பெருகியுள்ளன. இவைகளுக்கும் மேலாக அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தரலங்காரம் ஆகியவையும் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பக்தி இலக்கியங்களிற் கணிசமான பாடல்கள் நமது மாணவர்கள் எல்லாருக்குமே தெரியும். தேவார பாராயணத்துடனேதான் அதிகமாக தமிழ்ப் பாடசாலைகள் தொடங்குகின்றன.

ஆனால் இந்தப் பன்னிரண்டு திருமுறைகளும் அதற்கும் மேலாக நாம் பாடிப் பரவசப்படும் பக்திப் பாடல்களும் சிவனாரோடு தொடர்புடையவை. சைவ சமயத்தைச் சார்ந்தவையே. சிவபக்தனான இராவணனின் வழிவந்தவர்களாய நாம் ஆண்டாண்டு காலமாகச் சிவபக்தர் களாகவே வாழ்ந்து விட்டோம். சிவனாரையே நாம் பாடித் துதிக்கிறோம். கந்தரலங்காரமும் திருப்புகழும் சிவனாரது மகனான முருகனைப் புகழ்கின்றன.

ஆனால் தமிழ் சைவசமயத்தவருக்கு மட்டுமே உரித்தானதல்ல. சைவமும் தமிழும் என்று அடித்துப் பேசுபவரைக் கண்டால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. ஏனென்றால் தமிழில் சைவ இலக்கியங்கள் மட்டுமல்ல, ஜைன, பௌத்த, வைஷ்ணவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களு முண்டு. தேவார திருவாசகங்களில் துய்த்துத் திளைக்கும் நம் நாட்டுத் தமிழர்களுக்கு, தேவார திருவாசகங்களுக்கு இணையானதான அருமையான பக்தி இலக்கியம் வைஷ்ணவத்திலும் உண்டு என்ற பிரக்ஞையே இருப்பதில்லை.

மார்கழி மாதத்தில் மாணிக்கவாசகரின் திருவெம் பாவையைப் பாடி பங்கயப் பூம்புனலாடும் பக்தர்கள் ஆண்டாள் பாடிய திருப்பாவையைப் பொருட்படுத்துவ தில்லை. அதேபோலவே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார் நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பன்னிரு ஆழ்வார்களும் பாடிய பாசுரங்களும் நம்மிற் பலருக்குத் தெரியாது!

எடுத்த எடுப்பிலேயே என்னைக் கவர்ந்தவர் சூட்டிக் கொடுத்த சுடர்கொடி எனப் போற்றப்படும் ஆண்டாள்தான். ஆண்டாளுக்கு கிருஷ்ணனைத் தழுவிக் கொள்ள ஆசை, முடியவில்லை. கிருஷ்ணன் ஊதும் வெண்சங்கிடம் கேட்கிறாள்,

**கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ**
**மருப்பொசித்த மாயவன்தன் வாயிதழும் பல்முத்தும்**
**விருப்புற்றுக் கேட்கிறேன் கூறாய் நீ வெண்சங்கே!**

சங்கே! கிருஷ்ணனின் வாய் கருப்பூரம் போல மணக்குமா? தாமரைப் பூ மணத்தைத் தருமா? அவனுடைய செவ்வாய் இனித்திருக்குமா? அதன் இதழ்களும் பல்லும் என்ன சுவையைத் தந்தன. அதை எனக்குச் சொல்வாயா என்று இரக்கிறாள் காதல் வயப்பட்ட ஆண்டாள்.

காதல் வயப்பட்ட ஆண்டாள், மதுசூதனனாகிய கிருஷ்ணன் வந்து தன்னை மணமேடையிற் கைப்பிடிப்பதாகக் கனவு காணும் பாடல்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. அவள் பாடுகிறாள்.

**வாரணமாயிரம் சூழவலம் வந்து**
**நாரணன் நம்பி நடக்கின்றான் என்று**
**பூரண செம்பொற் கலசங்கள் வைத்தே**
**தோரணம் கட்டக்கனாக் கண்டேன் தோழி.**

ஆண்டாளின் இந்தக் கனவுப் பாடல்கள் தற்போது க.பொ.த. உயர்தர வகுப்புக்கான தமிழ் இலக்கிய பாடத் தொகுதியில் சேர்ந்திருப்பதைக் காண எனக்கு உவகையாயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மாழ்வார் தன்னை ஒரு பெண்ணாக்கிக் கொண்டு பாடுகிறார். அவருடைய மகளுக்குக் கண்ணன் மேற் காதல். அந்த ஆராக் காதலால் அவர் மகள் நிலை குலைகிறாள். தன் மகளின் நிலையைச் சொல்வதுபோல நம்மாழ்வார் 'கடல் ஞாலம்' என்னும் நாற்பத்தாறாம் திருவாய்மொழியிற் பாடுகிறார். மகள் சொல்கிறாளாம்.

**காண்கின்ற நிலம் எல்லாம் யானே என்னும்**
**காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்**
**காண்கின்ற வெம்தீ எல்லாம் யானே என்னும்**
**காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே என்னும்**
**காண்கின்ற கடல் எல்லாம் யானே என்னும்**
**காண்கின்ற கடல் வண்ணன் ஏறக்கொலோ**
**காண்கின்ற உலகத்தீர்க்கு என்சொல்லுகேன்**
**காண்கின்றஎன் காரிகை செய்கின்றவே.**

இப்பாடலைப் படிக்கும்போது

**காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உன்**
**கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா**
**தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா - உனை**
**தீண்டுமின்பம் தோன்றுதையே நந்தலாலா**

என்ற பாரதியின் பாடல் நினைவிற்கு வருகின்றது. எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன். என்கிற கீதைவாக்கியம் அர்த்தமாகிறது. அந்தத்தாய் எல்லாவற்றையும் காணும் திறம் பெற்ற என்மகள் செய்கின்றவற்றை, காணப்படுகின்ற இந்த உலகத்தைத் தவிர வெறொன்றையும் அறியாத உங்களுக்கு என்னவென்று சொல்வேன் என்று அங்கலாய்க்கிறாள். அவள், அங்கலாய்க்கிறாளா? அல்லது காணப்படுகின்ற இந்த உலகத்தைத் தவிர வேறொன்றையும் அறியாத உங்களுக்கு என்று நம்மாழ்வார் நம்மையெல்லாம் குத்துகிறாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவார திருவாசகங்களுக்கு இணையாகப் பக்தி ரசஞ் சொட்டும் பாடல்களைக் கொண்டது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். அந்தப் பாடற் தொகுதியைப் பல ஆண்டுகளாக நான் வைத்திருந்து அடிக்கடி படித்துச் சுவைத்தேன். ஆனால் அந்த நூல் எரியுண்டுவிட்டது. இப்போது அதைத் தேடி திருகோணமலை நகர வாசிகசாலைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக என்புருகு சிந்தை இடுதிரியாய்க் கொண்டு வைணவ ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் தொகுப்பு நூலைச் சொந்தமாக வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது என் இப்போதைய ஆசை. என்று நிறைவேறுமோ?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியம்

**விவிலியத்தைப்** படித்திருக்கிறீர்களா? அது கிறிஸ்தவர்களின் வேதப்புத்தகம் அல்லவா? அதை நாங்கள் ஏன் படிக்க வேண்டும்? என்று கேட்பவர்களை விட்டுவிடுவோம். ஆனால் அதை ஒரு கிரந்தம் என்ற குறுகிய நோக்கோடு மட்டும் பார்க்காமல், உலகில் இதுவரை வெளியான இலக்கியங்களுட் தலைசிறந்த ஒன்று என்று கருதுபவர்கள் அதை வாசிக்கவே செய்வர்.

உலகில் வழங்கும் ஏறத்தாழ எல்லா மொழிகளிலுமே இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. உலகிலே ஆகக் கூடுதலான பிரதிகள் அச்சடிக்கப்பட்ட நாலும் விவிலியந்தான். இந்த விவிலிய நூலுக்கு எத்தனையோ விளக்கங்களும், உரைகளும்கூட எழுதப்பட்டுள்ளன. விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்த பெருமை ஆறுமுக நாவலர் மூலம் நம் எல்லாருக்கும் உண்டு.

எபிரேய மொழியில் எழுதப்பட்டு, கிரேக்க மொழியிற் பெயர்க்கப்பட்ட விவிலிய நூலுக்குத் தமிழில் எத்தனையோ மொழி பெயர்ப்புக்கள் வந்துவிட்டன. விவிலியத்தின் சில பகுதிகள் மூலமொழியான எபிரேயத்தில் அழிந்துவிட்டதால் கிரேக்க மொழிபெயர்ப்பிலிருந்தே மற்ற மொழிகளுக்குப் பெயர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கிறிஸ்தவத்தில் எத்தனையோ பிரிவுகள். ஒவ்வோர் பிரிவினரும் தத்தம்பாட்டில் விவிலியத்தை மொழி பெயர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். அம்மொழி பெயர்ப்புகளில் பொருள் ஒன்றாகவே இருந்தாலும், வார்த்தைகளில் வித்தியாசம் இருந்தது. மேலும் ஆரம்பகால விவிலியத் தமிழ் மொழி பெயர்ப்புகளில் ஏராளமான திசைச் சொற்களும், சமஸ்கிருதச் சொற்களும் விரவியிருந்தன.

கிறிஸ்துநாதரின் பிரதம சீடரின் பெயர் பீற்றர் என்ற பேதுரு. மூலமொழியில் அதற்குக் கல் என்று அர்த்தம். அவர் பெயரைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் (பெயர்களை மொழி பெயர்த்திருக்கவே தேவையில்லை) அவரை கல்லனார் என்றே மொழி பெயர்த்திருக்க வேண்டும். ஆனால் அவரை இராயப்பர் என்றே மொழிபெயர்த்தார்கள். தெலுங்கு மொழியில் இராய் என்றால் கல்லாம்.

இப்படியாக விவிலிய நூலுக்குப் பல மொழி பெயர்ப்புகள் வந்த பின்னர், விவிலியச் சங்கங்களின் இணையமும், வத்திக்கான் ஒன்றிப்புச் செயலகமும் சேர்ந்து விவிலிய நூலுக்கு ஒரு பொது மொழி பெயர்ப்பு கோட்பாட்டை 1968 இல் வெளியிட்டன. அதன் அடிப்படையில் 1972 இல் தமிழகத்திற் தமிழ் விவிலியப் பொதுமொழி பெயர்ப்பு கிறிஸ்துவத்தின் பல பிரிவுகளாலும் சேர்ந்து செய்யப்பட்டது. இம்மொழி பெயர்ப்பில் இயல்பான, எளிய தமிழ் நடை இடம்பெற்றுள்ளது. திசைச் சொற்களும், வடசொற்களும், கூடுமான அளவிற்கு விலக்கப்பட்டுள்ளன. பழைய மொழி பெயர்ப்பின் யாத்ராகமம் விடுதலைப் பயணம் எனப் புதுப் பெயரிடப்பட்டது. சலமோனின் உன்னதப்பாடல் இனிமைமிகு பாடல் எனவும் உபாகமம் இணைச்சட்டம் எனவும் புதுப் பெயர்கள் பெற்றன. பழைய ஏற்பாடு, இணைத்திருமுறை நூல்கள், புதிய ஏற்பாட்டு நூல்கள் என மூன்று பகுதிகளாக இரண்டாயிரத்து இருநூறு பக்கங்களுக்கு மேல் நூல் விரிந்து பரந்து செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவரல்லாத பிறரும் பைபிளில் வரும் கெட்ட குமாரன் கதை, விதை விதைப்பவன் உவமை ஆகிய கதைகளைத் தெரிந்திருக்கலாம். இவை போன்ற ஏராளமான கதைகள் விவிலியம் முழுவதிலும் நிறைந்துள்ளன. மேலும் பழைய ஏற்பாட்டில் இடம்பெறும் முப்பத்தொன்பது நூல்களும் இஸ்ராயேல் என்ற இனத்தின் சரித்திரம் அவ்வினத்தின் எழுச்சிகள், வீழ்ச்சிகள், இன்பங்கள், துன்பங்கள் அவ்வினத்தினிடையே தோன்றிய ஞானிகளின் உபதேசங்கள், எச்சரிக்கைகள், அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகிய பல்வேறு விடயங்கள் அந்நூல்களிலே மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

புலம்பல் என்ற நூல் ஐந்து எபிரேய அகரவரிசைக் கவிதைகளால் ஆனது. கி.மு. 758 இல் எருசலேம் நகருக்கு ஏற்பட்ட பேரழிவை அந்நூல் சொல்கிறது. அவலச் சுவையே இந்நூலில் மேலோங்கி நிற்கிறது. அந்நூலின் முதலாம் பாடலைப் பார்ப்போம்.

1. **அந்தோ! மக்கள் மிகுந்த மாநகர்**
**தனியளாய் அமர்ந்தனளே**
**நாடுகளில் மாண்புடையாள்**
**விதைவைபோல் ஆனாளே**
**மாநிலங்களின் இளவரசி**
**அடிமைப்பெண் ஆயினளே**

2. **ஆறாத்துயருற்று இரவில் அவள்**
**அழுகின்றாள்**
**அவளின் கன்னங்களில்**
**கண்ணீர் வடிகின்றது**
**அவளின் காதலரில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றுவார் எவரும் இல்லை
அவளின் நண்பர்கள் அனைவரும்
அவளுக்குத்துரோகம் செய்து
பகைவர் ஆயினர்

3. இன்னலுற்று அடிமையான யூதா
நாடு கடத்தப்பட்டாள்
வேற்றினத்தாருடன் தங்கியிருக்கும்
அவள் அமைதி பெறவில்லை
துரத்திவந்தோர் இடுக்குகளிடையே
அவளை வளைத்துப் பிடித்தனர்.

இப்படியாக முதலாம் பாடல் இருபத்திரண்டு கண்ணிகளாக விரிகின்றது. இரண்டாம், நான்காம், ஐந்தாம் பாடல்களிலும் தலா இருபத்திரண்டு கண்ணிகள் உள்ளன. மூன்றாம் பாடலில் மட்டும் அறுபத்தாறு கண்ணிகள்!

இப்புலம்பல்களை இப்போது படித்தாலும் எனக்கு அழுகை வருகிறது! அழிந்துபோன ஜெருசலேமையல்ல. இப்புலம்பல்கள் யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழகத்தைத்தான் என் கண்முன் நிறுத்துகின்றன. வேற்றினத் தாருடன் தங்கியிருக்கும் அவள் அமைதி பெறவில்லை என்ற வரி அந்நிய நாடுகளில் அகதிகளாக வாழும் நம்மவரைத்தான் எனக்கு நினைவூட்டுகிறது.

புலம்பல் மட்டும்தானா விவிலியத்தில் உண்டு. இல்லை இல்லை காதலும் சிருங்கார ரஸமும் கூட விவிலியத்தில் உண்டு.

இனிப் புதிய ஏற்பாட்டிற்கு வந்தால் அதில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வர் எழுதிய யேசுநாதரின் (சரித்திரமாகிய) நற்செய்திகளும் திருத்தூதர் பணி முதலாம் இன்னும் பலநூல்களும் அடங்கியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வரின் நற்செய்திகளை அதன் இறுக்கமான வசன நடைக்காகவே அந்தக் காலத்தில் நான் விரும்பிப் படித்தேன்.

விரியன் பாம்புக் குட்டிகளே! வரப்போகும் தேவாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ளுங்கள்!

இந்த விபசார சந்ததி என்னிடம் ஒரு அடையாளத்தைக் கேட்கிறது!

இதைவிடவும் வன்மையாக நம்மால் யாரையாவது திட்டமுடியுமா?

விவிலியத்தின் கடைசி நூலான திருவெளிப் பாட்டைப் படிக்கும்போது எனக்குக் கோணங்கியின் மெஜிக் ரீயலிசக் கதைகளைப் படிப்பது போல இருக்கிறது. அவைகளின் உட்பொருளை நான் விளங்கிக் கொள்ளாததினாலிருக்கலாம்.

முடிபாக பரம்பரைக் கத்தோலிக்கனாகப் பிறந்தும் அங்கொன்றும், இங்கொன்றுமாக இல்லாது விவிலியத்தை ஆற அமர முற்றிலுமாகப் படிக்கவில்லையே என்ற ஆதங்கமே என்னுள் மிஞ்சி இருக்கிறது. ஆனால் நூல் கைவசமுள்ளது. படிக்கமுடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

வாழ்க்கை முழுக்கப் படித்துக்கொண்டே இருக்க வேண்டிய நூல் விவிலியம். அதன் இலக்கியச் சுவைக்காகக் கிறிஸ்தவரல்லாதாரும் அதைப்படிக்கலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சரித்திரம்

மலை நாட்டு ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருந்த நாற்பதுகளின் அந்திமப் பகுதி. சிங்கள ஆசிரியர் ஒருவரிடம் நான் ஆங்கிலம் கற்றேன். எனக்குக் கற்பித்தவருக்கு நான் தமிழ் கற்பித்தேன்.

ஒருநாள் என் ஆசிரியர் கூறினார். நீர் ஒரு நல்ல வாசகனாகவும் இருக்கிறீர். நீர் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெறவேண்டுமாயிருந்தால் நேருஜியின் உலக சரித்திரக் காட்சி என்ற நூலைக் கட்டாயம் படிக்க வேண்டும். தனது பதின் மூன்று வயது மகள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற் காக மிக இலகுவான ஆங்கிலத்தில் நேருஜி அதை எழுதி யுள்ளார். அதனை அவசியம் படியும் எனச் சிபார்சு செய்தார்.

அப்போதெல்லாம் இந்தியாவிலிருந்து நேரடியாகவே விலை கொடுத்து எடுக்கும் பொதி மூலம் புத்தகங்களை வரவழைத்து விடலாம். இரண்டு வாரத்துள் நானும் இந்தியாவிலிருந்து நேருஜியின் GLIMPSESS OF WORLD HISTORY என்ற நூலை வி.பி.பி. மூலம் பெற்றுக் கொண்டேன். அப்போதைய விலை பதினான்கு ரூபாய்கள்தான்.

நூலைப் பிரித்துப் படித்தேன். அந்நூல் இங்கிலாந்தி லிருந்து வெளிவந்திருந்தது. பதினான்காவது பதிப்பு வி.கே. கிருஷ்ணமேனன் அவர்கள் நூலுக்கு முன்னுரை எழுதி யிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் உள்ளே சென்று பார்த்தால் நூல் முழுவதுமே கடிதங்களாக இருந்தன. சுதந்திரப் போராளியாகச் சிறையிலிருந்து நேருஜி, தன் ஒரே மகளான பதின் மூன்று வயது இந்திராவுக்கு எழுதிய நூற்று எண்பத்தொன்பது கடிதங்களின் தொகுப்பே அந்நூல். எளிமையான ஆனால் கவர்ச்சிகரமான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்த நூலை ஆர்வத்தோடு படித்தேன்.

படித்து முடித்த பின்னர்தான் அக்கடிதங்கள் எழுதியவுடன் இந்திராவுக்கு அனுப்பப்படவில்லை. எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து வைத்திருந்து தனக்கு விடுதலை கிடைத்த பின்னர்தான் நேருஜி அவைகளை இந்திராவிற்குக் கொடுத்தார் எனத் தெரிந்தது.

இந்திராவின் பிறந்த நாளன்று எழுதிய கடிதத்தில் பிரியதர்சனி! இந்தச் சிறையிலிருந்து நான் உனக்கு என்ன பிறந்த நாட்பரிசை அனுப்ப முடியும்? ஆனாலும் சிறைச் சாலைச் சுவர்களையும் தாண்டி என் நல்வாழ்த்துக்களை என்னால் அனுப்பமுடியும் என்று எழுதுகிறார்.

இக்கடிதங்களை எழுதும் போது நீ என்முன்னால் அமர்ந்திருப்பதாக நான் உணர்கிறேன். உன்னோடு சம்பாஷிப்பது போலக் களிப்படைகிறேன் என்று நேருஜி எழுதுவதைப் படிக்கையில் மகளை நினைத்துக் கொண்டு சிறையில் வாடும் ஒரு தந்தையை என்னால் உணர முடிந்தது. நீண்டுகொண்டே செல்லும் சிறையின் மணித்தியாலங்களைச் செவ்வனே கழிக்க நேருஜி எடுத்துக் கொண்ட உபாயந்தான் இந்தக் கடிதங்கள்.

ஆனால் அவருக்குத்தான் எத்தனை பரந்துபட்ட சரித்திர அறிவு. அரசர்களின் நாமாவளியை வெறுமனே திரட்டித் தருதல் மட்டும் சரித்திரம் ஆகாது. ஒவ்வோர் கால கட்டத்திலும் மனித சமூகம் அடைந்த மாற்றத்தை எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதுதான் உண்மையான சரித்திரம். கல்லாயுதங்களைப் பாவித்து வேட்டையாடிய மனிதன் எவ்வாறு ஆற்றங்கரைகளிற் குடியேறி நாகரீகமாக வாழ்ந்தான் என்பதை நேருஜி பல கடிதங்களில் மிக அழகாகச் சொல்கிறார்.

பின்னால் ஏற்பட்ட அரசியற் புரட்சிகள், தொழிற்புரட்சி, விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள், மருத்துவத்துறை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி... புத்தகத்தை படித்து முடித்த போது இல்லாதன இல்லை இளங்குமரா எனக் கம்பனைப் போலப் பாடலாம் போல இருந்தது எனக்கு.

ஒரு கடிதத்தில் இலங்கைக்குத் தான் வந்திருந்தபோது கண்ட அழகை நேருஜி இப்படிச் சொல்கிறார். எண்ணிக்கை யற்று நீண்டு மெலிந்த தென்னை மரங்கள், தீவின் மரகதப் பசுமையை, வானமும் கடலும் தொடும் இடத்திலே கரை கட்டி நின்றது.

என் தமிழ் மொழி பெயர்ப்பு இருக்கட்டும். **The Innmurable Slender and straight Coconut trees fringed the sea shore where the emarald green of the Island met the blue waters of the sea and the sky.** என நேருஜி எழுதியதை ஆங்கிலம் தெரிந்தவர்கள் அவர் எழுதிய ஆங்கிலத்திலேயே படித்தால்தான் உசிதம் என எண்ணுகிறேன்.

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பிலே நான் சரித்திரத்தையும் ஒரு பாடமாகப் படித்திருக்கிறேன். பிரான்சிய அரசியற் புரட்சி, அமெரிக்க அரசியற் புரட்சி, கைத் தொழிற் புரட்சி, ஜெர்மனியின் ஒற்றுமை, இத்தாலியின் ஐக்கியம் என்றெல்லாம் சரித்திர பாடத்தை நெட்டுருப் பண்ணியிருக் கிறேன். பிரான்சிய அரசியற் புரட்சியின் மூலகாரணங்கள், நிமித்தகாரணங்கள் என்பனவற்றையெல்லாம் சரித்திர ஆசிரியர்கள் குறிப்புகளாகத் தந்திருக்கிறார்கள். அவையெல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையும் இப்போது மறந்துவிட்டேன். ஆனாற் பிரான்சிய அரசியற் புரட்சிக்கான காரணங்களை நேருஜி தன் உலக சரித்திரத்தில் எழுதியது மட்டும் இன்றைக்கும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அவர் எழுதுகிறார்.

அதிகார பதவியிலுள்ள சில முட்டாள்கள் சில கிளர்ச்சிக்காரர்களே புரட்சிக்குக் காரணம் என நினைக்கிறார்கள். ஆனால் யார் இந்தக் கிளர்ச்சிக்காரர்கள்? மக்களின் கசந்த வாழ்க்கையின் பிரதிபலிப்பே இந்தக் கிளர்ச்சிக்காரர்கள். நாளாந்த வாழ்க்கை பொறுக்க முடியாத சுமையாகும் போது, துன்பங்கள் நாளாந்தம் பெருகிக் கொண்டே வரும்போது, வாழ்க்கை இனி வாழத்தக்கதல்ல என்ற கசப்புணர்வு மனிதனுக்கு ஏற்படும்போது சாதாரண மனிதனும் கிளர்ச்சிக் காரர்களுக்குச் செவிசாய்க்கிறான். மிக இலகுவாகவே அவர்களால் வழி நடத்தப்படுகிறான். பிரான்சிய அரசியற் புரட்சி வெடித்தமைக்கு இதுவே காரணம்.

சுதந்திரப் போராளியான நேருஜி உலகில் பல்வேறிடங் களிலும் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுதந்திரப் போராட்டங்களைப் பற்றியும் உணர்ச்சி வசமாக எழுதியுள்ளார். கத்தோலிக்க மதத்தவரான ஐரிஷ் மக்கள், தம்மை ஆளும் புரொட்டெஸ்தாந்தியரான ஆங்கிலேயருக்கு எதிராக எழுநூறு நீண்ட ஆண்டுகள் நடத்தும் சுதந்திரப் போரைப் பற்றி மூன்று கடிதங்களிற் சொல்கிறார். ஐரிஷ் ஆண் மக்கள் எல்லாரும் பிரிட்டிஷாருக்கெதிராக யார் போரிடுகிறார்களோ அந்த நாட்டுப் படையிற் சேர்ந்து போராடப் போய்விடுவார்களாம். வீரம் மிக்க ஐரிஷ் பெண்கள் செம்மறியாட்டை வளர்த்தும், உருளைக்கிழங்கைப் பயிரிட்டும் தம் பிள்ளைகளை வளர்த்துப் போருக்கனுப்புவார்களாம். தங்களின் பாதுகாவலரான புனித பற்றிக் மீதும் அப்பெண்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந் தார்கள், என்றெல்லாம் உணர்ச்சிகரமாக எழுதுகிறார் நேருஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப் புரட்சி பற்றி எழுதுகையில் மதம் மக்களுக்கு வேண்டிய எத்தனையோ நல்லுணர்வுகளைக் கொடுத்திருக் கிறது. அந்த உணர்வுகளின்றிப் பெரும்பான்மையினரான மக்கள் உலகில் வாழ முடியாதவர்களாகவே ஆகியுள்ளனர். மதம் மாந்தர்களிடையே மிக உன்னதமான, நேர்த்தியான மனிதர்களையும் தந்துள்ள அதே நேரத்தில் மூட-நம்பிக்கையும், குறுகியமனமும், குரூர மனமும் கொண்ட கொடுங்கோலர் களையும் சிருட்ஷ்டித்துள்ளது என்று குறிப்பிடுகிறார் நேருஜி.

1970 களில் என எண்ணுகிறேன். எகிப்தின் தலைவர் நாசர் அவர்கள் ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கும் பொன்முட்டையிடும் வாத்தாக இருந்த சுயஸ் கால்வாயைத் திடீரென எகிப்தின் தேசீயச் சொத்தாக்கிக் கொண்டார். கொழும்பிலிருந்து அப்போதுதான் வந்த எனது நண்பர் காவலுஞ் சென்ற ஏ.எல்.ஏ. மஜீத் உதவி மந்திரி அவர்கள், சுயஸ் கால்வாய் தேசியமயமாக்கப்பட்டதைப் பாராட்டி ஓர் கூட்டம் நடத்த வேண்டும் என்றார். கூட்டத்திற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நான் கூட்டத்திற் பேசுவதற்காக நேருஜியின் சரித்திர நூலிலிருந்து எகிப்தைப் பற்றிய விடயங்களைப் படித்துக் கொண்டிருந்தேன். அன்று சாயந்தரம் நடந்த கூட்டத்தில் நான் எகிப்தின் புராதன நாகரீகம், பின்னால் அது மேற்கு நாட்டவரால் சீர்குலைக்கப்பட்ட வரலாறு, பேர்டினட்டிலசெபஸ் என்று பிரெஞ்சு நிபுணன் சுயஸ் கால்வாயை வெட்டமுனைந்தது. அதற்கேற்பட்ட எதிர்ப்பு, எதிர்ப்பை மேற்கொண்டு கால்வாயை வெட்டி ஐரோப்பாவிலி ருந்து இந்து சமுத்திர நாடுகளுக்கு வரும் கப்பல் பயணத்தை அறுபத்தொன்பது மைல் நீளமான கால்வாய் மூலம் ஆறாயிரம் மைல்களாற் குறைத்தது. அக்கால்வாய் மூலம் பிரான்சியரும் ஆங்கிலேயரும் அடித்த 'மண்கொள்ளை', ஆகியன பற்றி மிக விரிவாகப் பேசினேன். கூட்டம் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்ததும் இவ்வளவு விடயங்களையும் எங்கே எடுத்தாய். நீ இதை எனக்கல்லவா சொல்லித்தந்திருக்க வேண்டும்? என்று குறைப்பட்டுக் கொண்டார் என் நண்பர் காலஞ்சென்ற ஏ.எல்.ஏ. மஜீத்.

எனக்குச் சரித்திரக் கருவூலமாயிருந்த நேருஜியின் நூலும் எரிந்துவிட்டது. நான் மூதூர் கிராமசபைப் பிரதித் தலைவராக இருந்தபோது நேருஜியின் சரித்திரத்தை ஓ.வீ. அழகேசன் அவர்கள் மொழி பெயர்ப்பில் மூதூர் வாசிக சாலையில் வாங்கி வைத்திருந்தேன். அம் மொழிபெயர்ப்பும் இன்று இல்லை.

இன்றைய விலையில் நேருஜியின் சரித்திர நூல் 500 ரூபாயாவது இருக்கலாம். என்ன விலையாக இருப்பினும் அதை நான் வாங்கத்தான் வேண்டும். சாகும்வரை அதைப் படிக்க வேண்டும். பின்னர் அந்நூலை என் பேரனுக்குக் கொடுக்க வேண்டும் என்பது என் ஆசை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகம்

**இலங்கையின்** கிழக்குப் பாகத்தில் வெருகல் ஆற்றுக்குத் தெற்காகவும் குமுக்கன் ஆற்றுக்கு வடக்காகவும் அமைந்துள்ள பகுதி மட்டக்களப்பு தமிழகம் என வழங்கப் பெறுகின்றது. கிழக்கு மாகாணத்தின் பெரும் பிரிவுகளில் ஒன்றாகிய இம் மட்டக்களப்பு தமிழகம் சமீபத்தில் அம்பாறை என இன்னோர் பிரிவாகவும் துண்டாடப்பட்டது. அதனால் முன்பெல்லாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைத் தீவு என்ற கிராமத்திற் சுவாமி விபுலானந்தர் பிறந்தார் என எழுதிய நாம், அம்பாறை மாவட்டத்தில் காரைத்தீவு என்ற ஊரிற் சுவாமி விபுலானந்தர் பிறந்தார் என எழுதவேண்டியவர்களாயுள்ளோம். ஆனாலும் அம்பாறை மாவட்டத்தில் நீலாவணை தொடக்கம் பாணமை வரையுள்ள தமிழ் - முஸ்லிம் கிராமங்கள், மக்கள் மனதில் இன்னமும் மட்டக்களப்புத் தமிழகமே.

இம்மட்டக்களப்புத் தமிழகம் மற்றைய இலங்கைத் தமிழ் மாவட்டங்களிலிருந்து சில தனித்தன்மைகளால் வேறுபட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த என்னால் வெருகல் ஆற்றைத் தாண்டியதும் இத்தனித் தன்மைகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆடவரும், பெண்டிரும் தலைக்குத் தேங்கா யெண்ணெய் பூசுதல், குரவையிடல், நாட்டுக் கூத்து, கண்ணகி வழிபாடு, மந்திரம் மாயம்,கத்தரிக்காயை வழுதுலங்காய் என்றும், சுரக்காயை நாடங்காய் என்றும், பூசணிக்காயைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரைக்காய் என்றும் வழங்குவது இப்படிப்பல விடயங்களில் மட்டக்களப்புத் தமிழகம் தனித்தன்மையைக் கொண்டுள்ளது.

பரந்த வயல் வெளிகளும், தென்னஞ்சோலைகளும் சுமார் 30 மைல்கள் நீண்டு கிடக்கும் ஆழமான வாவியும் கொண்டது மட்டக்களப்புத் தமிழகம், வாவிக்கு அப்பால் மேற்கேயுள்ள பகுதி படுவான்கரை என்றும், இப்பாலுள்ள கிழக்குக்கரைப் பகுதி எழுவான்கரை எனவும் வழங்கப் படுகின்றது. தாய்வழிக் குடிமுறை மலையாளத்து மருமக்கத்தாய முறை போன்ற குடும்ப அமைப்பு மந்திரங்கள் போன்றவற்றை உற்று நோக்கினால் மட்டக்களப்பு மலையாளத் தொடர்பு டையது போலவும் தெரிகிறது. மீன்பாடும் தேனாடு என்று புகழப்படும் இம்மாநிலம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்ற நூலைத் தந்த சேரனான (அதாவது மலையாளத்தானான) இளங்கோவடிகளின் வாரிசு என்று தமிழ்ப் புலவர்கள் கருதும் யாழ் நூல் தந்த விபுலானந்த அடிகளையும் உலகிற்களித்துப் புகழ் கொண்டது. அம்மட்டக்களப்புத் தமிழகத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

மட்டக்களப்பு படுவான் கரையிலுள்ள மண்டூர் என்னும் ஊரைச்சேர்ந்த பண்டிதர் வி.சி. கந்தையா அவர்கள் மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூலைத் தந்திருக்கிறார். அந்நூல் அறிமுகம், உணர்ச்சிக் கவி வளம், நாட்டுக் கூத்துகள், நீரரமகளிரும் யாழ். நூலாசிரியரும், செந்தமிழ் சொல் வளம், கண்ணகி வழிபாடு, புலவர் பரம்பரை, மருத்துவமும் மந்திரமும், வரலாற்று, ஒழிபியல் என்ற பத்து அத்தியாயங்களில் நம்மை மட்டக்களப்பினுள்ளேஅழைத்துச் செல்கிறது.

மட்டக்களப்பு நாட்டுப் பாடல்களுக்குப் பெயர் பெற்றது. எழுத்தறியாக் கவிஞர்கள் அகத்திணையிலும், புறத்திணையிலும் சுயமாகப் பாடித்தள்ளியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளிற் கணிசமான பங்களிப்பைச் செய்தவர்கள் முஸ்லிம் புலவர்கள்.

**ஆதங்காக்கா ஆதங்காக்கா**
**அவரைக் கண்டாச் சொல்லிடுகா**
**பூவசரசங் கன்னி யொன்று**
**பூமலர்ந்து போச்சுதெண்டு**

என்பன போன்ற உணர்ச்சி பீறிடும் நாட்டுக் கவிதைகளைப் பற்றி மட்டக்களப்புத் தமிழகம் நிறையவே சொல்கிறது.

மட்டக்களப்புக் கல்யாணங்கள் ஆரியக்கலப்பற்றவை. ஓமம் வளர்ப்பதில்லை, சமஸ்கிருதச் சுலோகங்களை உச்சாடனம் பண்ணுவதில்லை. மாப்பிள்ளை கேட்டு பெண் வீட்டார் போவதும், அதன் பின் பெண் கேட்டு மாப்பிள்ளை வீட்டார் வருவதும் முழுத்தம் என்ற முகூர்த்தம் நிச்சயிக்கப் படுவதும் ஆகிய சடங்குகள் முடிந்ததும் முகூர்த்தத்தன்று, பெண் வீட்டில் ஏழு மரக்கறிகளோடு கூடிய சோற்றை பெண்ணும், மாப்பிள்ளையும் அருகருகே அமர்ந்து மூன்று கவளங்கள் ஆளுக்காள் ஊட்டிப் பரிச்சயம் கொள்வதான கலத்திலே போடுதல் என்ற நிகழ்ச்சியோடு மட்டக்களப்பின் தேசவழமைக் கல்யாணம் பூர்த்தியாகிறது.

ஊர் வடசேரி, தென்சேரி என இரண்டாகப் பிரிந்து கொண்டு நடந்தும் கொம்பிழுத்தல் என்ற விளையாட்டு மட்டக் களப்புக்கேயுரிய தனிச்சொத்து, அதே போலவே வசந்தன் கூத்து என்ற கோலாட்டமும் அதற்கான பாடல்களும், கண்ணகி வழக்குரை என்ற கண்ணகி வழிபாடும் மட்டக் களப்புக்கே சொந்தமானவை.

வடமோடி, தென்மோடி என்ற நாட்டுக்கூத்துக்கள் ஈழத்தின் பிற மாவட்டங்களில் இருந்தாலும் நாட்டுக்கூத்து என்றால் மட்டக்களப்புத்தான் என்று இப்போதும் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக் கொள்கிறோம். மணல்வெளியில் வட்டக் களரியில் விடிய விடிய ஆடப்பெற்ற நாட்டுக் கூத்துக்களை நாப்பது களின் பிற்கூறுகளில் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவனாக இருக்கையிற் பார்த்து ரசித்திருக்கிறேன்.

மட்டக்களப்பின் தமிழ்ச் சொல் வளமும் தனித்துவ மானதுதான். தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலி மாவட்டத்தில் என்னலே என்று லே போட்டுப் பேசுவதுபோல் மட்டக்களப்பிலும் என்னகா - ஏங்கா என்று கா போட்டுப் பேசுவார்கள்.

**புள்ளலெக்கா புள்ள லெக்கா - உன்**
**புருசன் எங்க போனதுகா**
**பள்ளத்து வீட்டுக்குள்ள - பழங்**
**கதைபழகப் போனதுகா**

என்ற நாட்டுப் பாடல் இந்த கா வை இதமாகச் சொல்கிறது. எனக்கொண்ணா என்று சர்வசாதாரணமாக பிள்ளைகள் கூறும் ஒண்ணா என்ற தமிழ்ச் சொல மட்டக் களப்பிற் பேச்சுவழக்கு. இப்படியாக இலக்கணச் சொற்களோடு சூட்டுக்களத்தில் சொல்லப்படும் சில பொருட்களின் பெயர்கள் மட்டக்களப்பின் தனித்துவம். மட்டக்களப்பில் பல தமிழ்ப்புலவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களிற் சுவாமி விபுலானந்தரைத் தெரியாதவன் தமிழ் தெரியாதவனே. அவரோடு வேறு பல புலவர்களையும் பற்றி மட்டக்களப்புத் தமிழகம் சொல்கிறது.

மொட்டை வேலாப் போடியார் என்றொரு புலவர். அவர் மத்தியான வேளைகளில் முத்தர், பாண்டியன் என்ற தன் நண்பர்களோடு மருதமர நிழலில் அமர்ந்து கொண்டு சம்பாஷிப்பாராம். அவரோடு கோபம் கொண்ட போடியார் ஒருவர் கோபத்தில் அம்மரத்தை வெட்டிவிட்டாராம். வெட்டியவனுக்குச் சாபமிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தர் பாண்டியர் மூவர் இருக்கின்ற
மத்தியான மருத நிழல்தனைக்

கத்தி கொண்டு கந்தற வெட்டினான்
கதிரவேலன் தலையற வெட்டுவான்

என்று பாடினாராம். அப்பாடலைப் படிக்கையில் எனக்கு இரட்டைப் புலவர்களின் பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. சிருங்கார ரசம் கொண்ட வேறுபல பாடல்களும் அப்புலவர் பாடியுள்ளார்.

சேகு மதார் சாகிப் என்ற புலவர் 1707 இல் வீசிய கோரப்புயல் பற்றிப் புயல் காவியம் என்ற காவியத்தையும், மலடி பிள்ளைப் பேற்றுக்காய் ஆண்டவனை வேண்டுவதாய் அமைந்த பிள்ளைக் காவியம் என்னும் காவியத்தையும் பாடினாராம். அக்காவியம் இரண்டும் இன்றும் பலரது நாவிற் பயிலப்படுவதாக மட்டக்களப்புத் தமிழகம் சொல்கிறது. அவைகள் ஏன் இன்னமும் நாலுருப் பெறவில்லை?

இன்னும் மட்டக்களப்பின் கிறிஸ்தவ சமயப் பரம்பல், தாண்டவன் வெளியில் முதல் கத்தோலிக்க தேவாலயமான காணிக்கை மாதாகோவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, மத்திய கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபிதம் பற்றியும் நூல் சொல்கிறது.

1964 இல் பொன்னையா நினைவு நூலாக சுன்னாகம் திருமகள் அச்சகத்திலிருந்து வெளிவந்த இந்த நூல் சுமார் 500 பக்கங்கள் கொண்டது. மட்டக்களப்பைப் பற்றி அறிய விரும்புவோர் அவசியம் படிக்க வேண்டிய நூல் எங்கேயாவது தேடி மீண்டும் ஒரு பிரதி வாங்கவேண்டும் என்பது பொச்சம்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பியகப் பொருள்

**இயற்றமிழின்** இலக்கணமானது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பகுதிகளை உடையதாகும். பண்டைய இலக்கண நூல்களுள் நமக்குக் கிடைக்கக் கூடிய ஒரே ஒரு நூல் தொல்காப்பியமே. அதுவே இன்று இலக்கண நூல்களுள் முதன்மையானதாகவும் கொள்ளப்படுகிறது. ஆனாலும் தொல்காப்பியத்தைச் சாமான்யர் எல்லாரும் கற்க முடியாது. அதையுணர்ந்த பிற்காலத்து அறிஞர்கள் தொல்காப்பிய நூலை இலகுபடுத்துவதற்காக வேறு புதிய இலக்கண நூல்களை இயற்றினார்கள். பவணந்தி முனிவர் தொல்காப்பியம் கூறும் எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்குமாக நன்னூலை எழுதினார்.

பொருள் இலக்கணத்திற்காக அகப்பொருளுக்கு நம்பியகப் பொருளும், புறப்பொருளுக்குப் புறப்பொருள் வெண்பா மாலையும் எழுதப்பட்டன.

அதைப்போலச் செய்யுளிலக்கணம் சொல்லும் யாப்பிற்காக யாப்பருங்கலக் காரிகையும், அணியிலக் கணத்தைச் சொல்லத் தண்டியலங்காரமும் வெளிவந்தன.

ஆனால் இலகுபடுத்தப்பட்ட இந்த இலக்கண நூல்களையும் இன்றைய மாணவர் படிப்பதில்லை. மாணவர்களை நான் குறைகூறவும் மாட்டேன். ஏனென்றால் இலகுபடுத்தப்பட்ட இலக்கண நூல்கள்கூட இன்றைய மாணவருக்குக் கஷ்டமானவையாகவே உள்ளன. ஆனாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நூல்களில் என்னதான் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இன்றைய மாணவர்கள் அறிந்திருக்க வேண்டாமா?

ஏற்கனவே பவணந்தி முனிவரின் நன்னூலைப் பார்த்தோம். இப்போது அகப்பொருள் இலக்கணமான நம்பியகப் பொருளைப் பார்ப்போம்.

நம்பியகப் பொருள் பழைய பதிப்பு ஒன்று என்னிடம் இருந்தது. எரிந்து போயிற்று. ஆனாலும் வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை அவர்களாற் தெளிவுரை எழுதப்பட்ட நம்பியகப் பொருள் சென்னை முல்லை நிலையத்தினரால் 1993 இல் வெளியிடப்பெற்றது. அதன் பிரதி ஒன்றைத்தான் இப்போது வைத்திருக்கிறேன்.

அகப் பொருளாவது ஒத்த தன்மையுடைய தலைவனும் தலைவியும் தம்முள் துய்க்கும் இன்பத்தைக் கூறுவதாகும்.

புறப்பொருளாவது புறத்தார்க்குக் கூறக் கூடியதாய் அமைந்த அறம் பொருள் இரண்டையும் கூறுவதாகும்.

அகப்பொருள் ஐந்தாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற் றிற்குத் திணைகள் என்று பெயர். திணை என்றால் ஒழுக்கம்.

ஐந்திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலத்தின் கண்வந்த ஒழுக்கமாகும்.

ஒவ்வொரு திணைக்கும் நிலமும் பொழுதும் உண்டு. அவை முதற் பொருள் அந்நிலங்களுக்குரிய தெய்வம், மக்கள், உணவு, புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், பறை, யாழ், பண், தொழில் என்பன கருப்பொருளாகும்.

ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய ஒழுக்கம் உரிப் பொருளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை ஒன்று சேர்த்துப் பார்த்தால்

1. குறிஞ்சி

நிலம் : மலையும் மலைசார்ந்த இடமும்

பொழுது : பெரும்பொழுது முன்பனிக்காலம் சிறுபொழுது யாமம் (நள்ளிரவு)

கருப்பொருள்

தெய்வம் : முருகன்

மக்கள் (உயர்ந்தோர்) பொருப்பன், வெற்பன், சிலம்பன்

மக்கள் (தாழ்ந்தோர்) குறவன், குறத்தி

உணவு: மலை நெல், தினை, மூங்கில் அரிசி

புள்: கிளி, மயில்

விலங்கு : யானை, புலி, கரடி, சிங்கம்

ஊர் : சிறுகுடி

நீர் : அருவிநீர், சுனை நீர்

பூ : குறிஞ்சிப்பூ, காந்தட் பூ, வேங்கைப்பூ

மரம் : சந்தனம், தேக்கு, அகில், அசோகம்

பறை : தொண்டகப்பறை

யாழ் : குறிஞ்சியாழ்

தொழில், : வெறியாடல், மலைநெல் விளைவித்தல், தினைக்காவல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவி, சுனை நீராடல்

உரிப்பொருள் : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக மற்றைய நான்கு நிலங்களுக்கும் நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள்கள் உள்ளன.

**முல்லையின் கருப்பொருளை**
**நெடுமான் குறும்பொறை நாடன் தோன்றல்**
**வடுவில் கற்பின் மனைவிகிழத்தி**
**இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்**
**கான வாரணம், மான், முயல் பாடி**

**குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை**
**நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப்பிடவம்**
**கொன்றை காயா மன்றலங் குருந்தம்**
**தாற்றுக் கதிர் வரகொடு சாமை முதிரை**
**ஏற்றுப்பறை முல்லையாழ் சாதாரி**
**சாமை வரகுதரமுடன் வித்தல்**
**செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்**
**மூவினம் மேய்த்தல், சேவினம் தழுவல்**
**கழுமிய குலவையொடு கான்யாறு என்றிவை**
**முழுதுடன் ஆடல் முல்லைக்குப் பொருளே**

என்று சொல்கிறது நம்பியகப் பொருள்

ஐந்து நிலங்களையும் அவற்றின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவைகளைத் தெரிந்து கொண்டால் அதன் பின்னர் இயற்கைப் புணர்ச்சி, முதலாம் புணர்ச்சி வகைகள், பகற்குறி, இரவுக்குறி என்று சாதாரண வாசகனுக்கு விளங்காத சூத்திரங்கள்.....

ஆனால் அவை ஒன்றும் அவ்வளவு கஷ்டமல்ல. பகற்குறி, இரவுக்குறி என்பன பகலிலும் இரவிலும் கூடல் நடக்குமிடங்கள், அதனை

**இல்வரை இகந்தது பகற்குறி, இரவுக்குறி**
**இல்வரை இகலா இயல்பிற்றாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது அகப்பொருள். அதாவது பகற்குறி வீட்டின் எல்லையைக் கடந்தது. இரவுக்குறி வீட்டின் எல்லையைக் கடவாதது.

இப்படியாக அகத்திணை இயல்கூறும் நூல் இரண்டாவதாகக் களவியல் பற்றிக் கூறுகிறது.

நான்கு வேதங்கள் எண்வகைத் திருமணங்களைப் பற்றிச் சொல்கின்றன. இந்த எட்டுத் திருமணங்களுள் ஐந்தாவதான காந்தருவ மணமே களவொழுக்கமாகும். கொடுப்பாரும் கொள்வாரும் இன்றித் தலைமகனும் தலைமகளும் தனியிடத்து எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது களவியல்.

காட்சி, ஐயம், துணிவு குறிப்பறிதல் ஆகிய தொடர் நிகழ்வுகள் மூலம் இயற்கைப் புணர்ச்சியாகிய களவொழுக்கம் நடைபெறுகிறது. இந்தக் களவொழுக்கம் இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு எனப் பதினேழு வகைகளாக விரிக்கப் படுகின்றது. அதன் பின்னர் வரைவியல் என்ற அத்தியாயம் வருகிறது.

அகப்பொருள் இலக்கணம் உதாரணங்களுக்காகத் தஞ்சை வாணன் கோவையையே முற்றுமுழுக்கப் பயன் படுத்துகிறது. பொருள் வயிற்பிரிவைத் தலைவனாற் தோழி உணர்ந்து அவ்வுணர்வைத் தலைவிக்கு உணர்த்துகிறாள். அதற்குத் தரும் உதாரணமான தஞ்சை வாணன் கோவைச் செய்யுள் இது

**மஞ்ஞைப் புறமதில் மாறை**
**வரோதயன் வாணர் பிரான்**

**தஞ்சைப் பதியண்ணல் எண்ணலர்**
**போல் தனிநாமிருக்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சைப்பொருள் வயின்வைத்து நம்
கேள்வர் நன்னீள் மதியின்
பிஞ்சைப் புரிநுதலாய் பிரி
வான் இன்று பேசினரே.

கடைசியாக உள்ள ஒழிபியலில் அகப்பாட்டின் உறுப்புகள் சொல்லப் படுகின்றன. உள்ளுறை உவமத்தின் இலக்கணம் சொல்கையில் கலை என்ற ஆண்மான் உழை என்ற பெண்மானை விட்டுப் பிரியாமல் வாழும் என்ற பொருளுள்ள தஞ்சை வாணன் கோவைச் செய்யுளை அதற்கு உதாரணமாகச் சொல்கிறது.

இப்படி. ஐந்து நிலங்களுக்கும் வகுத்த ஒழுக்கங்களாக மனிதனின் காதல் வாழ்வைக் கூறும் அகப்பொருள் இலக்கணம் நம்மாற் படிக்கப்பட வேண்டிய நூலாகும். இந்நூலைப் படிக்கையில் நம்முன்னோர் வாழ்க்கைக்கு எப்படி இலக்கணங் கண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். அதற்காகவே மீண்டும் மீண்டும் இந்நூலைப் படிக்கிறேன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பு

**இது** புதுக்கவிதைக் காலம். எந்தச் சஞ்சிகையைப் புரட்டினாலும் அதிற் புதுக்கவிதைகள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். சமீபத்தில் சென்னை கலைமகள் ஒரு கவிதைப் போட்டி நடத்தியது. அதில் மரபுக் கவிதைகளே போட்டியில் இடம் பெறவேண்டும் எனக் கேட்டிருந்தது. இப்படிச் சில அபூர்வங்களைத் தவிர, மற்றெல்லாரும் புதுக்கவிதைக் காரர்களே.

புதுக்கவிதை இலக்கணம் மீறிய கவிதையாம். இலக்ணத்தை யாரால் மீற முடியும்? இலக்கணந் தெரியாதவன் நான் எப்படி இலக்கணத்தை மீறியிருக்கிறேன் என்று சொல்வது?

நான் தமிழ்நாடு சென்றிருந்தபோது கவிஞர் வைத்தீஸ் வரன், இன்குலாப் என்ற புனைபெயரில் எழுதும் ராமநாதபுர மாவட்டக்காரரான சாகுல்கமீது ஆகியவர்களோடு உரையாடு கையில், மரபுக்கவிதைகளில் எதுகை, மோனை, சந்தம் இருப்பதால் அவை இலகுவில் மனதிற் பதிகின்றன. புதுக்கவிதைகள் அப்படியல்ல..... என்ற கருத்தைச் சொன்னேன். ஜனாப் சாகுல்கமீது அவர்கள் நீண்ட நேரம் என்னோடு கவிதை பற்றி மனம் விட்டுப் பேசினார்.

இன்குலாப், வைத்தீஸ்வரன், மேத்தா ஆகியோர் செய்யுள் இலக்கணம் தெரிந்த வித்தகர்கள். அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணத்தை மீறியிருக்கிறோம் என்ற விவகாரம் தெரிந்திருக்கும். ஆனாற் புதுக்கவிதை எழுதும் பலருக்கு இது தெரியாது.

கவிதை படைக்க யாப்பிலக்கணம் படித்துத்தான் ஆகவேண்டும் என்பதில்லை. இளங்கவிஞர்கள் உடனடியாகச் செய்யுள் இலக்கணம் படிக்க வேண்டும் என்றோ, அதைப் படித்து விட்டுத்தான் கவிதை எழுத வேண்டும் என்றோ நான் சொல்லவும் மாட்டேன். மட்டக்களப்பு நாட்டுப் பாடல்களைப் பாடிய கவிஞர்கள் யாப்பிலக்கணம் படித்தவர்களா? உள்ளத்துணர்வை மொழி மூலம் வெளிப்படுத்த அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஒருதாளலயத்தோடு அதனை வெளியிட்டார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அதை அறிந்தால் புதுக்கவிதைக்காரர்களும் யாப்பிலக்கணத்தைப் படித்தால் என்ன? அதில் என்னதான் சொல்லியிருக்கிறது என்று தேட வேண்டிய முடிவுக்கு வருவார்கள்.

நாம் இலக்கணத்தைக் கண்டு பயப்படத் தேவையில்லை. அது நிச்சயமாக நமக்கு ஒரு தடையோ, தளையோ இல்லை. இலக்கியங் கண்டதற்கு இலக்கணமியம்பல் நமது மரபு காலப் போக்கிற் புதுக்கவிதைகளுக்கும் யாப்பு எழுதப் படலாம். அதற்காக இப்போது இலக்கணம் படிக்காமல் இருக்கலாமா?

இத்தகைய எண்ணங்களோடுதான் நான் இளமைக் காலத்திற் படிக்கப்பிடிவாதமாக மறுத்த யாப்பருங்கலக் காரிகையை இப்போது படிக்கிறேன். சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரின் உரையுடனான தனலக்குமி புத்தக சாலைப் பதிப்பு நீண்டகாலமாகக் கைபடாமலே என்னிடமிருந்தது. இப்போதுதான் படிக்கிறேன். மற்றைய இலக்கண நூல்களைப் போலவே யாப்பருங்கலக் காரிகையும் ஜைன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது. நூலாசிரியர் பெயர் குணசாகரர்.

இந் நூலுக்கு முன்னுரை எழுதிய எம் பிராந்தியத்துத் தி.த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் தமது முன்னுரையில் 'தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்ற ஐந்திலக்கணங்களினையும் எழுதினாரெனக் கூறுவாரெனின் அற்றன்று. அவர் ஐந்திலக்கணம் புதிதாய் இயற்றினாரல்லர்'.

என நம்மை வியப்பிலாழ்த்திவிட்டுத் தொல்காப்பியருக்குப் பின் காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவினயர், நக்கீரர், நற்றத்தனார், மயேச்சர் ஆகியோர் செய்யுளிலக்கணம் பாடினர். காக்கை பாடினியாரைப் பின் பற்றியதே யாப்பருங்கலக் காரிகை என்கிறார்.

இதில் யாப்பு, இலக்கணம், காரிகை என்ற மூன்று சொற்கள் உள்ளன. காரிகையாவது சிலவகை எழுத்திற் பல்வகைப் பொருளை அடக்கி நினைத்திருத்தற்கு இயைபுடைத்தாக இயற்றப்பட்ட பாட்டு என்று பொருள் என்கிறார் உரையாசிரியர்.

**நூலின் அவையடக்கம்**

**தேனார் கமழ் தொங்கல் மீனவன் கேட்பத்**
**தென்னருவி கானார் மலர்த்தருந்தவன் சொன்ன**
**கன்னித்தமிழ் நூலை**
**யானாநடத்துகிறேனென்றெனக்கே நகைதருமால்**
**ஆனாவறிவினவர்**
**கட்கென்னாங்கொல்லென்றுதுமே.**

என்று வருவதால் பாண்டியன் கேட்டதாலேயே ஆசிரியர் நூலை எழுதினார் என்பது தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எழுத்துகளில்
உயிர்க்குறில் 5 எழுத்துகள்
உயிர்நெடில் 7 எழுத்துகள்
உயிர் மெய்க்குறில் 5x18 = 90எழுத்துகள்
உயிர் மெய்நெடில் 7x18 = 126 எழுத்துகள்

மெய் எழுத்துகளுக்கு யாப்பிலக்கணத்தில் மதிப்பில்லை என்பதைத் தெரிந்து கொண்டு உறுப்பியலில் இரண்டாவதான அசை பற்றி யாப்பருங்கலக்காரிகை சொல்வதைப் பார்ப்போம்.

ஆ : நெடிலானாய நேரிசை
ழி : குறிலாலாய நேரிசை
வெள் : குற்றெழுத்தடுத்தாலாய நேரிசை
வேல்: நெட்டெழுத்தடுத்ததாய நேரிசை

இப்படி நேரிசை நான்கு

வெறி : குறிலணையாலாய நிரையசை
சுறா : குறில் நெடிலாலாய நிரையசை
நிறம் : குறிலிணை ஒற்றடுத்ததாய நிரையசை
விளாம் : குறில் நெடிலாலாய நிரையசை
இப்படி நிரையசைகள் நான்கு.

சீர் பற்றி சொல்கையில்

தேமா புளிமா, கருவிளம் கூவிளம் சீர் அகவற்காம் என்றவர் அதை விரித்து

தேமா : நேர் நேர் : புளிமா : நிரை நேர்
கருவிளம் : நிரை நிரை : கூவிளம் : நேர் நிரை

இவ்வாறே தேமாங்காய், புளிமாங்காய் கருவிளங்காய், கூவிளங்காய் என்னும் காய்ச்சீர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி கூவிளங்கனி என்ற கனிச்சீர்களும் உள்ளன.

இவைபோலவே தேமாந்தண்ணிழல், புளி மாந்தண்ணிழல், கருவிளந்தண்ணிழல், கூவிளந் தண்ணிழல்

தேமா நறுநிழல் புளிமா நறுநிழல், கருவிள நடநறுநிழல், கூவிளநறுநிழல்

தேமா நறும்பூ, புளிமா நறும்பூ, கருவிள நறும்பூ, கூவிழ நறும்பூ என்னும் சீர்களையும் சொல்கிறார். இந்தச் சீர்களுக் கெல்லாம் முதலிற் சொன்ன வாய்ப்பாட்டைப் பிரயோகித்து அசைகளைக் கண்டு பிடித்துவிடலாம்.

அடுத்ததாக தளையைப் பற்றிச் சொல்கையில் சீரோடு சீர் சேர்க்கும். அடியிலே சீர்களின் இடைநின்று இசைத் தொடர்ச்சியுற அவைகளைப் பிணிப்பது தளையாகும் என்றார். இவை வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை என வரும் தளைகள் இரண்டு முதலான சீர்களைக் கொண்டன. தளையும் போது, வரும் போது நின்ற சீர் இன்னசீர் என்றும், வருஞ் சீரின் முதல் அசை என்ன அசை என்றும் பார்த்தல் வேண்டும். கசடறக் கற்பவை என்பதில் கருவிளம் விளச் சீரின் முன்நேரசை வந்தது.

இப்படியாகப் பல தளைகளால் அடி வருகிறது. குறள் ஈரடிகளாலும், சிந்து மூன்றடிகளாலும் வெண்பாவும் விருத்தப் பாவும், நான்கடிகளாலும் ஆனவை என்பது நம் எல்லோருக் கும் தெரியும். ஒவ்வோரடியும் எத்தனை சீர்களால் ஆனவை என்பதைத் தெரிந்து கொள்ள யாப்பிலக்கணம் துணை செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரைத்த சாலிகை**
**நிரைந்த போனிரைந்**
**திரைப்ப தேன்களே**
**விரைகொள் மாலையாம்**

என்பதில் ஒவ்வோர் அடியிலும் இரண்டு சீர்கள் உள்ளன.

**கருகிமேற் றுறக்கத்தினோ**
**டரிது வேற்றுமை யாகவே**
**கருது வேற்றடங் கண்ணினாய்**

என்ற சிந்திலே ஒவ்வோர் அடியிலும் மூன்று சீர்கள் உள்ளன. இப்படியாக நாற்சீர், அறுசீர், எழுசீர், எண்சீர்களிலும் விருத்தப்பாக்கள் உண்டு.

தொடை என்ற பகுதியில் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என ஐந்தை யாப்பிலக்கணம் சொல்கிறது.

**தண்டலை மயில்களாடத்**
**தாமரை விளக்கந்தாங்கக்**
**கொண்டல்கள் முழவினேங்கக்**
**குவளை கண்விழித்து நோக்க**

என்ற கம்பரது பாடலிற் தண்டலை, கொண்டல் என்பன எதுகை.

தண்டலையில வரும் த வுக்கு இன எழுத்தான தாமரை யில் வரும் தா மோனை இவ்விடயங்களைப் பல கவிதை களைப் படித்தே கண்டுபிடித்து விடலாம்.

செய்யுளியல் பல்வேறு வகைப்பட்ட பாடல்களின் இலக்கணங் கூறுகிறது. வெண்பா, குறள் வெண்பா, நிரையசை வெண்பா, நேரிசை வெண்பா, இருகுறள் நேரிசை வெண்பா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஃறொடை வெண்பா என்னும் வெண்பா வகைகளையும் அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்களும் கலித்தாழிசை, கலித் துறை கலிவிருத்தம் என்னும் கலிப்பாக்களும் யாப்பருங்கலக் காரிகையில் உதாரணந் தந்து விளக்கப்படுகின்றன.

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறையே எனச் சொல்லி அதற்குத் தந்த உதாரணத்தைப் பார்ப்போம்.

**யானுந்தோழியும் ஆயமும் ஆடும் துறை நண்ணாது**
**தானுந்தேரும் பாகனும் வந்தென் நலன் உண்டான்**
**தேனும் போல்வன சொல்லிப் பிரிவானேல்**
**கானும் புள்ளும் கைதையு மெல்லாங்கரியெனக்கே**

இப்படியாக நான் ஏற்கனவே படிக்க மறுத்துவிட்ட யாப்பருங்கலக் காரிகையைத் தற்போது எந்தக் குருவுமில்லாது சுயமாகப் படித்துக் கொண்டேயிருக்கிறேன். படிக்கையில் காரிகை இலக்கணத்தைக் கண்டு எவருமே பயங் கொள்ளத் தேவையில்லை என எனக்குத் தோன்றுகிறது.

கவிதை எழுதிக் கொண்டிருக்கும் நமது கவிஞர்களும் யாப்பருங்கலக்காரிகை என்னதான் சொல்கிறது? நமது கவிதை மரபின் இலக்கணம் என்ன? என்பதை அறிந்து கொள்ள யாப்பிலக்கணம் படிக்க வேண்டும். யாப்பருங்கலக்காரிகை. யாப்பருங்கலம் என்ற நூல்களைப் படிப்பது கஷ்டமாக இருந்தால் கொக்கூர்க்கிழான் என்ற கா.வை. இரத்தினசிங்கம் அவர்கள் எழுதிய யாப்பியல் என்ற ஐம்பது பக்கச் சிறு நூலையாவது படிக்க வேண்டும். அதை விட்டு விட்டு, நாம் இலக்கணத்தை மீறிக் கவிதை எழுதுகிறோம் எனத் தம்பட்ட மடிப்பதில் எந்த அர்த்தமுமில்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டியலங்காரம்

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னே சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்புப் படித்துக் கொண்டிருக்கையில் குசேலோபாக்யானம், நளவெண்பா, வில்லிபாரதம், கம்பராமாயணம் ஆகியவற்றின் சில பகுதிகள் இலக்கியப் பாடமாக அமைந்திருந்தன. அவைகளைப் படிப்பித்த ஆசிரியர் அப்பாடல்களில் வரும் உவமையணி, உருவக அணி, தற்குறிப்பேற்ற அணி, வேற்றுப் பொருள்வைப்பணி என்ற அணிகள் சிலவற்றை எமக்கு விளக்கினார். அந்த விளக்கம் தற்போதும் பாடசாலைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால் பாடசாலையிற் படித்த சில அணிகளோடு மட்டும் செய்யுள் அணிகள் தீர்ந்துவிடவில்லை. முப்பத்தைந்துக்கு மேற்பட்ட செய்யுள் அணிகள் இருப்பதாகத் தண்டியலங்காரம் சொல்கிறது.

சமீபத்தில்தான் தண்டியலங்காரத்தைப் படித்தேன். இல்லை, படித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் தண்டியலங்காரம் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் 1938 இலேயே பதிப்பிக்கப்பட்டு விட்டது (அதற்கும் முந்திய பதிப்புகளும் இருக்கலாம், நான் காணவில்லை) 1992 இல் அதன் பதினெட்டாவது பதிப்பு வெளிவந்தது. அந்தப் பதிப்பைத்தான் நான் படிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி**
**சிந்தைவைத்தியம்புவன் செய்யுட்கணியே**

என்ற வணக்கச் செய்யுளோடு தொடங்குகிறது தண்டியலங்காரம். அணிகளைப் பற்றிச் சொல்ல முன்னர் தனி நின்று பொருள் முடியும் முத்தகச் செய்யுள், பலபாட்டு ஒரு வினை கொள்ளும் குழசச் செய்யுட்கள், தொகை நிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் ஆகியவற்றிற்கு இலக்கணம் சொல்கிறது.

தொடர்நிலைச் செய்யுட்கள் பலவற்றால் அமைந்ததே காப்பியம். ஆகவே தொடர் நிலைச் செய்யுட்களால் அமையும் பெருங்காப்பியத்திற்கும் இலக்கணம் சொல்கிறார் தண்டியாசிரியர். அதனைப்

**பெருங்காப்பிய நிலை பேசுங்காலை**
**வாழ்த்து வணக்கம் வரும் பொருள் இவற்றின் ஒன்று**
**ஏற்புடைத்தாகி முன்வரவியன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி**

**தன்னிகரில்லாத்தலைவனை உடைத்தாய்**
**மலைகடல் நாடு வனக்கடல் பருவம்**
**இருசுடர் தோற்றம் என்(று) இனையென புனைந்து**
**நன்மணம் புணர்தல் பொன்முடிகவித்தல்**
**பூம்பொழில் நுகர்தல் புனல்விளையாடல்**
**தேன்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்**
**புலவியற் புலத்தல் கலவியிற் கலத்தலென்(று)**
**இன்னை புனைந்த நன்னடைத்தாகி**
**மந்திரந்தூது செலவு இகல் வென்றி**
**சந்தயிற் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்**
**பரிச்சேதம் எனும் பான்மையின் விளக்கி**
**நெருங்கிய சுவையும் பாவமும் விளங்க**
**கற்றோர் புனையும் பெற்றியதென்க**

என்ற சூத்திரத்தாற் சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பெருங்காவியங்கள் இன்றைக்கு மிக அபூர்வம். காப்பியங்களின் இடத்தை இன்று நாவல்கள் பிடித்துக் கொண்டன. நாவல் எழுதுபவர்கள் இந்தச் சூத்திரத்தின் நிபந்தனைகளின்படிதான் நாவல் எழுதவேண்டும் என்று எந்தப் பண்டிதரும் இன்றைக்குச் சொல்ல மாட்டார். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் மிகச் சாதாரணமான மனிதன் கூட நாவலின் கதாநாயகனாக தன்னிகரில்லாத் தலைவனாக வரலாம்.

இப்படியாகப் பெருங்காப்பிய இலக்கணத்தைச் சொல்லிய தண்டியாசிரியர் அணிகளை ஒவ்வொன்றாகச் சொல்லி ஒவ்வோர் அணிக்கும் உதாரணம் தந்து விளக்குகிறார்.

தன்மை அணிக்குப் பொருள், குணம், சாதி, தொழில் என்றவர் அதற்கு ஒரு வெண்பாவை உதாரணம் தருகிறார்.

**சூழ்ந்து முரன்று அணவி வாசம் துதைந்து ஆடித்**
**தாழ்ந்து மதுநுகர்ந்துதான் அருந்தும் - வீழ்ந்த**
**பெரும்**
**பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை**
**வாசத்தார் நீங்காத வண்டு.**

நான் உதாரண வெண்பாவை மீண்டும் படிக்கிறேன். அதனைப் பாடியவர் யார் எனத் தெரியாது. தண்டியலங்கார உரைகாரரும் அதைக் குறிப்பிடவில்லை. ஆனால் அப்பாடலை எப்போதோ படித்தது போலிருக்கிறது. மீண்டும் படிக்கிறேன். காலஞ்சென்ற கு. அழகிரிசாமி அவர்கள் ஒரு கட்டுரையில் இப்பாடலைக் கையாண்டிருப்பது நினைவுக்கு வருகிறது.

பரஞ்சுடரின் பைங்கொன்றை மாலையில் உள்ளபூவை வண்டு சுற்றிச் சுற்றி முரல்கிறது. அணைகிறது, வாசம் துய்க்கிறது. பூவிலமர்ந்து தேனைக் குடிக்கிறது. அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பூவைவிட்டு விலகவே முடியவில்லை என்ற இப்பாடலின் பொருளை, மனைவியைப் பிரிந்து செல்லவிருக்கும் கணவன் ரெயிலுக்குச் செல்ல விருக்கும் கடைசி வினாடிவரை அவளைச் சுற்றிச் சுற்றி வந்து ஏதேதோ பேசி அணைந்து, முகர்ந்து என்னென்னவெல்லாமோ செய்து காலம் கடத்துகிறான். அந்த வண்டின செய்கையோடு இந்தக் கணவனின் செய்கைகளை ஒப்பிட்டு மிக்க ரசமான கட்டுரை எழுதியிருந்தார் அழகிரிசாமி. அதிருக்கட்டும்

உவமை அணி பண்பு, தொழில், பயன் என்னும் பொருள்களைக் கொண்டது என்ற உரையாசிரியர் தெரிதரு தோற்ற உவமை அணிக்கு

**தாமரை நாண் மலரும் தண்மதியால் வீறழியும்**
**காமர் விரையும் கறைவிரவும் ஆமிதனால்**
**பொன்னைமயக்கும் புரைசுணங்கினாள் முகமே**
**என்னை மயக்குமிது**

என உதாரணம் தருகிறார்.

உவமையால் வருவதனைப் பொருளாக்கி பொருளால் வருவதனை உவமையாக்கும் உவமையை விபரீத உவமை என்கிறார்.

குணத்தாலும் சாதியாலும், பொருளாலும் குறித்த ஒரு சொல் ஓரிடத்து நின்று சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது எனத் தீவக அணிக்கு விளக்கந் தருகிறார். உதாரணமாக,

**சரியும் புனை சங்கும் தண்டளிர் மேல்மான**
**வரியுந் தண்கடல் சூழ் வம்பும் - திருமாண**
**ஆரந்தழுவுந் தடந்தோள் அகளங்கன்**
**கோரந்தழுவும் கொடி**

என்ற வெண்பாவைத் தருகிறார். இவ்வெண்பாவிற் சரியும் என்ற பதம் வளைகள் சரிந்தன அழகு சரிந்தது. கச்சுச் சரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பலவிடத்துச் சொற்களோடும் சரியும் என்ற பதம் பொருள் கொள்வதாக விளக்குகிறார் உரையாசிரியர்.

அணிகளை விளக்கும் பகுதியைத் தாண்டி மேலே சென்றாற்தான் சங்கடம் வருகிறது. வீரமாமுனிவர் தேம் பாவணியில்

**மாலைமேவுவேங்கை பற்றி வண்டுணாதெனமனம்**
**மாலைமேவு வேங்கை பற்றி வண்டுணாதெனமனம்**
**மாலையாக வீங்குவந்து வாசமாரும் முல்லையார்**
**மாலையாக வீங்குவந்து வாசமாரும் முல்லையார்**

என்று பாட நாலடியார் பாடிய ஜைன முனிவர்களில் ஒருவர்

**வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்**
**வைகலும் வைகலை வைகும்என்றின்புறுவர்**
**வைகலும் வைகல் தம் வாழ்நாள்மேல் வைகுதல்**
**வைகலை வைத்துணராதார்**

எனப் பாடினார். இப்படியாக எழுத்துகளின் தொகுதி பிறவெழுத்தாலும், சொல்லாலும் இடைவிடாதும் இடைவிட்டும், வந்து பெயர்ந்தும் வேறு பொருளை விளக்குவது மடக்கு என்கிறார் உரைகாரர்.

இதே போலச் சித்திரக் கவிகளான கோமூத்திரி, கூடசதுக்கம், மாலை மாற்று, நாகபந்தம் ஆகியன படங்களோடு இருக்கின்றன. இந்தச் செய்யுள் வகைகளும் மடக்குகளும் தேவையற்றவை. ஆனால் விடுப்புப் பார்க்க விரும்புவோர் அவைகளையும் படித்துப் பார்க்கலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்மன யாத்திரை

**சிறுகதைத்** தொகுதி வெளியிடுபவர் எவரும் அத்தொகுதியிலுள்ள ஏதாவதொரு கதையின் தலைப்பையே நூலின் பெயராகவும் வைத்து விடுவார்கள். எனது தோணி, ஒரு காவியம் நிறைவு பெறுகிறது என்ற சிறுகதைத் தொகுதிகளின் பெயர்களும் அந்த மரபைப் பின்பற்றியவைதான்.

புதுமைப் பித்தன் கதைகள், ரகுநாதன் கதைகள், அழகிரிசாமி கதைகள் என்று கதாசிரியர்களின் பெயரையே நூற்பெயராகக் கொண்ட சிறுகதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

ஆனால் இந்த மரபுகளை மீறியும் ஈழத்தில் ஒரு சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது. அதன் ஆசிரியர் கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த ஓர் இளைஞர். அவர் 1988 ஆம் ஆண்டில் தனது முப்பத்திரண்டாம் வயதில் வெளியிட்ட சிறுகதைத் தொகுதியின் பெயர் உள்மன யாத்திரை.

அந்தச் சிறுகதைத் தொகுதிக்கு முன்னரை எழுதிய (முன்னுரை என நான்தான் சொல்கிறேன். எழுதியவர் அப்படிச் சொல்லவில்லை) எம்.ஏ. நுஃமான் தனக்குள்ளே யாத்திரை செய்து, தனக்கு உண்மையாக இருந்து, தன் அனுபவங்களை, உணர்வுகளைக் கலையாக்குபவன் ஒரு நல்ல கலைஞன். உமா வரதராஜனும் இத்தகைய கலைஞன்தான். தன் தொகுதிக்கு உள்மன யாத்திரை என்று பெயர் வைத்திருக்கிறார். இத் தலைப்பில் ஒரு கதையும் இத் தொகுப்பில் இல்லை என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கதாசிரியர் பிறந்த ஆண்டிற்தான் பண்டாரநாயக்கா அவர்கள் இந்நாட்டின் பிரதமரானார். தனிச்சிங்களச் சட்டமும் அந்த ஆண்டிற்தான் வந்தது. இந்தக் களேபரங்களுக்கிடையே ஈழத் தமிழ் கொம்யூனிஸ்த்துக்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைத் தொடக்கி, இரண்டு கலாநிதிகளை ஈழத் தமிழ் இலக்கியத்தின் அறங்காவலர்களாக ஆக்கி இலக்கியக் காடைத்தனம் பண்ணத் தொடங்கினார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் கதாபாத்திரங்கள் ஏதோ ஒரு வகையிற் போர்க்கோஷம் எழுப்ப வேண்டும். முரண்பாடுகளை உடைத்துத் தகர்க்க வேண்டும். கதையிலே ஒருமுற்போக்குப் புரட்சியை நடத்திக் காட்டவேண்டும். ரஷ்யக் கதைகளில் வரும் பாத்திரங்களின் கபிலநிறக்கண்கள், கதாபாத்திரங்களுக்கு இருக்க வேண்டும். அவர்களைப் போலக் கைமுஷ்டியை உயர்த்த வேண்டும். உழைப்பு, சுரண்டல், பசி, சாதித்திமிர், ஒடுக்குமுறை என்பன போன்ற சொற் பிரயோகங்கள் கதையிற் பொருத்த மில்லாவிட்டாலும் இடம்பெறவேண்டும். இப்படியெல்லாம் எழுதும் எழுத்தாளன் முற்போக்கு எழுத்தாளனாக அபிஷேகம் பண்ணப்பட்டு விடுவான்.

இந்த வல்லடி வழக்குகளிற் சிக்கிக் கொள்ளாமல் உமா வரதராஜனின் கதைகள் வெளிக் கொணரும் சமூகத் தாக்கமும், அவை ஏற்படுத்தும் கலைப் பாதிப்பும் மிக ஆழமானவை. பேராசிரியர் நுஃமான் அவர்கள் குறிப்பிடுவதைப் போல

சமூகத்தில் ஊடுருவியுள்ள பொய்மையை, போலித் தனங்களை, முரண்களை அவர் படைப்புக்கள் அம்பலப் படுத்துகின்றன. அவற்றோடு ஒத்தோட மறுக்கும், அவற்றுக் கிடையே அகப்பட்டு நசுங்கும் மனித உள்ளத்தின் அவஸ்தையை உணர்த்துகின்றன. அந்த அவஸ்தையை வாசகன் மனத்திலும் தொற்றவைக்கின்றன. இதுவே அவரது கலையின் வெற்றியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் முற்போக்கு விமர்சகர்களும், எழுத்தாளர்களும் கொள்கைப் பிரகடனத்திற்காக எழுதப்படாத, தனி மனித உணர்வுகளை மட்டும் சித்திரித்து எழுதப்பட்ட இந்தக் கதைகளைக், கதைகளே அல்ல என்று மறுக்கலாம்.

தனி மனித உணர்வு என்று நான் குறிப்பிடுவது கதைகளில் உமா வரதராஜன் தன்னை வெளிக்கொணர்ந்ததையும்தான். தொலைவிற் தெரியும் ஒற்றை நட்சத்திரம் என்ற கதையில் வரும் வரதன், சின்னஞ்சிறகுகள் என்ற கதையில் வரும் பத்மநாதன், மாலை சூட்டிகளில் செங்கா, பெரிய வெள்ளியும் புனித ஞாயிறுவிலும் வரும் ஸ்வாமி,அப்பா இல்லாத ஊரில் வரும் வரதராஜ் - எல்லாருமே உமா வரதராஜன்தான். தன்னையே தன் படைப்புகளில் வெளிப் படையாக இனங்காட்டிக் கொண்டு தன்னையே பாத்திரமாக்கிக் கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் மிகச் சிலர்தான். அந்தச் சிலரில் உமா வரதராஜனும் ஒருவர்.

பதின் மூன்று கதைகள் கொண்ட இத் தொகுப்பில் எனக்கு மிகவும் பிடித்த கதை சின்னஞ்சிறகுகள்தான். அந்தக் கதையில் வரும் கிண்டலும் நையாண்டியும் என்னை மிகவும் கவர்பவை.

செம்பறவைகள் என்ற இலக்கிய அமைப்பு சஞ்சிகை ஒன்றின் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழைத் தந்தபோது அவர்களின் செட்டையடிப்பு எவ்வளவு உயரம் வரைக்கும் என்றே பத்மநாதன் சிந்தித்தான்.

சிந்தித்துக் கொண்ட பத்மநாதன் கூட்டத்திற்குப் போகின்றான். கூட்டம் நடைபெறும் மண்டபம் அவனுக்குப் பிடித்தமானது. அதன் காரணம் எதிரில் இருக்கும் குளிர்பான விற்பனை நிலையந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இலக்கியக் கூட்டமல்ல. அது நடைபெறும் மண்டபத்தின் எதிரிலிருந்த குளிர்பானக் கடைதான் என்பது எத்தகைய நையாண்டி?

ஆகு பெயர்களில் இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர் என்று படித்திருக்கிறேன். இந்த நையாண்டி இருமடிக் குத்தலா? மும்மடிக் குத்தலா?

அந்தக் குளிர்பான நிலையத்துட் புகுந்த பத்மநாதன் இரண்டு லொறிகளுக்கிடையே நடந்து டீசல் மணம் குடித்து, கருந்தெருக் கீறலைக் கடந்து மண்டபப் பக்கமாய்ப் போய்ச் சேர்ந்தான். உமா வரதராஜன் மேலும் எழுதுகிறார்.

இவனை வரவேற்கிற மாதிரி வாசற் பக்க மதிலில் ஒற்றையாக ஒரு காகம் உட்கார்ந்திருந்தது. விதவைக் காகம் என மனதுக்குள் ஒரு தடவை சொல்லிப் பார்த்தான். ஆண் காகமோ, பெண் காகமோ என்று நிச்சயம் கொள்ளாத நிலையில் விதவைக் காகமாக அதைக் கற்பனை பண்ணு வதிலும், அதற்காக அனுதாபப் படுவதிலும் ஒருவித சுகம் வந்தது இவனுக்கு.

சும்மா இருக்கும் திறனற்ற கதாசிரியரின் மனது ஒற்றைக் காகத்தை எப்படியெல்லாம் கற்பனை பண்ணுகிறது?

மேலும் அவர் எழுதுகிறார்.

அரிவாளோடு ஒரு மனிதனை வரைந்து முகப்பில் வைத்திருந்தார்கள். களை கொல்லிக்கோ, கிருமிநாசினிக்கோ விளம்பரம் போல இருந்தது அது.

அரிவாள் செம்பறவைகளின் அதாவது கொம்யூனிஸ்ற் களின் சின்னம்! கூட்டம் நடத்தும் செம்பறவைகள்தான் அதை மனிதனோடுசேர்த்து வரைந்திருந்தார்கள். அந்தப் பம்மாத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்கள் வரைந்த சித்திரம் கிருமி நாசினி, களை கொல்லி விளம்பரமாகத் தோன்றுகிறது வரதராஜனுக்கு.

தெய்வசுந்தரம் என்ற ஆசிரியர் மேடையேறிப் பேசுகிறார். அவர் மூலமாகத்தான் அந்த மண்டபம் செம்பறவைகளுக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆகவேதான் பக்காக் கிறிஸ்தவரான அவரும் செம்பறவைகளின் கூட்டத்திற் பேசுகிறார். இந்தத் தெய்வசுந்தரம் மாஸ்டர் கல்முனை வெஸ்லிக் கல்லூரி ஆசிரியரான காலஞ்சென்ற அழகையா மாஸ்டரா?

உள்ளூரில் பிரபலமாகி இங்கே தலைமை தாங்க வந்த இளம் வக்கீல் இப்போது பேச ஆரம்பித்தான். இவன் எப்படியும் எம்.பி. ஆகிவிடுவான். அழகாய் இருந்த அந்த இளைஞன் தன்னைப் போலவே அழகு மிகுந்த சொற்களை உதிர்க்கவும் தெரிந்து கொண்டிருந்தான், என்று உமா வரதராஜன் குறிப்பிடுவது தற்போதைய மந்திரி கௌரவ அஷ்ரப் அவர்கள்தான் என்று எனக்குப்படுகிறது.

முதற் பிரதி வாங்கச் செம்பறவைகள் தெரிந்தெடுத்தது ஒரு நகரசுத்தித் தொழிலாளியை. அது ஒரு விளம்பர உத்தி என்று பத்மநாதன் தீர்மானித்திருந்தான். ஆனால் அந்தத் தொழிலாளியின் பெயரின் கீழ் அடைப்புக் குறிக்குள் நகர சுத்தித் தொழிலாளி எனக் குறிப்பிட்டிருந்தது வரதராஜனுக்குப் பிடிக்கவில்லை. அதை இப்படிக் கிண்டலடிக்கிறார்.

நல்ல வேளை விபச்சாரி ஒருத்தியை விட்டுச் சஞ்சிகைப் பிரதியை வாங்குவிக்கும் எண்ணம் இவர்களுக்கு இல்லாமற் போனது. அப்படி ஏதேனும் நடந்தால் அழைப்பிதழில் அடைப்புக் குறிக்குள் விபச்சாரி என இவர்கள் போட்டு வைக்க, அவள் மேடையில் ஏற, இவளை இன்னார் என அடையாளங் கண்டு சிலர் நெருங்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையிலேயே பாய்விரித்துக் கொடுக்கும் சங்கடம் செம்பறவைகளுக்கு ஏற்பட்டிருக்கும்.

இப்படியாகச் சஞ்சிகை வெளியீட்டு விழாவிற்கு ஆட்சேர்க்க எடுத்த நிகழ்வுகளான கவியரங்கு, பாட்டும் கூத்துமாகிய கலையரங்கு எல்லாவற்றையுமே கிண்டலடிக்கிறார் கதாசிரியர்.

அவர் குறிப்பிடும் மண்டபத்தில் நடந்த சில இலக்கியக் கூட்டங்களுக்கு நானும் போயிருக்கிறேன். அழகையா மாஸ்ரரையும், அப்போதைய (இளம்) எழுத்தாளரான கௌரவ அமைச்சர் அஷ்ரப் அவர்களையும், கதையில் வரும் டாக்ரர் ஆன, முருகேச பிள்ளை அவர்களையும் இக் கதையில் நான் காண்கிறேன். சின்னஞ்சிறகுகள் போன்ற பதின் மூன்று அருமையான கதைகள் இத் தொகுதியில் உள்ளன. சிறுகதை எழுத முனையும் ஆரம்ப எழுத்தாளர்கள் இத் தொகுதியை அவசியம் படிக்க வேண்டும். ஏனென்றால் ஈழத்துச் சிறுகதைகள் இன்னமும் சோஷலிசயதார்த்தத்திற்கு அப்பால் எட்டியும் பார்க்கவில்லை. சோஷலிஸ யதார்த்தம் உலக நாடுகளில் வழக்கொழிந்து விட்டது என்ற விவகாரமும் பலருக்கும் தெரியாது. இந்த நிலையிற் சோஷலிஸ யதார்த்தத்திற்கப்பாலும் கதைகள் எழுதலாம் என்பதைச் செவ்வனே காட்டும் ஒரே ஒரு சிறுகதைத் தொகுதி உள்மன யாத்திரையே. உள்மன யாத்திரைக் கதைகளை மட்டும் மல்ல பின்னாற், சஞ்சிகைகளில் வெளியான ஒரு அரசனின் வருகை முதலான கதைகளையும் இளம் எழுத்தாளர்கள் படிக்க வேண்டும் என்பது என் ஆசை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்க சூளாமணி

**நாற்பதுகளின்** பிற்பகுதியிற் சென்னையில் எழுத்தாளர் ஒன்றுகூடல் ஒன்று நடந்தது. வந்திருந்த வடநாட்டு எழுத்தாளர்களுக்குத் தமிழக எழுத்தாளர் ஒருவர் தமிழ் எழுத்தாளர்களை நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், கவிஞர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு வந்தாராம். வட நாட்டு எழுத்தாளர் ஒருவர் உங்களில் நாடக ஆசிரியர் எவருமே இல்லையா? என்று கேட்டாராம். அறிமுகம் செய்து வைத்த எழுத்தாளர் தயங்கி நிற்க, ஆங்கிலத்தில் எழுதும் தமிழரான மஞ்சேரி எஸ். ஈஸ்வரன் அவர்கள் இனிமேற்தான் பிறக்கவேண்டும் என்றாராம்.

உண்மைதான். மஞ்சேரி ஈஸ்வரன் அப்படிச் சொன்ன தற்காக நாம் ஆத்திரப்படத் தேவையில்லை. ஏனென்றால் நம்முள் ஆங்கிலேயனான ஷேக்ஸ்பியருடையதைப் போலவோ, பிரான்சியனான மோலியருடையதைப் போலவோ, நோர்வேஜியனான ஹென்றிக் இப்சனுடையதைப் போலவோ, ஏன் சமஸ்கிருத நாடகாசிரியனான காளிதாஸனுடையதைப் போலவோ ஒரு நாடகத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம் மஞ்சேரி ஈஸ்வரனுக்குத் தெரியாதிருக்கலாம். நமது பழந்தமிழ் நாடகங்கள் எல்லாமே அழிந்து விட்டன.

இந்தக் குறைபாட்டைப் போக்கத்தான், அடியார்க்கு நல்லார் எழுதிய சிலப்பதிகார உரையில் ஆங்காங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் நாடக இலக்கண முடிபுகளை ஆதாரமாகக் கொண்டு, விபுலாநந்த அடிகளார் 1926 ஆம் ஆண்டில் மதங்க சூளாமணி என்ற ஆராய்ச்சி நூலை எழுதினார். ஆனால், மதங்க சூளாமணி ஒரு நாடகத் தமிழ் நூல் என்றுதான் அடிகளார் அதற்குப் பேரிட்டார். அந்நூலை 1987 இல் பிரதேச அமைச்சராக இருந்த செ. இராசதுரை தம் அமைச்சின் மூலம் மீண்டும் பதிப்பித்தார்.

நூலின் முன்னுரையில் அடிகளார் :-

**அந்தணர் வேள்வியோடருமறைமுற்றுக**
**வேந்தன் வேள்வியோடியாண்டு பலவாழ்க**
**வாணிகரிரு நெறி நீணிதிதழைக்க**
**பதிணெண்கூலமு முழவர்க்குமிகுக**
**அரங்கியற் பொருளை நிரம்பிவினைமுடிக**
**எனயாம்**
**மங்கல நல்லுரை வழிமுறையியம்புதும்**
**திங்களங்குழவி சேர்த்தியதிருமுடி**
**ஐங்கரன் சித்திவினாயகன்**
**செங்கதிர்புரைகழற் சேவடி தொழுதே**

என்ற அடிகளாரின் காப்புச் சொய்யுளைப் படித்ததுமே அன்னாரது பழந்தமிழ் இலக்கிய அறிவைக் கண்டு மலைக்கிறோம். நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் என்ற இளங்கோ அடிகளாரை யாம் மங்கல நல்லுரை வழிமுறையியம்புதும் என்ற வரிகளில் மீண்டும் காண்கிறோம். விபுலாநந்த அடிகளார் மேலும் எழுதுகிறார்: மதங்கர் - கூத்தர் அன்னாருக்கு ஒரு சிரோரத்தினம் போன்றாரை மதங்க சூளாமணி யெனல் பொருத்தமாகும்.

அடிகளார் ஆங்கில நாடகக் கவியாகிய ஷேக்ஸ்பியரைத்தான் மதங்க சூளாமணி என்கிறார் என்பது முன்னுரையின் மூலம் நமக்குத் தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேக்ஸ்பியர் உலகவாழ்க்கை முழுவதையுமே ஒரு நாடகமாகக் கற்பித்து அதனை மதலைப் பருவம், பாலப் பருவம், யௌவனப் பருவம், வீரப் பருவம், தீதிப் பருவம், வயோதிபப் பருவம், இறுதிப் பருவம் எனப் பாகுபடுத்துகிறார். அதைக் கூறும் ஷேக்ஸ்பியரின் பாடலைத் தமிழாக்கி எட்டுப் பாடல்களிற் கூறுகிறார் அடிகளார். அதன் பின்னர்,

நாடக இலக்கண முடிபுகளை ஆதாரமாக நிறுத்திச் செகசிற்பியருடைய நாடக நூல்களை ஆதாரமாகப் பொருத்தவைத்து, ஆராய்வது கருதிற்று இவ்வாராய்ச்சி நூல் என்கிறார்.

'புது நாடகம் அமைப்பதற்கு முற்படும் கவிஞருக்கு முறையறிந்தமைப்பதற்கு உதவியாகிய கருவி நூலுமில்லை'.

என அடிகளார் குறிப்பிடுவது. இந்நூல் அத்தகைய கருவிநூலாக அமைகிறது என்பதைச் சொல்லாமற் சொல்வதாக உள்ளது.

'முத்தமிழினொன்றாகிய நாடகத்தை வெறுத்தொதுக்காது அதனை ஆராய்ந்து சீர்ப்படுத்தி நல்ல நாடகங்களை அமைப்பது கற்று வல்லோரின் கடன்'.

என்று முடிகிறது முகவுரை.

நூல் உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது.

உறுப்பியலில் முத்தமிழின் தன்மை பற்றிக் கூறுகையில்,

'மொழிக்கு இயற்கையாக அமைந்த பொருள் கருவியாக உள்ளத்து நிகழ்ந்த மனக்குறிப்பைப் பிறருக்கப் புலப்படுத்துவது இயற்றமிழின் தன்மை' என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப் பொருளோடு இசையுஞ் சேர்ந்து வெளிப்படுத்துவது இசைத் தமிழின் தன்மை.

மொழிப்பொருள் இசை என்ற இரண்டினோடு அபிநயமும், சத்துவமும் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக்குறிப்பினைப் பிறருக்கும் புலப்படுத்துவது நாடகத் தமிழின் தன்மை.

என முத்தமிழுக்கும் இலக்கணம் கூறுகிறார்.

பின்னர் நாடகத்தின் முக்கிய உறுப்புகளான சுவை, குறிப்பு, சத்துவம், அபிநயம் நான்கினுக்கும் தனித்தனி பொருள் கூறி அவைகளோடு பொருள், சாதி, யோனி, விருத்தி என நான்கும், சொல், சொல்வகை, வண்ணம், விரி என வேறு நான்கும், சந்தி, சேதம் எனும் இன்னும் இரண்டும், சேர்ந்து எல்லாமாக நாடக உறுப்புகள் பதினான்கு என்கிறார்.

இவைகளைச் சொல்லிய பின்னர் சிலப்பதிகாரம் கூறும் பதினொரு வகைக் கூத்துகளையும் அவற்றின் இலக்கணங் களையும் சொல்கிறார்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகளுடன் நடுவுநிலை என்றதையும் சேர்த்து ஒன்பது சுவைகள் எனக்கொண்டு அவற்றில்

உவகை, நகை, மருட்கை என மூன்றும் அகத்திணை சார்ந்தது என்றும், மற்றவை புறத்திணை சார்ந்தவை என்றும் பிரிக்கிறார்.

அகத்திணை நாடகங்களை Comedy என்கின்றனர். நாம் அவற்றை சிறுகுடிப்பாட்டு, பண்ணைப்பாட்டு எனச் சொல்லலாம் என்கிறார் அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்திணை நாடகங்களை Tragedy என்கின்றனர். நமது பண்டையக் கொற்றவை, கந்தன் வெறியாட்டுக்களே ட்ரஜிடி என்கிறார் .விபுலாநந்தர்.

மேலும் உண்டாட்டுத் தெய்வமான டயோனிச்ஸ் என்பானுக்கு ஆட்டுக்கடாவைப் பலியிட்டு, அத்தெய்வத்தினது மெய்க்கீர்த்தியினையும் அவனைப் பரவும் வீரர்களது புகழையும் கூறுவதே டிகுஜெடி என்றும் ஆட்டு மறிக் கவிதை என்கிறார் அடிகளார்.

இவற்றோடு சிலப்பதிகாரம் குறிப்பிடும் 11 வகைக் கூத்துகளும் ஒவ்வொரு சுவைக்குமான அபிநயங்களும் உறுப்பியலிற் சொல்லப்படுகின்றன.

எடுத்துக்காட்டியலில் ஷேக்ஸ்பியரின் வரலாற்றை மிகச் சுருக்கமாகச் சொல்லியபின், நகைச்சுவைக்காக ஷேக்ஸ்பியரது Love Labour's lost ஐ 'காதல் கைம்மிக்க காவலன்' என்ற நாடகத்தையும்,

அவலம், இளிவரற் சுவைக்காக, ஆகுலராஜன் கதையை யும் (KING LEAR) அவலமும் வெகுளியும் உணர்த்தும் 'தீ நடபஞ்சிய தீமோன்' TIMON OF ATHENS ஐயும்

அவ்வலமும், உவகையும் உணர்த்தும் இரம்மியன சுசீலை ROMEO AND JULIET நாடகத்தையும்,

மருட்கையையும், உவகையையும் உணர்த்தும் பெரும்புயற் சரிதை THE TEMPEST யையும்

அச்ச உணர்விற்காக மகபதி MAGBETH சரிதையையும் பெருமித உணர்விற்காக வணிகதேய வர்த்தகன் MERCHANT OF VENICE, JULIUS CEASER ஆகிய இரு நாடகங்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுளிக்காக சேனாதிபதி சரிதை ANDRONICUS யையும்,

உவகைக்காக வேனிற்காதை as you like it, கூதிர்க்காதை THE WINTERS TALE ஆகிய இரண்டு நாடகங்களையும்,

உருகையையும், நகையையும் உணர்த்தும் கருதியது எய்திய காதலர் கதை TWELTH NIGHT ஐயும் எடுத்துக் காட்டுக்களாக எடுத்துக்கொண்டார்.

தாம் எடுத்துக்கொண்ட நாடகங்களின் ஆசிரியரைச் செக சிற்பியர் எனத் தமிழ்ப்படுத்தியது போல நாடகங்களில் வரும் மக்கட் பெயர்களையும், தெய்வப்பெயர்களையும் தமிழ் மரபிற்கியைய வேற்றுமைப்படுத்தியே எழுதினார். இந்த உத்தியை வீரமா முனிவரும் தமது தேம்பாவாணியிற் கையாண்டிருக்கிறார். இருவருமே தமிழுணர்ந்த, தமிழறிந்த துறவிகள்!

எடுத்துக் கொண்ட நாடகங்களின் நாடகத்திற்கு இன்றியமையாத சந்தி என்னும் உறுப்பு இன்னவாறு அமைந் துள்ளது என்பதை விளக்குகிறார். சந்தியின் பாகங்களான முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்பன நாடகங்களில் அமைந்துள்ளது விளக்கப்படுகின்றது.

பருதிமாற் கலைஞர் என்ற சூரிய நாராயண சாஸ்திரியாரும் தனது நாடகவியலில்

> இணைப்பொருளுடனே எடுத்தகதையின்
> தலைப்பொருள் சார்ந்து தழைத்து முதிர்வது
> நாட்டியக் கட்டுரைச் சந்தியாமதுதான்
> முகமே பிரதிமுகமே கருப்பம்
> விளைவு துய்த்தலோடை வகையாகும்

எனக் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்திற்கு வித்து ஒன்று உள்ளது. வித்தினை எடுத்து உழவினாற் சமைக்கப்பட்ட புழுதியினுள்ளே விதைத்தால் அது முளைத்து, நாற்றாகிக், கருப்பமுற்றி, விரிந்து கதிர் திரண்டு காய்தாழ்ந்து, முற்றிவிளைய, விளையப்பட்டபொருளைக் கடாவிட்டுத்தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வர். இம்மரபிலேயே நாட்டியக் கட்டுரையும் ஐவகைப்படும்.

முகமாவது : உழவினால் சமைக்கப்பட்ட பூமியுளிட்ட வித்து பருவஞ்செய்து முளைத்து முடிவது போல்வது.

பிரதி முகமாவது : அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற்றாய் முடிவதுபோல்வது.

கருப்பமாவது : அந்நாற்று முதலாய் கருவிருந்து பெருகித் தன்னுட் புதைந்து கருப்பமுற்று நிற்பது போல்வது.

விளைவாவது : கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டு காய்தாழ்ந்து முற்றி விளைவது போல்வது.

துய்த்தலாவது : விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டு போய் உண்டு மகிழ்வது போல்வது என அதற்கு விளக்கம் தருகிறார் அடிகளார். தான் எடுத்துக்கொண்ட நூல்களில் சந்தியின் ஐந்து பிரிவுகளும் எப்படி அமைந்துள்ளன என்பதை விளக்கிச் சில இடங்களில் நாடகங்களை வசனமாகவும், கவிதையாகவும் மொழிபெயர்த்துத் தருகிறார்.

இரம்மியன் சுசீலை சரிதையில் ஒரு பகுதியை ROMEO AND JULIET இரம்மியன்

மாதோ அணங்கோ
அகல் வானெழுந்து முகிலிடைப் பரந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டோர் மயங்கும் காமருமாட்சிய**
**தணங்கேயாதலி னிழங்கு மெல்லணங்கே**
**விண்ணவர் அணங்கினைவென்ற நின்மொழி**
**உண்ணுதற்கையோ உணருமென்னுள்ளம்**

**சுசீலை**

**இரம்மிய மலைய இரம்மிய மலைய**
**தந்தையை மறந்து தனிப்பெயர்துறந்திங்**
**கென்பால் வருதி என்னுள் நிறைந்த**
**காதலையுணர்ந் தெனக் கைப்பிடிப்பாயேல்**
**மன்னன் மகளெனும் பண்டைத்தொடர்பினை**
**நீங்கி நின்னுடன் வாழ்க்கை மேவுவனே.**

என மொழிபெயர்த்ததைப் படிக்கையில் அடிகளார் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் எல்லாவற்றையுமே மொழிபெயர்த்துத் தந்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஒழிபியல் என்ற மூன்றாவது பகுதியில் தசரூபன் என்ற வடமொழிப் புலவரியற்றிய தசரூபம் என்ற நாடக இலக்கண நூல் பற்றிச் சொல்லப்படுகின்றது.

இந்த ஒழிபியல் என்ற மூன்றாம் பகுதி படிக்கச் சிரமமாக இருந்தாலும் மதங்க சூளாமணி நாம் எல்லாரும் படிக்க வேண்டிய ஒரு நூல்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேம்பாவணி

தமிழிலே சைவம், வைஷ்ணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய பல்வேறு சமயங்களிலும் இலக்கியங்களுண்டு. கிறிஸ்தவ இலக்கியங்களின் முன்னோடியாக இத்தாலியரான பெஸ்கி என்ற வீரமா முனிவரே கருதப் படுகிறார். அவருக்குச் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னே இன்னோர் இத்தாலியரான டி நொபிலி என்ற தத்துவ போதகர் தமிழ் வசன நடையிற் பல நூல்கள் எழுதியிருப்பினும வீரமா முனிவரின் தேம்பாவணி அவைகளையெல்லாம் மிஞ்சி நிற்பதே அதற்குக் காரணமாய் இருக்கலாம். வீரமாமுனிவர்தான் தமிழ் வசனநடைக்கு முன்னோடி, அகராதியை முதலிற் தொகுத்தவவர் என்றெல்லாம் புகழ் படைத்தவரான வீரமாமுனிவர் தேம்பவாணி என்ற காப்பியத்தை மட்டுமல்ல, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, கருணாம்பரப் பதிகம் ஆகிய சிற்றிலக்கியங்களையும் செந்தமிழ் இலக்கணம் கொடுந்தமிழ் இலக்கணம் என்ற இலக்கண நூல்களையும் எழுதியுள்ளார். இத்தனைக்கும் இத்தாலியரான அவர் தமிழ் நாட்டுக்கு வந்து தனது முப்பதாம் வயதின் பின்னர் தமிழ் கற்று அதிலே பாண்டித்தியம் பெற்றவர்.

அவரின் தேம்பாவணி என்ற காவியம் மூன்று காண்டங்களையும், முப்பத்தாறு படலங்களையும் மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்களையும் கொண்டது. அக் காவியத்தைப் படிக்கையில், அதன ஆசிரியருக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்களிலும், திருக்குறள், நாலடியார் ஆகிய நீதிநூல்களிலும் உள்ள ஈடுபாடு நமக்குத் தெற்றெனத் தெளியவரும்.

தேம்பாவணியின் பாயிரத்தைப் படிக்கையிலேயே நாம் விரமாமுனிவருக்குக் கம்பரிலுள்ள ஈடுபாட்டைக் கண்டு கொள்ளலாம். தத்தம் காவியங்களைப் பாடுகையில் இரு கவிஞர்களுக் கிடையிலும் ஓர் ஒற்றுமையும் இருக்கிறது.

வீரமாமுனிவர் தமது வளன் கதையைப் பாடுதற்கு ஆகிர்த நகரத்து மேரி என்பவள் எழுதி வைத்த கதை மூலநூலாக இருந்தது. கம்பர் இராமாயணம் பாடுவதற்கும் வால்மீகி எழுதிவைத்த வடமொழி இராமாயணம் மூலநூலாக இருந்தது.

**நூலின் அவையடக்கத்தில் வீரமா முனிவர்**

**சூசையுற்றன வரங்கள் தூய்கடல் கடக்கல் இல்லால்,**
**ஓசையுற்று**
**ஒழுகு அமிர்தம் உடைகடல் என்ன நண்ணி,**
**பூசையுற்று**
**அதனை நக்கப்புக்கென உளத்தைத் தூண்டும்,**
**ஆசையுற்று**
**ஊமனேனும் அருங்கதை அறையலுற்றேன்.**

என்று பாடுகிறார். மகாகவி கம்பனும் பாற்கடலைப் பூனை நக்கியது போல என்று இதைத்தானே ஏற்கனவே பாடி வைத்திருக்கிறான். அவையடக்கமாக.

அவையடக்கமாக இப்படித் தன்னைத் தாழ்த்திக் கொண்டாலும் பாயிரத்தின் கடைசிப் பாடல்களைப் படிக்கையில் வீரமா முனிவர் மகாகர்வம் பிடித்த கவி என்று எண்ணத்தான் நமக்குத் தோன்றும். அவர் பாடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்திய நசையால்யானும் வரைந்தவை வரைந்து
காட்டத்திருந்திய தமிழ்ச் சொல் இல்லாற் செவிப்புலன்
கைப்ப
நல்லோர், பொருந்திய குறைகள் நோக்கிற் புணர்ந்த
மட்கலத்தைப் பாரா தருந்திய அமுதுநன்றேல்
அருத்தியோட ருந்தல் செய்வாம்.

எவ்வளவு கர்வம்! இந்த இத்தாலியர் நமக்குச் சொல்கிறார். நம்மிடம் திருந்திய தமிழ்ச்சொல் இல்லையாம். அதன் காரணமாகத்தான் அவரது காப்பியம் நமக்குக் கசக்குமாம். அதனால் மட்கலத்தைப் பற்றி எண்ணாமல் கலயத்திலிருக்கும் அமுதை (அமுதாகிய தன் கதையை)ப் பருகுங்கள் என்றார். நான் அகராதி தொகுத்தவன் தமிழ்ச் சொற்கள் எல்லாமே எனக்குத் தெரியும் என்ற கர்வமா?

இக்காவியத்தை அமுதாகிய தன் கதை என அடைப்புக் குறிக்குட் குறிப்பிட்டேன். காப்பியம் செய்தவரின் இயற்பெயர் ஜோசப் கொன்ரன்ரியூஸ் பெஸ்கி. மகாகாவியம் எழுத வந்த இந்த பெஸ்கி அடிகளார், மண்ணிலே மனிதனாக அவதரித்து மன்னுயிர்களுக்காகத் தன்னுயிரைக் கொடுத்த கிறிஸ்து நாதர் பேரில் மகாகாவியம் பாடியிருக்கலாம். அப்படிப் பாடியிருந்தால் பிற்காலத்திற் கத்தோலிக்கக் குருக்கள் சிலர் கண்ணதாசனைப் பிடித்துக் குந்தவைத்து இயேசு காவியம் என்ற மலினமான சரக்கை எழுதுவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிராது.

இயேசுநாதர் பேரிற்பாடாவிட்டால் அவருக்கு அடுத்ததாக மகிமை பெற்றவரான மரியன்னை பேரிற் காவியம் பாடியிருக்கலாம். ஆனால் மரியன்னை மீது திருக்காவலூர்க் கலம்பகம் என்ற சிற்றிலக்கியத்தையே பாடினார். காவியம் பாடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவ்விருவருக்கும் அடுத்தவரான சூசைக்கே வீரமாமுனிவர் மகாகாவியம் பாடினார். ஏனென்றால் அப்புனிதரின் பெயர் கொண்டவர்தான் கவிஞர் தான் பேர் கொண்ட புனிதருக்கு - அதாவது தனக்குத்தான் அவர் மகாகாவியம் பாட விரும்பினார். இதற்காக அவர் எடுத்துக் கொண்ட சிரமங்கள் பல.

வீரமா முனிவர் தண்டியலங்காரத்திற் காப்பிய இலக்கணம் கூறும் சூத்திரத்தைப் படித்தே இருப்பார். அத்தோடு இத்தாலியரான அவருக்கு தாந்தே, வேர்ஜில் போன்ற மேனாட்டுக் கவிஞர்களது காப்பியமும் தெரிந்திருக்கும். காப்பியத்திலே தன்னிகரில்லாத் தலைவன் இருக்க வேண்டும். இன்னும் என்னென்னவெல்லாமோ இருக்க வேண்டும் என்று தண்டியலங்காரம் சொல்கிறது.

ஆனால் வீரமா முனிவர் காவியநாயகனாகத் தேர்ந்தெடுத்தவர் ஓர் ஏழைத் தச்சன். அவர் நாடு நகரங்களை ஆண்டதே கிடையாது. புலவியற் புலத்தல், கலவியிற் கலத்தல் இவைகளைச் செய்தவருமல்ல. பூம் பொழில் நுகரவும், புனல் விளையாடவும் அந்த மனிதருக்கு வாய்ப்பிருந்திருக்காது. மந்திரி சபை கூடியதோ, தூது சென்றதோ, பகைமையோ பகைவரை வெற்றி கொண்டதோ கூட அவர் செய்யவே யில்லை. துறவியாகவே வாழ்ந்த அந்தச் சாதாரண மனிதரைத் தான் காவிய நாயகனாக்கிக் காவியம் பாடவேண்டும். கஷ்டமான காரியந்தான்.

ஆனால் பாடவந்த கவிஞரோ மகாகவிதான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அல்லவா? வீரமாமுனிவர் தம் நுண்ணறிவாலும், மறையுண்மைகளைத் தெரிந்து கொண்ட பேரறிவாலும் தமது கற்பனையாலும் ஏழைத் தச்சனைக் காவிய நாயகனாக உயர்த்தியே விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசை, கோலியாத் என்ற இராக்கதனையே வென்ற தாவீதின் மரபிற் பிறந்தவர். அரச மரபினர் என்பதைச் சொல்லி அவர் பிறப்பையும் பற்றி ஒரு கதை சொல்கிறார்.

இயேசுநாதர் மனித அவதாரம் எடுத்த கடவுள் ஆகவே பாவமே அணுகாதவர்.

மரியன்னை கடவுளைத் தன் உதரத்திற் சுமக்கும் பாக்கியம் பெற்றவள். இவ்விரண்டு பேருந்தான் முதல் மனிதராகிய ஆதாமும் ஏவாளும் தேவகட்டளையை மீறியதால் உண்டான சென்மபாவம் என்ற தோஷம் இல்லாமற் பிறந்தவர்கள். மனிதர்களில் மற்ற எல்லாருமே இந்தச் சென்மபாவம் என்ற தோஷத்துடன்தான் பிறக்கிறார்கள். சூசையும் கூட இவ்விதிக்கு விலக்கல்ல என்பதுதான் கத்தோலிக்க திருச்சபையின் கொள்கை.

ஆனாற் தமது காவியநாயகர் சூசை கர்ப்பத்திலிருந்து ஏழாம் மாதத்திலேயே அவரது சென்ம பாவக்கறை அகன்றதாகக் கதையளக்கிறார் கவிஞர். அவரின் கதையளப்பு கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கையே அல்ல. அவர் பாடுகிறார்.

**புரப்ப ஓர் பொதுமறை பொறாத தன்மையால்,**
**கருப்பம் ஓர் ஏழ்மதி கடக்கும் முன்வினை,**
**பரிப்ப ஓர் சிறப்பு அருட்பயத்தில் சூல்செயிர்,**
**விருப்பமோடு இறைவன் விலக்கினான் அரோ**

(வளன் சனித்த படலம் 50 ஆம் பாடல்)

இப்படியாகத் தனது நாயகனை உயர்த்திய கவிஞர் அக்காவிய நாயகனின் திருமணத்தின் பின்னர் ஈரறம் பொருந்து படலம் என்ற படலத்தை எழுதி, அவர் மணம் முடித்தும் துறவியாகவே வாழ்ந்தமையை மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்காரமாகச் சொல்கிறார். ஆனாலும் தேவ ஏவுதலால் மரியன்னை கர்ப்பமடைகிறாள் கன்னியாயிருந்தே. வளனாருக்கு (சூசையை வளன் என்று வீரமா முனிவர் தமிழ்ப்படுத்தியிருக்கிறார்) ஐயம் தோன்றுகிறது. இறைவனால் அந்த ஐயம் நீக்கப்படுகின்றது. நிறை சூலியாகிய மரியன்னையைக் கூட்டிக் கொண்டு அரசகட்டளைப்படி குடிசனக்கணக்குப்பதிய பெத்லேகம் செல்கிறார். அவர்கள் அப்படிச் சென்றதை

**கொம்பினார் குயில் கூவவும் மஞ்ஞைகள்**
**பம்பி ஆடவும் பைஞ்சிறைத் தேனொடு**
**தும்பி பாடவும் தூயனம் நாணவும்**
**நம்பி மாதொடும் நன்னெறி போயினன்**

எனக் காம்பீர்யத்தோடு பாடுகிறார் கவிஞர். அதைத் தொடர்ந்து காந்தாரி என்ற கற்பனைக் கதையும் தேம்பாவணி என்ற உயர்கோபுரத்தைத் தாங்கும் சிற்ப வேலைப்பாடுடைய தூணாக மிளிர்கிறது.

பெத்லேகம் என்ற ஊரில் கிறிஸ்து நாதர் மாட்டுக் கொட்டிலிலே பிறக்கிறார். தெய்வக் குழந்தையைக் கண்டு புளகித்த வளனார் பாடும் தோத்திரப்பாடல்கள் மிக்க சுவையானவை. அவைகளிலொன்று,

**நீர்பாய் உலகிற்குயிரோய் நீ**
**நிமிர் வீட்டுலகிற் குயிரோய் நீ**
**சீர்பாய் பாவிற் குரையோய் நீ**
**திறன் கொண்டாள் வோர்க்கடலோய் நீ**
**ஏர்பாய் இரவிக்கு ஒளியோய் நீ**
**எம் மேல் இரங்கிப் பிறந்தனைநாம்**
**சூர்பாய்துகள் அற்று உய்வதற்குன்**
**துணைத்தாள் தொழும் பண்பு உரையாயோ**

என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாகத் தனது 52 ஆம் வயதில் வளனார் இறக்கும் வரையும் அவரது கதையைச் சொல்லும் தேம்பாவணி அவர் இறந்த பின்னர் பாதாளங்களிலிறங்கி அங்குள்ள புனிதர்களுக்குத் தூது சென்றது. கிறிஸ்துநாதர் இறப்பின் பின்னர் அவர் மோட்சத்தில் முடிசூட்டப் பெற்றதைத் தெரிவித்து முடிகிறது.

இக்காவியத்தில் புரோகிதராக உபதேசிக்கிறார் வளனார். எகிப்து சென்றபோது அவரைக் கண்ட பேய்கள் எல்லாம் வெருண்டோடி இனி என்ன செய்வது என்று மந்திராலோசனை நடத்துகின்றன. விவிலியத்தில் வரும் கதைகள் பல காவியத்திற் சொல்லப்படுகின்றன. விவிலியத்திலில்லாத காந்தாரி, புருவேடன், இராசாளி, பாம்பு என்ற பாத்திரங்கள் வரும் கதையும் இடம்பெறுகின்றன. மொத்தமாக எல்லாக் காவிய லட்சணங்களும் அமைந்த காப்பியத்தை ஆக்குவதிலும், காவிய நாயகனைத் தன்னேரில்லாத் தலைவன் ஆக்குவதிலும் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார். ஆனாலும் பல இடங்களிற் கம்பனோடு போட்டியிட்டுத் தோல்வி காணுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

புரோகிதப் படலத்தில் வேதவிற்பன்னராக உபதேசிக்கும் வளனார் எதிர்காலத்தில் கிறிஸ்தவ சமயம் இத்தாலிய நாட்டில் தலைதூக்கி வளரும் என ஆருடம் கூறுகிறார். அந்த இத்தாலி என்ற தமது தாய் நாட்டை

**நெல்நாகம் நீர்பொழியத் தேன் பொழியும்**
**புன்னாகம் திருவிற் பூப்ப**
**கல் நாகம் நீர் உமிழக் கவிநாகம்**
**வெகுண்டு அஞ்சக் கல்லூடு ஊர்ந்த**
**கொலநாகம் ஒப்ப மணி கொழித்து அருவி**
**பாய்ந்தோடக் கொழுஞ்செய் வாய்ப்ப**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன்னாகம் ஒப்பவளர் புகழ் இத்தா**
**லிய நாட்டுப் பொலிவு இதன்றோ**

செல்நாகம் - பெரியமேகம், புன்னாகம் - புன்னை மரம்

கவிநாகம் - குரங்கு, கொல்நாகம் - பெரிய பாம்பு விஷப்பாம்பு, பொன்னாகம் - தேவலோகம்.

இக்கவிஞர் மஹாகவி கம்பரைச் சந்தத்தில் வென்று விட்டதாகச் சொல்கிறார்கள், தமிழர்க்ள். கம்பராமாயணப்பாடல் தொண்ணூற்றாறு சந்தங்களில் உள்ளதாம். தேம்பாவணிப் பாடல்கள் தொண்ணூற்றெட்டுச் சந்தங்களிலுள்ளதாம்.

இக்காவியத்தைக் கவிதைச் சுவைக்காகவும் வீரமாமுனிவரின் காவியத்தை நடத்திச் செல்லும் விவேகத்திற்காகவும் நான் மீண்டும் மீண்டும் படிக்கிறேன். தேம்பாவணியைச் சந்தி பிரித்துப் பாடல்களை எழுதி, அப்பாடல்களுக்கு ஒரு தெளிவுரையும் எழுதிய பதிப்பு ஒன்று வெளிவர வேண்டும் என்பது என் ஆசை. கத்தோலிக்கக் குருமார் இந்த நல்ல காரியத்தைச் செய்வார்களா?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தநூல்

**கி.பி. 2147** ஆம் ஆண்டில் எழுதப்பட்ட நூலை நீங்கள் வாசித்திருக்கிறீர்களா? மலைக்கிறீர்களா? இன்னமும் இரண்டாயிரம் ஆண்டே பிறக்கவில்லையே, அதற்குள் எப்படி 2147 ஆம் ஆண்டும், அவ்வாண்டில் எழுதப்பட்ட நூலும் வரும் என்று கேட்கிறீர்களா?

நூலாசிரியர் கற்பனையிற்தான் 2147 ஆம் ஆண்டிற்குள் நுழைகிறார். அண்டவெளியில் ஓர் நகரத்தில் ROBOT என்ற இயந்திர மனிதன் கடாட்சத்தினால் அவர் 2147 ஆம் ஆண்டிற்குப் போகிறார். வானவெளி நகர வாசிகசாலையில் மைக்றோ பிலிம் பண்ணப்பட்டிருந்த நூல்கள், ஒரு பொத்தானை அழுத்தியதும் அச்சடித்த நூல்களாகவே கிடைக்கின்றன.

'உத்தியோகம் பெறுவதற்கு உத்தியோக உயர்வு பெறுவதற்கு என்று தொடங்கிச் சுடலையிலே இடம் ஒன்றைப் பெறுவதுவரையிலும் பந்தம் சர்வலோக சஞ்சீவியாகப் பயிலப்படும். ஸ்ரீலங்காக் குடிமகன் என்ற பெருமை என்னை ஆட்கொள்ளவே பதின் மூன்றாம் நம்பர் பொத்தானை அழுத்தினேன். பந்தம் சம்பந்தமான நூல்களின் சகல பெயர்களும் ஒரு திரையிலே ஓடி மறையலாயின, அவற்றில் பந்தநூல் மூலமும் நச்சாதார்க்குமினியர் உரையும் என்ற **TITLE** என்னைக் கவர்ந்தது' என்று நுழைவாயிலிற் குறிப்பிடுகிறார் நூலாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை வாசித்தபோது அதனை எப்படியும் பூமிக்குக் கொண்டுவந்து விடவேண்டும் என்று ஆசைப்பட்டார் எழுத்தாளர். என்னென்னவோ திருகுதாளம் பண்ணி அந்நூலைப் பூமிக்குக் கொண்டு வந்துவிட்டார். இது நடந்தது 1972 இல்.

அப்படியாக எழுத்தாளர் கொண்டுவந்த நூலை அதே ஆண்டில் கொழும்பு அரசு வெளியீட்டகத்தின் நூலாக வெளியிட்டார். அந்நூலைப் பேணிப் பாதுகாத்து வைத்திருந்தேன். ஆனால் அதுவும் எரிந்து விட்டது!

சென்ற ஆண்டு தமிழ்நாடு சென்றிருந்த நான், 1994 இல் சென்னை ,காந்தளகம் இரண்டாம் பதிப்பாக வெளிட்டிருந்த அந்நூலின் பிரதி ஒன்றை வாங்கிக் கொண்டு வந்தேன். நூலாசிரியர் எஸ்.பொ. நூலின் பெயர்'?' என்று மாற்றியிருந்தார்.

நூல் ஒன்றும் பிரம்மாண்டமானதல்ல. ஒரு பக்கம் கூட வராத சின்னஞ்சிறு நூல். அந்த மூலநூல் ஒரு அரசியல்வாதியால் எழுதப்பட்ட கடிதம். அந்த அரசியல்வாதியையும் எஸ்.பொ. சொல்ல நான் அறிவேன். ஆனாற் சொல்ல விரும்பவில்லை. நூல் இதுதான்.

**அன்பின் மச்சான்.**

**அடுத்த மாதம் முதலாந்திகதியுடன் கிட்/கிண்டிருப்பு அ.மு.க. பாடசாலைக்கு மாற்றப்படுதற்குரிய உத்தரவு போடப்பட்டாயிற்று.**

**ஆண்டவன் உதவியால் அடுத்த கிழமையளவில் உங்களுக்குக் கட்டளை கிடைக்கும். அவருக்கு நான் வாக்குப் பண்ணியதில், ஒரு பகுதியை வேறு வழிகளாற் கிடைத்ததைக் கொண்டும் நிறைவேற்றியுள்ளேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஒரு பகுதி இருக்கிறது. ஆண்டவன்தான் அதற்கு உதவிசெய்ய வேண்டும். பொறுப்புணர்ச்சியும், பெருந்தன்மையும் இல்லாதோரிடம் வாயைத்திறந்தால் என்னுடைய பேருக்கே பங்கம் ஏற்படும்.

ஆனால் நீங்கள் எல்லாம் உணர்ந்தவர். மனச்சாட்சிக்கு மாறுபாடு செய்யாதவர். இனியும் செய்ய மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்பின் பிறபின் (ஒப்பம்) பந்த தூதர்.

பி.கு : கட்டளை கிடைக்கும் வரை இரகசியமாக இருக்கட்டும்.

இந்த மூல நூலுக்கே நச்சாதார்க்குமினியர். பழைய உரைகாரர் பாணியில் உரை எழுதியிருக்கிறார். இரண்டாம் பதிப்பிற் '!' ஆச்சரியக் குறியிட்ட தலைப்பில் அசோகமித்திரன் முன்னுரை எழுதியிருக்கிறார். எஸ்.பொ. என்ற சொந்தப் பெயரிலேயே ஆசிரியர் முன்னீடும் நுழைவாயிலும் எழுதியுள்ளார். கொண்டோடி சுப்பர் பின்னீடு எழுதியிருக்கிறார். வி. வியாகேச தேசிகர் பதிப்புரையும், வெள்ளங்காடு வி. தியாகராச தேசிகர் இன்னோர் பதிப்புரையும் எழுதியுள்ளனர். வெள்ளங்காடு வி. வியாகேத தேசிகர் உரைக்கு முன்னுரை வழங்கியுள்ளார். வித்துவான் பந்த சீர்பரவுவார் உரைச்சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளார். கடவுள் வாழ்த்து, தூதர் வாழ்த்து, நூல் இனிமை இவற்றின்பின் உரை இடம்பெறுகிறது. உரைக்குப் பின்னால் அனுபந்தங்கள் நான்கு உள்ளன. நூலில் வந்துள்ள நூற் பெயர்களும் ஆட்பெயர்களும் இணைக்கப்பட்டதின் பின்னர் திருக்கடைக்காப்போடு நூல் முடிவடைகிறது.

சிலப்பதிகார மூலநூலைச் சுமார் எண்பது பக்கங்களில் அடக்கி விடலாம். ஆனால் அடியார்க்கு நல்லார் உரையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகார மூலமும் உரையும் என்ற நூல் எழுநூற்றைம்பது பக்கங்களில் உள்ளது. அதனோடு ஒப்பிட்டால் எஸ்.பொ. வின் உரை மிகமிகப் பெரியதுதான். பல்வேறு புனை பெயர்களில் எஸ்.பொ. எழுதிய இந்த நூலில் பல எழுத்தாளர்களையும், புலவர்களையும், நூல்களையும் சந்திக்கலாம். அவைகளில் உண்மைப் பெயர்களுமுண்டு. அறிவினோ வல்லான் விச், கைலாஷ்தம்பி, மைசூர்ப் பருப்பர், இரண்டாம் விஹார மாகாதேவி, சீவல் தம்பி, நீலவண்ணனார், பேராசிரையர் போன்ற குத்தற் பெயர்களுமுண்டு. அத்தானந்தாதி, அரிசியதி காரம், கலைக்கழக புராணம், காணிக்கை உண்டியற் கலம்பகம், கையூட்டாற்றுப்படை, கைலாசபதி உலா, சிங்களத் தீவின் சிதைவுகள், தார்ச்சட்டி வீரர் மான்மியம், நீலாவணபுராணம் போன்ற எழுதப்படாத நூல்களுமுள்ளன.

உரை, உரைக்கு அடிக்குறிப்பு, அடிக்குறிப்பிற்கு அடிக்குறிப்பு என உரை வளர்கிறது. இந்த அடிக்குறிப்புக்களிற் தொல்காப்பியமும் வருகிறது. நல்காப்பியமும் வருகின்றது. பின்னையது எஸ்.பொ. வின் சிருஷ்டி! நச்சாதார்க்குமினியர் என்ற எஸ்.பொ. நீங்கள் எல்லாம் உணர்ந்தவர் உமக்குச் சகலதும் தெரியும்.

ஆனால்[65] என்னுடைய பீடிகை ஆசிரியர் பின் விளைவுகள் கூறுவதற்கெடுத்துக் கொண்ட தோற்றுவாய், கயவர் குழாத்தினைக் கூறப்புகுந்தமையின் நீர் எல்லாம் உணர்ந்தவர் எனக்கூறி, மச்சானை ஏத்துதலுற்றார். இதனால் அடுத்து வரும் துய்த்தலுக்கு அடுக்குப் பண்ணுகிறார். இது எதிரது தழீஇ இனியது மொழிதல் எனும் உத்தியென்க[66].

இந்த உரைக்கு அடிக்குறிப்புகள் வருமாறு.[65] ஆனால் என்பது But என்னும் ஆங்கிலப் பதப்பிரயோகத்தை ஒட்டித் தமிழில் வந்தது என்பார் ஆங்கிழார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[66] - அதனை

**சொல்லிய வல்லபிற அவண் வரிசை**
**சொல்லிய வகையால் சுருங்க நாடி**
**மனத்திலெண்ணி மாசறத் தெரிந்து கொண்**
**டினத்திற் சேர்த்தி உணர்தல் வேண்டும்**
**நுனித்தரு புலவர் கூறியநூலே**

என்ற நல்காப்பியம் பொருள் 656 ஆம் சூத்திரத்தாற் காண்க.

தொல்காப்பியம் போன்ற இந்நல்காப்பியம் எஸ்.பொ. வின் கற்பனை நூல்.

இப்படியாக நூல் முழுவதும் எஸ்.பொ. வின் பழந்தமிழ் இலக்கண இலக்கிய அறிவைத் தரிசிக்கும் அதேவேளையில அவரது கிண்டலும் குத்தலும் கூடப் பளிச்சிடுவதைக் காண்கிறோம். தன் கிண்டலையும், குத்தலையும், தன் தர்க்கவாதத்தாலும் நூலறிவாலும் தமிழ்ச் சொற்களை லாவகமாகக் கையாள்வதாலும் மற்றவர்களை ஒப்புக் கொள்ள வைக்கும் திறமையை அவருக்குக் கொடுக்கிறது.

மேலோட்டமாக நூலைப் படித்தால் எஸ்.பொ. அவருக்குப் பரம வைரிகளாக இருந்த முற்போக்கு எழுத்தாளர் கூட்டத்தைச் சாடவே இந்நூலை ஆக்கியதாகப் படலாம். அப்படிச் சாட எஸ்.பொ. எடுத்துக் கொண்ட வாள் தமிழ்தான்! அதன் வீச்சும் அலாதியானதேதான்.

பழைய உரையாசிரியர் பாணியிலேயே நூல் முழுவதையும் எழுதியுள்ளார். ஆங்காங்கே பல கவிதைகளையும் இயற்றிப் பெய்துள்ளார். அக் கவிதைகள் அவரைப் பெரும் புலவராக்குகின்றன. வித்துவான் பந்தசீர் பரவுவார் என்னும் பெயரில் உரைச்சிறப்புப் பாயிரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநில மடந்தையின் எழிலுறு முகமாய்
இலங்கிடு மீழ வளந்திகழ் நாட்டில்
செந்தமிழ் வளர்த்துச் சேண்புகழோங்கும்
நந்தம் புலவர் வரிசையில் சிறந்தோர்
இமிழ் திரைப்பெருங்கட லுடுத்த பாரனைத்தும்
தமிழ் தரு பிரபலத் திகழ்பேராளர்
அந்தமிலினிமைப் பந்த நாதரென
நந்தலில் நாமமும் நாட்டுறு நாவலர்

என அவர் எழுதிய வரிகளில் அவர் புலமையைக் காணலாம்.

இவ்வுரைச் சிறப்புப்பாயிரததிற்குரிய அடிக் குறிப்புகளும் சுமைமிக்கதே.

எஸ்.பொ. இந்நூலை எழுதி முடித்தபோது இந்த நூலை எழுதுவதற்குச் செலவழித்த நேரத்தையும், சிரமத்தையும், மூளைச் செலவையும் சடங்கு போன்ற ஐந்தாறு நாவல்களை எழுதப் பயன்படுத்தியிருக்கலாம் என அபிப்பிராயம் சொன்னபோது எஸ்.பொ. குறும்பாகச் சிரித்தார்.

ஆனால் இந்நூல் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் ஒரு மகத்தான சாதனை. அங்கதச் சுவைக்கு இதைப்போன்ற ஒரு நூல் ஈழத்தில் - ஏன் தமிழகத்திலும் - இன்னமும் வெளிவர வில்லை. எஸ்.பொவின் தமிழ் ஆளுமைக்கும் இந்நூல் ஒரு சான்று. ஆம், எழுத்தாளன் என்பவன் எழுத்தை ஆளுபவ னாகவே இருக்கவேண்டும். இதனை இலக்கியக் கொடுங்கோலர் என்பார் காலஞ்சென்ற என் குருநாதர் இலங்கையர்கோன். எஸ்.பொ. ஒரு இலக்கியக் கொடுங்கோலர்!

எனக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டால் நான் எஸ்.பொ. வின் இந்நூலைத்தான் எடுத்துப் படிக்கிறேன். எல்லாரும் இதனைப் படிக்கலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பா

**எட்டாம்** வகுப்புத் தமிழ்ப் பாடப் புத்தகத்திலே மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடலை மாணவர்கள் படித்தேயிருப்பார்கள். அது பாடப்புத்தகத்தில் இருந்ததால்.

மப்பின்றி வானம் மழைக்காணா மண்ணிலே
சப்பாத்தி தானும் சரியாய் முளைக்காது
ஏரேறாது களை இழுக்காது எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன் அளிப்பான் என்ஊரான்

என்று தொடங்கும் அந்தப் பாடலிலே யாழ்ப்பாணத்து விவசாயி பற்றிய சிறுகதை ஒன்றே இருக்கிறது.

இந்தப் பாடலைப் பாடியவர் பெயர் மாணவருக்குத் தெரியும். ஆனால், இந்தப் பாடல் இடம் பெற்றிருக்கும் நூல் எதுவென்று பலருக்குத் தெரியாது. மஹாகவியின் வீடும் வெளியும் என்ற நூலிற்தான் இப்பாடல் வருகிறது. இப் பாடல் மட்டுமல்ல, இன்னும் இருபத்தினான்கு கதைப்பாடல்கள் இந்நூலிலே உண்டு. 1973 ஆம் ஆண்டு கல்முனை வாசகர் சங்க வெளியீடாகத் தெல்லிப்பழை குகன் அச்சகத்தில் இந்நூல் பதிக்கப்பட்டிருக்கிறது.

நிலவு, வானம், மலர் என்ற இயற்கைப் பொருள்களும் காதலுமே பாடுபொருளாகப் பலகாலம் வரை நம்முன் இருந்தன. இம் மரபை மீறித் தற்கால வாழ்க்கை நடைமுறைகளைக் களமாகக் கொண்டு, வாழ்க்கையை நிதர்சனமாகச் சித்திரிக்கும் கவிதைகளை எழுதியவர் மஹாகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ருத்ரமூர்த்தி. இந்த வழியில் தமிழ்நாட்டுக் கவிஞர்களுக்கும் முதல்வராக நின்று பாதையமைத்தவர் மஹாகவி. யதார்த்த வாழ்விலிருந்து ஒதுங்கிச் செல்லாத மரபு மஹாகவியுடையது. அகமனதில் அடங்கிக் கிடப்பதும், வெறும் கற்பனையில் தங்கியிருப்பதும் அவரிடம் கிடையாது. வாழ்க்கையின் நடைமுறைப் பண்பைக் கவிதைகளிற் கொண்டுவருவதே அவரின் முனைப்பாக இருந்தது.

அதுமட்டுமல்ல, கவிதையின் உருவ அமைப்பிற்கு முழுமை கொடுத்த பங்களிப்பும் மஹாகவிக்குண்டு. அகவல், சிந்து, வெண்பா, விருத்தம் என்ற செய்யுள் உருவங்களில் கட்டுரைப் பாங்கில் எழுதப்படுவனவாய கருத்துகளும் கவிதையாகக் கருதப்பட்டன மரபுவாதிகளால். புதுக்கவிதைக் காரர்கள் வசனத்தைத் துண்டு துண்டாக முறித்துப் புதிய புதிய வரிகளிற் கிடைத்தி நொடிகளையும், துணுக்குகளையும், கேலி களையும், கிண்டல்களையும், அங்கதங்களையும் எழுதுவதே கவிதை என்றனர். இவை இரண்டிலுமே சேராதவராகத் தனித்து நின்று செய்யுள் அல்லாத கவிதைகளை, கவிதைக்கேற்ற முழுமையான அமைப்புடன் எழுதியவர் மஹாகவி. ஒரு நல்ல சிறுகதையில் ஒரு வரியை எடுத்தால் அதன் முழுத்துவம் குறைபடுகிறதோ, அது மஹாகவியின் கவிதைகளுக்கும் பொருத்தும். மஹாகவியின் எல்லாச் சொற்களிலும் வியாபித்து நிற்கும் தொனிப்பொருள் பங்கமடையும்படியாக மிகச் செட்டான சொற்களில் அற்புதமாகக் கவிதையாத்தவர் மஹாகவி. அத்தோடு சிறுகதை, நாவல் என வளர்ந்து வரும் தமிழ் உரைநடைக்குச் சமாந்தரமாகத் தமிழ்க்கவிதையையும் சமூகத்தின் இயல்பான நடைமுறைத் தமிழிலே அற்புதமாகக் கவிதை எழுதியவர் மஹாகவி. அந்தச் சாதனையின் முன்னோடியும் அவரே. தமிழ் நாட்டையும் சேர்த்தே சொல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் வீடும் வெளியும் என்ற கவிதைத் தொகுதியில் சங்க இலக்கியம் அகம், புறம் என்று சொல்லும் மரபிற்கேற்பக் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அகத்திற் காதற்கவிதைகள், புறத்திற் சமூகக் கவிதைகள். தொகுதியிலுள்ள எல்லாக் கவிதைகளுமே சிறு கதைகள், மஹாகவியே சொல்கிறார்.

சிறுகதை என்பது செட்டான புதிய இலக்கிய வடிவமாகும். சிறிய கவிதைகள் சிலவற்றை அவற்றின் பாங்கிலே வடிக்க நான் விரும்பியதால் கிடைத்தவை இத் தொகுப்பிலுள்ளன.

**..... நீளக்குறைவாலும் பார்வையில் அகலம் இன்மையாலும் சுவைஞர்களை முழுமையாக ஆட்கொள்ள முடியாத சிறு கதையின் அமைப்பைக் கவிதையாகச் செய் யுளில் வார்க்கும்போது நிறைவுற்ற இலக் கிய வடிவம் தோன்றுதல் கூடும்...**

மஹாகவி கூறியது போலவே தோன்றிய நிறைவுற்ற இலக்கிய வடிவத்துக்கான உதாரணங்களை இத் தொகுதியிற் காணலாம். புதுமைப்பித்தனின் அகலிகையை விட மஹாகவியின் அகலிகை என்ற கவிதைச் சிறுகதை இரசனை மிக்கதாகவே அமைந்திருக்கிறது.

வீடும் வெளியும் என்ற நூலை மட்டுமல்ல, கண்மணியாள் காதை, ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம் என்ற காவியங்களையும், கோடை என்ற கவிதை நாடகத்தையும் வள்ளி என்ற கவிதை நூலையும் மஹாகவி நமக்குத் தந்துவிட்டுச் சென்றுள்ளார். ஆனால், இவைகள் எல்லாவற்றையும் விட எனக்குப் பிடித்தது அவரின் குறும்பா என்ற கவிதைத் தொகுதி தான். அதற்கான காரணங்களுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனாட்டு இலக்கியத் தாக்கம் நமது இலக்கியத்தில் எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. கிறிஸ்தவ மதமும் நமது இலக்கியத்தை மிக அதிகமாகப் பாதித்தது.

1960 வரை கத்தோலிக்க ஆலயங்களில் லத்தீன் மொழியிலேயே பூசைகள், வழிபாடுகள் ஆகிய எல்லாமே நடைபெற்றன. லத்தீன் மொழிப் பாடல்களே பாடப்பட்டன.

அப்பாடல்களிற் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ் இசையிற் பாடவும் பட்டன. தமிழ் நாட்டினர் இந்தப் பணியில் முனைப்பாக ஈடுபட்டனர்.

தேவதாயாரான மரியன்னையின் புகழ்பாடும் AVE MARIS STELLA என்ற லத்தீன் பாடலை அலை கடல் ஒளிர்மீனே, செல்வ ஆண்டவர் தாயாரே நிலை பெயராக் கன்னி, மோட்ச நெறிகதவே வாழி எனத் தமிழ் நாட்டார் மொழி பெயர்த்தனர். தமிழிசையிலேயே இப்பாடல் பாடவும் பட்டது.

ஆனால், நமது நல்லூர் ஞானப்பிரகாச அடிகளார் இப்பாடலை அது லத்தீன் மொழியில் என்ன இசையிற் பாடப் படுகிறதோ அதே இசையிற் பாடக்கூடியதாக மொழிபெயர்க்க வேண்டும் என விரும்பினார். மொழிபெயர்க்கவும் செய்தார். மொழி பெயர்ப்பின் இரண்டு கண்ணிகள்

**1. யாத்ரிகட்குப் பாதை**
**காட்டும் தாரகையே**
**என்றுங்கன்னித்தாயே**
**எம் தஞ்சமே வாழ்க!**

**2. தேவதூதன் சொன்ன**
**தேவ வாழ்த்தை ஏற்று**
**ஏவை பேரை மாற்றும்**
**சீவ இன்பம் ஊற்றும்**

என்றிருந்தன. ஆவே மாறிஸ் ஸ்ரெல்லாவை மட்டுமல்ல, மரித்தவர்களுக்கான பூசையிற் பாடப்படும் டீ எஸ் ஈ றே டீ எஸ் ஈல்லா என்ற பாடலை

**தேவகோபம் வருமின்னாளே**
**தேவதூதன் சொன்னவாறே**

**......................**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றடிக் கண்ணிகளாக மொழி பெயர்த்தார். புனித சூசையப்பர் மீதான பாடலை அதே லத்தீன் இசையிற் பாடும்படியாக

**விண்ணோர்கள் யாவரும்**
**வீழ்ந்தடி பொற்றிட**
**மண்ணோர்கள் தாமெலாம்**
**வந்தனை ஆற்றியுன்**
**எண்ணாத மேல்வரம்**
**எங்களுக்கீயென**
**விண்ணாசனங்கொள் மாதவா**

என்று தமிழ் செய்தார், சமீபகாலமாகப் பூசையும் வழிபாடுகளும் தமிழ் மயமாகிவிட்டன. அதன் காரணமாக புதிய தமிழ்ப் பாடல்கள் ஒலிப் பேழைகளாக வந்துவிட்டன. ஞானப்பிரகாசரின் பாடல்களைத் தீண்டுவார் இல்லை.

சமீப காலத்திலே தமிழிலே ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் அறிமுகமாயின. பலர் விழுந்தடித்துக்கொண்டு ஹைக்கூ பாடினார்கள். ஆனால் அத்தனையுமே சப்பென்று போயின. எந்த ஹைக்குவும் மனதில் நிற்பதாக இல்லை. அவைகளைவிடத் திருவுந்தியாரின் 'உந்தீபற' சிறந்த ஹைக்கூக் கவிதைகள் என எனக்குத் தோன்றுகிறது.

ஆனாற் சில தசாப்தங்களின் முன் ஆங்கிலத்தில் லிமெரிக் என்ற கவிதைகள் புது வடிவத்தில் வெளிவந்தன.

There was once a lady called bright
Who could travel faster than light
She went out one day
In a relative way
And returned the previous day

என்பது ஒரு Limeric.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த லிமெரிக் கவிதைகளை உட்கொண்டு அதே வடிவத்திற் பல பாடல்களை எழுதினார் மஹாகவி. அவைகள் குறும்பா என்ற கவிதைத் தொகுதியாக வெளிவந்தன. அந்நூல் தற்போது என் கைவசம் இல்லை. இருந்தது எரிந்துவிட்டது. என் பிராந்தியத்து நூல் நிலையங்களிலும் அந்நூல் கிடைக்க வில்லை. என் நினைவிலுள்ள மூன்று பாடல்களை மட்டும் தருகிறேன்.

1. **பெஞ்சனிலே வந்தழகக் கோனார்**
**பெருங்கதிரை மீதமர லானார்**
**அஞ்சாறு நாள் இருந்தார்**
**அடுத்த திங்கள் பின்னேரம்**
**பஞ்சியினாலே இறந்து போனார்.**

2. **முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்**
**முன்னாலே வந்து நின்றான் காலன்**
**சத்தமின்றி வந்தவனின்**
**கைத்தலத்திற் பத்து முத்தைப்**
**பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்**

3. **உத்தேசம் வயது பதினேழாம்**
**உடல்இளைக்க ஆடல் பயின்றாளாம்**
**எத்தேசத் தெவ்வரங்கும்**
**ஏறாளாம்! ஆசிரியர்**
**ஒத்தாசையால் பயிற்சி பாழாம்.**

இப்பாடல்களிலுள்ள குறும்புகள் உங்கள் ரசனைக்கு விருந்து. ஆனால், 1964 இல் அரசு வெளியீடாக வந்த குறும்பா நூல் என்னிடம் இல்லையே என நான் ஏங்குகிறேன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவகக் கதைகள்

**கிறிஸ்துநாதர்** பல உருவகங்கள் மூலம் போதித்தார். அவைகளிலொன்றைப் பார்ப்போம்.

'விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதைகள் வழியருகே விழுந்தன. பறவைகள் அவற்றைப் பட்சித்தன. சில விதைகள் கற்பாறையில் விழுந்தன. அவை முளைத்தாலும் வெய்யிலிற் காய்ந்து கருகிப் போயின. சில விதைகள் முட்செடியினிடையே விழுந்தன. முட்கள் வளர்ந்து அவற்றை நெருக்கிப் போட்டன. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் முளைத்து, நூறாகவும் முப்பதாகவும் பலன் தந்தன'.

கிறிஸ்து நாதரின் போதனைகளையும் பலர் கேட்டார்கள். பல்வேறிடங்களில் விழுந்த விதைகளைப் போல அவைகளும் விழுந்தன என்பதை மிக அழகாக இந்த உவமை சொல்கிறது.

இத்தகைய உருவகங்களை நற்செய்தியிற் படிக்கையில் நமக்கு இலக்கிய விசாரணை ஏற்படுவதில்லை. கிறிஸ்து நாதரும் அவற்றிற்கு உருவகக் கதைகளுக்கான முழுமையையும் கொடுக்கவில்லை.

ஈசோப் என்னும் கிரேக்க அடிமை பல உருவகக் கதைகளைச் சொல்லியிருக்கிறார். ஆனால் கதைகளின் முடிவிலே, இதனால் நாம் அறிந்து கொள்ள வேண்டியதென்ன வென்றால் என நீதி போதனைகளை அப்பட்டமாக வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகிறார். அதனால் அவைகள் உருவகக் கதைகள் என்ற அந்தஸ்தை இழந்துவிட்டன.

கலீல் கிப்ரான் சில நல்ல உருவகக் கதைகளைச் சொல்லியிருக்கிறார்.

ரஷ்யரான ஷொலக்கோவ் அருமையான பல உருவகக் கதைகளை எழுதியுள்ளார்.

இந்தியாவிலே மகாகவி தாகூரும், மராட்டிய எழுத்தாளர் காண்டேகரும் நல்ல உருவகக் கதைகள் சிலவற்றை எழுதியுள்ளனர்.

ஆனால் ஈழநாட்டில்.....?

உருவகக் கதைகளின் இலக்கணத்தையே பலர் தவறுதலாக விளங்கிக் கொண்டுள்ளனர். சிறுவர் கதைகளே உருவகக் கதைகள் எனக் குழந்தைத்தனமாகப் பலர் மருள்கின்றனர்.

உருவகக்கதைகள் எழுத நல்ல சிந்தனையும் கற்பனை வளமும் தேவை. ஆசிரியன் தனது கற்பனைக் கேற்ப அஃறிணைப் பொருட்களையும் பேச வைக்கலாம். ஆனால் அதன் மூலம் உலகப் பொதுவான ஒரு உண்மை, ஒரு தத்துவம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இதிலே தேசியம், யதார்த்தம் மண்வளம் என்ற கோஷங்கட்கு இடம் கிடையவே கிடையாது. உருவகக் கதையின் கருத்து ஓர் இனத்திற்கோ அல்லது ஒரு குழுவிற்கோ மட்டும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய கருத்தல்ல. உருவகக் கதையின் கருத்தைப் பொறுத்தே அதன் பாத்திரங்களும் தனித்துவம் பெறுகின்றன. ஷொலக்கோவின் சின்னமீனும் பெரியமீனும் தரும் கருத்தினால் தனித்துவம் பெற்று அக்கதை அமர இலக்கியமாகி விட்டது. அச்சின்னஞ்சிறிய கதை இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மீன் சின்ன மீனைக் கண்டதும் அதை விழுங்க வாயைத் திறந்தது.

இது என்ன அநீதி எனக்கும் வாழ உரிமையுண்டு. எல்லாமீன்களும் சட்டப்படி சமமானவையே என்று சின்மீன் கத்தியது.

சட்டத்தைப் பற்றிக் கதை ஏன்? நான் உன்னை விழுங்கக்கூடாது என்பது தானே உன் எண்ணம் என்ற பெரியமீன், நீயே என்னை விழுகிவிடேன் என்று கேட்டது.

சின்னமீன் வாயைத் திறந்தது. பெரிய மீனை விழுங்க முயற்சித்தது. என்னதான் முயன்றும் அதனாற் பெரிய மீனை விழுங்க முடியவில்லை. தன் முயற்சியிற் களைப்புற்றது. நம்பிக்கையையும் இழந்தது. கடைசியாய் நீ சொல்வதுதான் உண்மை ஐயா என்னை விழுங்கிவிடு என்றது சின்னமீன்.

உருவகக் கதைகளுக்கான இலட்சணம் இந்தக் கதையில் இருக்கிறது. மீன் பேசுமா? அது யதார்த்தமா? என்று கேட்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது.

யானைத் தந்தத்தினைக் கடைந்து தாஜமஹால் ஆக்குவது போலத்தான் உருவகக்கதை எழுதுவதும் என்கிறார் காண்டேகர். அந்தச் சிரமமான கடைசற்பணியைப் பொறுமை யோடு செய்தற்கு எல்லாராலும் முடியாது. அப்பணியைச் சிரத்தையோடு செய்து எம்.ஏ. ரஹ்மான் பதினைந்து உருவகக் கதைகளை ஆக்கி அவைகளைத் தொகுத்துத் தந்துள்ளார். மரபு என்ற பெயரில் அரசு வெளியீடாக 1964 இல் வெளியான அந்நூல் ஈழத்தின் முதலாவது உருவகக் கதைநூல் என்ற பெருமையையும் பெற்றது. நூலுக்கு சு.வே. அவர்களும் எஸ்.பொ.வும் அணிந்துரை எழுதியுள்ளார்கள்.

சு.வே. அவர்கள் உருவகப் பண்பு நுண்கலைகளின் தாய், ஏனைய பண்புகள் அதன் நன்மக்கள். உருவகப் பண்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை பதியாத கலைகள் அவற்றின் தனித்துவத்தைப் பெறாது பாழாகும். நல்லுணர்வுகளின் நாதத்தை மீட்டி மனத்தை ஒருமைப்படுத்திப் பரவசப்படுத்தும் வன்மையை இழக்கும் என்கிறார் தம் நோக்கில்.

அவர் ஒரு சோற்றுப்பதமாக விதந்து கூறும் பலம் என்ற கதையை அந்நூலிலிருந்து தருவோம்.

மெழுகுவர்த்தி சமைத்துள்ள வேள்விக்குண்டத்திலே ஜனித்து, இருட்பாளத்தைப் பிளந்து, சென்னியிலே ஈஸ்வர நாமத்தைத் தாங்கி, தியானப் பொலிவுடன் சுடர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

மறுகோடியில் அகண்டாகாரமாகப் பதுங்கியிருந்த இருள் விளிம்பிலிருந்து ஒரு விட்டிற்பூச்சி தத்தித் தந்தி வந்தது.

சுடரின் அழகில் மனம் ஒன்றியது. அதனையே பார்த்துக்கொண்டிருந்தது.

சுடர், தியானத்தில் ஐக்கியப்பட்டு மோனத்தில் வளர்ந்தது.

சுடர்க் கன்னியே! சௌக்கியமா? என்று விட்டில் பேச்சை ஆரம்பித்தது.

சுடர் மோனத்தைக் கலைக்கவில்லை.

நான்தான் பேசுகிறேன், நீ வானத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்... அழகும், அகம்பாவமும் இரட்டைப் பிறவிகள்

நெஞ்சைப் பக்தியினால் நிறைத்து வைத்திருப்பவர்கள் வெட்டிப் பேச்சுகளிற் காலத்தைப் பலியிடுவது கிடையாது தலையை நிமிர்த்திக் கொண்டு உதடுகளை அசைக்காத வாக்கிற் சுடர் பதில் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தலை கழுத்துடன் அறுந்து நிலத்திலே விழுந்து விடப்போவது கிடையாது. என்னைப் பார்த்துத்தான் பேசேன். உன்மீது எனக்குள்ள காதலை அறிய மாட்டாயா?

நான் நித்திய கன்னி, இறை வணக்கமே என் கர்மம், என் ஞானம், என் பக்தி.

விட்டில் ஏளனத்துடன் எக்காளமிட்டுச் சிரித்தது. சுடர் மோனத்திற் கலந்தது.

நீ உலகத்தை மறந்து உனக்கே விளங்காத தத்துவம் பேசுகிறாய். ஒளிபரப்புவதான மமதை உனக்கு. விண்ணுலகத் தத்துவம் பேசும் நீ, தன் உடலை நெய்யாக உருக்கி வளர்க்குந் தாய், மண்ணுலகின் இருளிலே மறைந்து கிடப்பதைக் குனிந்து பார்.

சுடர் குனியவே இல்லை. நிமிர்ந்தே நின்றது. என் அன்னையின் கர்மமும், யோகமும் அவ்வாறு அமைந்துள்ளன.

சுடர்க் கன்னியே! கர்வம் கொள்ளாதே. இவ்வளவு நேரமும் நீ உயிர் வாழ்வது என்னுடைய தயவினாற்தான். எனது காதலை ஏற்றுக் கொள். என்னை உன் தலைவனாக ஏற்றுக் கொள்வதாகத் தலை குனிந்து வணங்கு.

விட்டிலின் நெஞ்சிலே சினங் கனன்றது. வெயர்ப்பு சிரசு மட்டும் ஏறிற்று.

நீ என்னை வணங்காது போனால், நான் உன்னை அடிபணியச் செய்வேன். நான் உன்னை அனுபவிப்பேன். இல்லையேல் அழிப்பேன்.

விட்டில் அந்தரத்தில் எழுந்து, தனது இறக்கைகளிலே காற்றினை இறைத்துக் கொண்டு, சுடரை ஒரு கணந் தழுவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாற் சென்று விழுந்தது. ஒரு கணப்பொழுது சுடரின் மூச்சத் திணறியது. உயிர் ஊசலாடியது.

விட்டில் உயிர்க்கொட்டை உடைக்கும் வகையிற் கோரமாகச் சிரித்தது.

அற்பச் சுடரே! பார்த்தாயா உன் பலத்தையும் என் பலத்தையும். இப்போதே என்னை வணங்கி உயிர் பிழைத்து வாழ்

சுடர் மீண்டும் தலை நிமிர்ந்து நின்றது.

பலாத்காரத்திற்குப் பயப்படுங் கோழைகள் அபிநயிக்கிறார்கள். வணக்கம் ஞானத்தில் மலருகிறது.

புத்தி கெட்டவளே! என் மண்டையிலே புகமுடியாத தத்துவம் பேசாதே. மகா கர்வியான உன்னை அழித்து விட்டுத்தான் மறுவேலை

விட்டில் தன் மூர்க்க பலம் முழுவதையும் ஒன்று திரட்டி அதனைத் தழுவிற்று.

விரல் நொடிப்பு நேரம்!

விட்டில் தரையில் விழுந்தது. மரணாவஸ்தையுள் முனங்கியது.

என் இறகு பொசுங்கிவிட்டது. என்னால் வாழ முடியாது... என்னை நீ அழித்து விட்டாய்

இல்லை. உன்னையே நீ அழித்துக் கொண்டாய்

மென்காற்றிலே அசைந்தாடும் உன் துரும்பு உடலிலே எப்படி அந்தப் பலம் வந்தது? என் பலம் எங்கே?

உன் பலம் உன்னுடைய பலமே. அது உன்னுடனே வாழும். உன்னுடனே மாளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பலம்?

என் பலம் ஈசனின் பலம்

அதை எப்படிப் பெற்றாய்?

அதுவே என் யோகமும், பக்தியும்

சென்னியிலே ஈஸ்வர நாமத்தைத் தாங்கி, தியானப் பொலிவுடன் சுடர் பிரகாசித்துக் கொண்டேயிருந்தது.

இத்தகைய கதைகளைக் கொண்ட நூலை உருவகக்கதை எழுத முன்வருவோர் படிக்க வேண்டும். 1964 இல் வெளியான இந்நூல் தற்போது விற்பனைக்கிராது. என்னிடமிருந்ததும் எரிந்து போயிற்று. அது மீண்டும் கிடைக்குமா?

★

**பின் குறிப்பு**

நான் தமிழகம் வந்திருந்தபோது மரபு உருவகக் கதைத் தொகுதி மீண்டும் மித்ர வெளியீடாக வந்திருப்பதைக் கண்டேன். முன்னைய தலைப்புகளில் எழுதப்பட்ட உருவகக்கதைகள், அதே தலைப்பில் இணைக் கதைகளாகவும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் எல்லாமாக முப்பது உருவகக் கதைகள் உள்ளன. தமிழகத்தின் பிரபல சைத்ரீகர் வீர சந்தானம் அவர்களால் ஒவ்வோர் கதைக்கும் வரையப்பட்ட கருத்தாழமிக்க படங்களுடன் உள்ள இந்நூலுக்கு மலேசியாவில் வெளியீட்டு விழா நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. இலங்கைக்கும் இந்நூல் விற்பனைக் கனுப்பப் படவிருப்பதாக அறிகின்றேன்.

வ.அ.இ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபாரதம்

**இந்தியா** உலகிற் களித்த இரண்டு மகா காவியங்கள் இராமாயணமும், மகாபாரதமும். மகாபாரதத்தை வியாசர் என்னும் மாமேதை பாடினாராம். அவர் பாடப்பாட சிவனார் மைந்தனான கணபதியே தன் கொம்பை முறித்து மேரு மலையில் எழுதினார் என்பது ஐதீகம்.

...... வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்ன நாள் ஏடாகமாமேரு வெற்பாக அங்கோர் எழுத்தாணிதன் கோடாக எழுதும் பிரான்... என்பது பழைய பாடல்.

மகாபாரதம் ஒரு கதைக் கடல். நூற்றுக் கணக்கான கதைகள் அதில் உள்ளன.

அக்கதைகளில் சிலவற்றையாவது நம் பாட்டிமார் நமக்குச் சொல்லியிருப்பார்கள். காதல், வீரம், சோகம் என்ற எல்லாத் தரப்புக் கதைகளுமே மகாபாரதத்திலுண்டு. பள்ளிப் படிப்பில்லாவிட்டாலும், பாரதக் கதைகளை அறிந்து வைத்திருப்பவன் நம் கிராமங்களில் அறிவாளியாக இன்றைக்கும் கருதப்படுகின்றான்.

மகாபாரதக் கதையை நாம் எல்லோரும் ஓரளவுக்காவது அறிந்தேயிருப்போம். காதல், வீரம், சோகம் என்று எல்லாச் சுவைகளுமே அக்கதைகளிலுள்ளன. பாண்டுவின் மக்களான பாண்டவர்களுக்கும் திருதராட்டிரனின் மக்களான துரியோதனனாதியோர்க்கும் பகை மூண்டு, வஞ்சனையாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினான்கு வருடம் காட்டிற்கு அனுப்பப்பட்ட பாண்டவர் அதன் பின்னர் நாட்டிலே கரந்துறைகின்றனர். அதுவும் முடிந்த பின்னர் கிருஷ்ணனைத் தூதனுப்பித் தங்கள் நாட்டைத் தரும்படி கேட்கின்றனர். துரியோதனன் ஈ இருக்கும் இடம் கூட உங்கட்கு இல்லை என்கிறான். அதனாற் சகோதரர்களுக்குள் போர் மூளுகிறது. போரிற் துரியோதனனாதியோர் அழிகின்றனர். இனசனர் என்று தம்பிமாரைத் தவிர வேறு எவருமே இல்லாத நாட்டுக்குத் தருமன் அதிபதியாக வேண்டியிருந்தது என்று மூலக்கதையைச் சில வரிகளில் அடக்கிவிடலாம். ஆனால், அந்த மூலக்கதைகளில்தான் எத்தனை கிளைக்கதைகள், பஞ்சபாண்டவர்க்கு முன்னாற் குந்திதேவி கர்ணனைப் பெற்றதும், அவனை ஆற்றிலே விடத் தேரோட்டி ஒருவன் அவனைக் கண்டெடுத்து வளர்த்ததும் பின்னர் அவன் துரியோதனன் பக்கம் சேர்ந்து போர் புரிந்ததும் கதைதான். அவனுடைய வீரம், கர்ணனது கொடை எல்லாமே சிறப்பான கதைகள்தான். அவன் ஆற்றிலே விடப்பட்டமை விவிலியத்தில் வரும் மோசஸின் கதையைப் போலவுள்ளது.

பாண்டவர்களுக்கும் துரியோதனனாதியோர்க்கும் மூதாதையர்களான சந்தனு, பீஷ்மர் யயாதி, விதுரன் ஆகியோரும் மிக ரசமான கதைகளின் பாத்திரங்கள்.

பதினெட்டு நாட்கள் நடந்த பாரத யுத்தத்தில் அந்தக் கால யுத்த தர்மம் சொல்லப்படுகின்றது. சூரியாஸ்தமானதும் போர் நிறுத்தப்படும். ஆயுதமின்றி இருப்பவனோடு போர் புரியக்கூடாது என்பன யுத்த தர்மங்கள். படைகளின் அணிவகுப்பு, படைத்தலைவர்கள் படையை நிறுத்தும் வியூகங்கள், அவர்கள் பிரயோகித்த ஆயுதங்கள், அஸ்திரங்கள்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அஸ்திரங்களைப் பற்றிப் படிக்கையில் இந்தக்கால ஏவுகணைகள் நினைவுக்கு வருகின்றன. ஏவப்பட்ட கணைகளை எதிர்த்துச் சென்று அவற்றை அழிப்பதாகிய அஸ்திரங்கள்.... எல்லாமே படிக்க ரஸமாகத்தான் உள்ளன.

ஏகலைவன் என்ற வேடன் துரோணாச்சாரியாரை மானசீகக் குருவாக வரித்து வில்வித்தை பயில்கிறான். வில்வித்தையில் அவனது திறமையைக் கண்ட துரோணர், அவனால் தன் பிரிய சீடன் அர்ச்சுனனுக்கு ஆபத்து வரலாம் என்று, வில்வித்தைக்கு அத்தியாவசியமாக வேண்டிய அவனுடைய வலது கைப் பெருவிரலையே குருதட்சணையாகக் கேட்கிறார். வேடனான அந்தச் சீடனும் மறுபேச்சின்றித் தன் கட்டை விரலை வெட்டிக்கொடுக்கிறான். ஆ! அந்தக் கதையைத் தழுவித்தான் எத்தனை சிறு கதைகள்? எத்தனை மேடை நாடகங்கள்? எத்தனை கிராமிய நாடகங்கள்? நமது எழுத்தாளர் காலஞ்சென்ற தாழையடி சபாரத்தினம் அவர்கள் ஏகலைவனை வைத்துக் கொண்டு மிக அருமையான சிறுகதை ஒன்று எழுதியிருக்கிறார்.

கர்ணன், அர்ச்சுனனும் தன்தாய் பெற்ற மகன்தான் எனத் தெரியாமலே அர்ச்சுனனைப் போரிலே கொல்வேன் எனச் சூளுரைக்கிறான். கண்ணனின் ஏவுதலால் அர்ச்சுனன் உன் தம்பிதான் என்த் தாயே கர்ணனுக்குச் சொல்கிறாள். அப்படியிருந்தும் கர்ணன் செஞ்சோற்றுக் கடன் கழிக்க வேண்டும் என்கிறான்.

உணர்ச்சி மிக்க கதைகள் கர்ணனுடையது. கவியரசர் தாகூர் கர்ணனையும், குந்தியையும் பாத்திரங்களாக வைத்துக் கொண்டு மிக உருக்கமான நாடகம் ஒன்று எழுதியிருக்கிறார். தமிழ் எழுத்தாளர் பி.எஸ். ராமையா அவர்களும் கர்ணனை முக்கிய பார்த்திரமாகக் கொண்டு தேரோட்டி மகன் என்ற சிறந்த நாடகம் எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ணனைப் பாத்திரமாக வைத்து நாடகம் எழுதிப் பாடசாலை மேடைகளில் ஏற்றாத தமிழாசிரியர்கள் இருப்பார்களா என்பதில் எனக்குச் சந்தேகம்!

மட்டக்களப்பு நாட்டுக் கூத்துகளில் கர்ணன் கூத்து மிகப் பிரசித்தி பெற்றது.

மகாபாரதப் போர்க் கதைகளுக்கிடையேதான் உலகிற்கே ஞானநூல் எனக் கருதப்படும் பகவத்கீதை பிறந்தது. அது போர்க்களத்திற் கண்ணனால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப் பட்டது. வினோபாஜி போன்ற மகாபுருஷர்கள் பகவத் கீதைக்கு உரை எழுதியுள்ளார்கள். நமது புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் பகவத்கீதையை வெண்பாவாகப் பாடியுள்ளார்.

மனித உணர்வுகளுக்கும் ஆசாபாசங்களுக்கும் இலக்கணமான எத்தனையோ கதைகள் மகாபாரதத்திலுண்டு. வேறு எந்த உலக மகா காவியத்திலாவது பாரதத்தைப் போல பலப்பல நூற்றுக் கணக்கான கிளைகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எனது வட்டாரக் கிராமங்களிலே பெரிய எழுத்து பாரத வசன நூலை ஒருவன் உரத்துப் படிக்கப் பலர் குழுமியிருந்து கேட்பதை நான் கண்டிருக்கிறேன். பாரதக் கதையைக் கேட்குமளவுக்கு எனது வட்டார மக்கள் இராமாயணத்தைக் கேட்பதை நான் காணவில்லை. இதைப் படித்தாலும் பக்கம் நின்று கேட்டாலும் முத்தி கிடைக்கும் என்ற வாக்கியத்தை என்னதான் சூனாமானாக் காரர்களும் நிரீச்சுரவாதிகளும் கேலி செய்தாலும் பாரதக்கதை படிப்பதை எவராலுமே நிறுத்திவிட முடியாது. அரவானைப் பலிகொடுத்தது போல என்ற எங்கள் வட்டாரத்தில் ஒரு பழமொழி. யாருடைய தூண்டுதலாலோ சண்டைக்குச் சென்று இறந்தவனை இப்பழமொழியாற் குறித்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கலக்க மடைவார்கள் என் பிராந்திய மக்கள். இது மகாபாரதம் சொல்லிக் கொடுத்த கதையடியாகப் பிறந்த பழமொழி.

ஆனால் இன்று பெரிய எழுத்துப் பாரதக் கதைகளைப் படிப்போர் தொகை மிகக் குறைவு. பாடசாலை மாணவர்கள் ஓரளவுக்குத் தங்கள் பாடநூல்கள் மூலம் பாரதக் கதைகளை அறிகிறார்கள். பாட்டிமார் கதை சொல்லக் கேட்பதுவும் அருகிவிட்டது. தொலைக்காட்சி வந்ததால் இந்த நிலையில் பாரதக்கதை கேட்கும் அல்லது படிக்கும் பழக்கம் சற்றுக் குறைந்தே வருகிறது.

இந்தக் குறையை உணர்ந்துதான் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் பாரதக்கதையை இலகு தமிழில் வியாசர் விருந்து என்ற தலைப்பிற் கல்கி இதழிற் தொடர்ந்து எழுதினார். அவைகள் வியாசர் விருந்து என்ற நூலாக 1973 இல் வெளிவந்தது. 1996 இல் அந்நூலின் இருபத்தி மூன்றாவது பதிப்பு வெளியாகியுள்ளது. முதற் பதிப்புக்கான முன்னுரையில்-

மகாபாரதமும் இராமாயணமும் தெரியாதவர்கள் நம் நாட்டில் யாருமே இல்லை. ஆயினும் காலட்சேபக்காரர்களும், சினிமாக்காரர்களும் புகுத்திவிட்டிருக்கும் புதுச்சரக்குகள் கலக்காமல் சரியாகப் படித்துத் தெரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே என்று நான் எண்ணுகிறேன். புதுச்சரக்குகள் ரஸமாக இருக்கலாம். ஆனால், வியாசர் எழுதியதிலுள்ள கம்பீரமும், ஆழ்ந்த பொருளும் மற்றவர்கள் கையாள்வதிற் கெட்டுப் போகின்றன.

நம் நாட்டுப் பழம் பெரும் காவியங்களில் ஒன்றும் அற்புதங்களிற் பேரற்புதமுமாகிய வியாசருடைய மகாபாரதத்தைச் சரியாகக் சொல்லக்கேட்டு அனுபவித்தால் அறிவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமும், ஆத்ம சக்தியும், தமிழ் மக்கள் அடைவார்கள். துவேஷமும், பொறாமையும் கொண்ட வாழ்க்கையை விட்டுவிடப் பாரதத்தைப்போல வேறு படிப்பு நம் மக்களுக்குத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ராஜாஜி தமது நுண்ணறிவினால் மகாபாரதக் கதைகளைச் சகலரும் விளங்கிக் கொள்ளும்படியாக இலகு தமிழில் எழுதியுள்ளார். அப்பணியை ராஜாஜியைத் தவிர வேறு எவரும் செய்திருக்கவும் முடியாது.

நம்மால் வில்லிபுத்தூரர் எழுதிய மகாபாரத காவியத்தைப் படிக்கப் பொறுமையில்லை. பெரிய எழுத்து மகாபாரத வசன நூல்களும் மிக அபூர்வம். அதனாற்தான் ராஜாஜி வியாசர் விருந்தை நமக்குத் தந்திருக்கிறார்.

மூடராக இருந்த அரசன், மக்களை பஞ்சதந்திரக் கதைகள் மூலமே அறிஞனாக்கினானாம் சோமசன்மா. அந்தச் சோமசன்மாவைப் போலத்தான் ராஜாஜியும். வீட்டிலுள்ள பெரியவர்களும், சிறியவர்களும் அவர் தந்த விருந்தைச் சுவைத்து மகிழலாம். நான் வியாசர் விருந்தை என்றைக்குமே படித்துச் சுவைக்கிறேன். இந்திய நாடு நமக்களித்த கதைக், கருவூலத்தை ராஜாஜி மிக்க இனிமை பயக்கும்படி நமக்குத் தந்திருக்கிறார். பிள்ளைகளுக்குப் பிறந்த நாட் பரிசாக நான் கொடுப்பது வியாசர் விருந்தையே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்த்தியடையாத மட்டக்களப்புக் காவியம்

**எழுத்தறியாதவர்களான** சாதாரண மக்களும் பாடிய நாட்டுப் பாடல்கள், மட்டக்களப்பிலுள்ள அளவிற்கு ஈழத்தின் வேறு எந்தப் பிராந்தியத்திலும் இல்லை எனலாம். அத்தகைய கவிவளம் மிக்க பிராந்தியத்தில் கவிஞர்களும் கணிசமான அளவிற்கு வாழத்தான் செய்கிறார்கள். மட்டக்களப்பின் தென்பகுதியான கல்முனையைச் சுற்றி ஏகப்பட்ட கவிஞர்கள்!

இன்றைய மட்டக்களப்பு மறுமலர்ச்சி இலக்கியத்தின் பிதாமகர் விபுலானந்த அடிகளார்தான். அவருங் கூடக் கல்முனைக்கயலிலுள்ள காரை தீவிற் பிறந்தவர்தான். (அவர் தமிழ் கூறும் நல்லுலகு முழுமைக்குமே சொந்தமான முத்தமிழ் வித்தகர் என்ற விவகாரம் இருக்கட்டும்) மதங்க சூளாமணி, யாழ் நூல் என்ற நூல்களை இயற்றியும் கங்கையில் விடுத்த ஓலை, நீரர மகளிர் என்ற கவிதைகளை யாத்தும் மட்டக்களப்பிற்குப் பெருமை தேடித்தந்த மேதை அவர். நாவலருக்குப் பின் தமிழ் மண்ணில் மகிமை பெற்ற இலங்கையரும் அவரே. அவருடைய தமிழ்ச் சேவையை அங்கீகரித்து இந்த நாடும் அவரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக நியமித்தது.

இப்படி எல்லாம் மட்டக்களப்புக்குப் பெருமை தேடித் தந்த விபுலானந்த அடிகளாரின் நிழலில் ஒதுங்கி நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தமது தமிழ் வித்தாண்மைக்கு அங்கீகாரம் தேடும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதல்லாமல் விபுலானந்தர் பரம்பரை எனத் தம்மை பாராட்டிக் கொண்ட எவரும் மட்டக்களப்பு ஆக்க இலக்கியத்திற்கு எதையாவது செய்தார்களா? விபுலானந்தர் வழியில் பண்டிதமணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை, புலவர் அல்ஹாஜ் ஆ.மு. ஷரீபுதீன், பண்டிதர் சபாபதி முதலியார் என எத்தனையோ கவிஞர்கள். இவர்களில் எவருமே ஈழத்தமிழ் பிரதேசங்களில் தனித்துவம் வாய்ந்ததான மட்டக்களப்பின் பாரம்பரியங்களையும், சடங்குகளையும், அங்குள்ள மக்களின் யதார்த்த பூர்வமான வாழ்க்கையையும் வைத்துக் காவியம் ஒன்று படைத்துத் தரவில்லை.

மண்ணை நேசித்து அந்த நேசிப்பின் வழியாக அந்த மண்ணின் மக்களுக்கு இலக்கிய அந்தஸ்தை ஏற்றிவைப்பது மாகிய பணியில் சமகால மட்டக்களப்புக் கவிஞர்களாவது முயலவேண்டும் என்பது என் அவா.

காவியத்தை விடுவோம். பிரதேச இலக்கியம் என்ற அந்தஸ்தைப் பெறக்கூடியதாக மட்டக்களப்பிலிருந்து இதுவரை நாவலாவது வந்திருக்கிறதா?

இப்படிக் கேட்டால் மட்டக்களப்பு எழுத்தாளர்கள் கொதித்தெழுந்து பட்டியல்தர வந்துவிடுவார்கள். ஆனால், வன்னிப் பிரதேச மணங்கமழும் பாலமனோகரனின் நிலக்கிளி, குமாரபுரம், யாழ்ப்பாணம் பிரதேச மணங்கமழும் செங்கை ஆழியானின் வாடைக்காற்று, தெணியானின் மரக்கொக்கு, திருகோணமலை மாவட்ட மண்ணின் மணங்கமழும் எனது மண்ணில் சமைந்த மனிதர்கள், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது என்ற நாவல்களைப்போல ஒரு நாவலையாவது மட்டக்களப்பு இதுவரை தந்துள்ளதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலானந்த அடிகளாரின் தளம் வேறு. சில வேளை அது நம்போன்றவரால் எட்டிப்பிடிக்க முடியாததாக இருக்கலாம். ஆனால் அவருக்குப் பின்னால் அவரது வாரிசுகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆக்க இலக்கியத்தில் ஒரு வெற்றிடத்தை விட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள்! இத்தனைக்கும் மட்டக்களப்பு மண்ணை அந்த வாரிசுகள் நேசிக்கிறார்கள். ஆனால் அந்த மட்டக்களப்பு மண்ணின் வாழ்க்கைதான் இலக்கிய மயமாக்கப்படவில்லை.

அந்தக் கைங்கரியத்தைச் செய்ய அந்த மண்ணிலே ஒரு நீலாவணன் பிறந்தார்!

1953 ஆம் ஆண்டிலே ஓடி வருவதென்னேரமம்மா என்ற கவிதையோடு ஏற்கனவே பரீட்சித்த சிறுகதைத் துறையை விட்டு விட்டு நீலாவணன் கவிஞனாகவே இலக்கிய உலகில் கணிக்கப்பட்டார். இயல்பான கவித்துவம் அவரிடம் இருந்தது. ஆனாலும், ஆரம்பகாலத்தில பாரதிதாசனின் தாக்கத்தோடு தமிழரசு மேடைப் பேச்சாளர்கள் ஊட்டிய தமிழுணர்வும் சேர்ந்துகொள்ள நீலாவணன் ஒரு தமிழுணர்ச்சிக் கவிஞனாகத் தான் வளர்ந்தார். படிப்படியாக இந்த உணர்வு வெறி அடங்கி நிதானமாக உலகைக் பார்த்து அருமையான கவிதைகளை எழுதத் தொடங்கினார். அவர் கவிதைகளிலே மட்டக்களப்புப் பேச்சுத்தமிழ் புகுந்து விளையாடிக் களைகட்டியது.

மஹாகவிக் கிணையாகக் கிழக்கிலங்கையின் கவி வளத்தை அந்த மண்ணின் மணத்தோடு கொண்டு வந்து கொண்டிருந்த நீலாவணன் 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மரணித்தபோது அவரது கவிதைத் தொகுதி ஒன்றுகூட வெளிவரவில்லை. ஒரு வருடம் கழிந்த பின்னரே வழி என்ற அவரது கவிதைத் தொகுதி வெளியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கவிதைகளில் பெரும்பாலானவை நூலுருப் பெறாமையினால் அவரைப் பற்றிய கணக்கெடுப்பு நடத்தவும் எவராலும் முடியவில்லை. தேடா நாடியாகவே விடப்பட்டார்.

இந்த நிலையில்தான் 80களின் தொடக்கத்தில் கல்முனை சென்றிருந்த நான், அப்போது கல்முனையிலிருந்து குடிபெயர்ந்து நீலாவணையில் குடியிருந்த கவிஞர் மு. சடாட்சரனைச் சந்திக்க நேர்ந்தது. அந்தச் சந்திப்பின்போது கவிஞர் சடாட்சரம் அவர்கள் நீலாவணனின் வேளாண்மை என்ற காவியத்தின் கையெழுத்துப் பிரதியை என்னிடம் படிக்கத் தந்தார். அவர் வீட்டிலிருந்தே அக்காவியத்தை ஒரே மூச்சில் படித்தேன். காவியம் முற்றுப் பெறாதது தோன்றியது. ஆனாலும், மனதில் ஒரு நிறைவு. கடைசியாய் மட்டக்களப்பு மண் தன் மணங்கமழும் காவியத்தைத் தந்துவிட்டதான மனநிறைவு.

அப்போது நான் ஒரு சிறிய அச்சகத்துக்குச் சொந்தக் காரனாக இருந்தேன். ஒரு தடவைக்கு டெமி சைஸில் ஒரு பக்கமே அச்சடிக்கக்கூடிய அந்தச் சின்னஞ்சிறிய அச்சியந்திரம் கொடுத்த துணிச்சலில் இக்காவியத்தை நானே அச்சிடுகிறேன் என்று சடாட்சரத்திடம் கூறிவிட்டு கவிதையை எடுத்துக் கொண்டு ஊருக்கு மீண்டேன். இந்தக் காவியம் பூர்த்தியடையாவிட்டாலும இருப்பதையாவது அச்சிடுவோம் என்ற எண்ணமே என்னுள் மேலோங்கிநின்றது. ஒரு நாளைக்கு ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கங்கள் அச்சிட்டு சுமார் 80 பக்கங்கள் கொண்ட அக்காவியத்தை அச்சிட்டு முடித்தேன். ஆக நான் அச்சிட்ட புத்தகங்கள் ஐநூறுதான். காலஞ்சென்ற என் மகன் நூலுக்கு அருமையான அட்டை அமைத்துந் தந்தான். பதிப்புரையையும் அவனே எழுதினான். அவன் தன் பதிப்புரையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறியக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான் என்று தமது பாஞ்சாலி சபதம் என்ற காவியத்துக்கு முன்னுரை எழுதியதுடன், அதனைத் தமிழ் மொழிக்கு அழியாத உயிரும், ஒளியும் இயலுமாறு இனிப்பிறந்து காவியங்கள் செய்யப்போகிற வரகவிகளுக்கு சமர்ப்பணஞ் செய்தார். பாரதியார் நூற்றாண்டு விழாவினையொட்டி, பாரதி வழிநின்று அழகு தமிழிலே காவியமாக அமைந்த வேளாண்மையை வெளியிடுதல் பொருத்தமானது என்று எழுதினான்.

நூலின் முன்னுரையிலே,

தன் ஆசைபற்றி அறைய வந்த நீலாவணன் கம்ப காம்பீர்யத்தோடு விருத்தப்பாக்களாற் பாடியிருக்கிறார். மட்டக்களப்பின் பழகுதமிழ்ச் சொற்கள் அவரின் கவிதா காம்பீர்யத்திற்குக் கைகட்டிச் சேவகம் புரிந்து இலக்கிய அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன. ஏடறியாப்பெண்களும் கவி இசைக்கும் தெற்கு மட்டக்களப்பின் கவிவளம் இக்காவியத்தில் இலக்கணக் கரைகளுக்குள் அடங்கிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியாய்ப் பாய்கிறது என்று நான் எழுதினேன். நான் ஆசையோடு பதிப்பித்த அந்த நூலில் ஒரு பிரதிகூட என்னிடம் இப்போது இல்லை. வேறு யாரிடமாவது இருக்கலாம். ஆனால், கதையமைப்புத் தெரியும். ‘வாரிககாலா ஓஓஓ வளைந்த கொம்பா ஓஓஓ’ எனச் சூடடிக்கும்போது கடாக்களை விரட்டும் பாடல்களும், வேறு சில பாடல்களும் நினைவில் இருக்கின்றன. காவியக்கதை இதுதான்.

அணையூர் (நீலாவணை) விவசாயி ஒருவர் மாட்டு வண்டியிற் சூடடிப்பதற்கான பொருட்களை ஏற்றிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவான்கரை வயலில் சூட்டுக்களத்திற்குப் போகிறார். அங்கே பூசை செய்து சூட்டுக்களததில் முறைப்படி அரக்குப் புதைத்து களத்தைச் சுற்றிக் காவல்போட்டு சூடடிப்பு நடக்கிறது. சூட்டுக்கள வேலைகள் முடிந்தவுடன் ஒழிவு களத்தில் வேலையாட்களுக்கும், இரவலர்க்கும் நெல் அளக்கப்படுகின்றது. மீதி நெல்லை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு வாவியைக் கடந்து துறையூர் (துறை நீலாவணை) தாண்டி அணையூரை அடைகின்றார் விவசாயி. வீட்டுக்கு வந்தபோது அவர் மகள் சமைந்த செய்தி தெரிகிறது. அந்த சாமத்தியச் சடங்கு மரபு வழுவாமற் செய்யச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. சடங்கிலே மஞ்சள் பூசும் வேடிக்கை கூட மிக நுணுக்கமாகச் சொல்லப்படுகின்றது. குடிமகனான வண்ணானின் வெறிகூட வர்ணிக்கப்படுகிறது.

மகளுக்குக் கணவனாக வரப்போகும் மணமகனின் பெற்றோர்களும் சடங்கில் கலந்து கொள்கிறார்கள்.

சடங்கு முடிந்ததும் சித்திரை வருடப்பிறப்பும் நெருங்கிவரப் புளியந்தீவுப் பட்டினம் சென்று போடியார் வருடப்பிறப்பிற்கான பல பொருட்களையும் அள்ளி வருகிறார். பொரியலுக்கு கீரி மீனும், குடிக்கச் சாராயப் போத்தலும் வாங்கியமை கூடக் காவியத்திலிடம்பெறுகிறது.

சித்திரை வருடப்பிறப்பன்று ஊரிலே வட்டக்களரியிலே கூத்து நடக்கிறது. அதில் எத்தனையோ தகராறு. யார் பெரியவர் என்ற மதிப்புக் காட்டல்கள் எல்லாமே துல்லியமாகச் சொல்லப்படுகின்றன.

இவ்வேளாண்மைக் காவியம் மீண்டும் பதிக்கப்படல் வேண்டும். இக்காவியம் தொடர்ந்து எழுதப்பட மட்டக்களப்பு கவிஞர்கள் தூண்டப்படல் வேண்டும். அதற்காகக் கணிசமான பணப்பரிசுகள் அறிவிக்கப்பட்டு போட்டி ஒன்று நடத்தப்பட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மண்ணின் பழக்கவழக்கங்களும், கவிதைகளும் நன்கு தெரிந்த நடுவர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட காவியப்பகுதியும் சேர்ந்து வேளாண்மை என்ற காவியம் முழுமையாகப் பாடப்படல் வேண்டும் என்பது என் மனம் நிறைந்த ஆசை.

வேளாண்மைக் காவியத்தில் வரும் செல்லையாவின் திருமணம், பார்வதிப் பாட்டியின் மரணம், செல்லையாவிற்கு குழந்தை பிறப்பது, அக்குழந்தையின் மருங்கைச் சடங்கு, இடையிலே நீலாவணையின் அயலிலுள்ள கவிஞரின் மனைவியின் பிறப்பிடமான பாண்டிருப்புத் துரோபதையம்மன் கோவிற் தீப்பள்ளயம் என்பனவற்றையெல்லாம் எழுத நீலாவணன் திட்டமிட்டிருப்பதாகக் கவிஞரின் மகன் எழில்வேந்தன் மூலம நான் அறிந்தேன்.

நீலாவணனின் காவியம் முற்றுப்பெறுமா? மட்டக்களப்பு அதைச் செய்யுமா?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இலக்கியம்

**தமிழிற்** சிறுவர் இலக்கியம் பெரிதாக வளர்ந்துவிடவில்லை. குழந்தைகளுக்கு நிறைய உடைகளை கொடுத்து நாம் வளர்க்கும் அளவுக்குக் குழந்தைகளின் அறிவை, நற்பண்புகளை, கலை உணர்வுகளை நாம் வளர்க்கவில்லை. அண்மைக் காலத்தில் நிலைமை மிகவும் கடுமையாகிவிட்டது. ஆங்கிலத்தை மற்றும் கனமான பாடங்களை மூளைக்குட் திணிக்கிறோம். தனியார் கல்வி நிலையங்களிடம் குழந்தைகளை ஒப்படைத்து விட்டோம். குழந்தைகளின் சுதந்திரத்தை குழந்தைமையை அழிக்கிறோம். இவர்களை இயந்திரங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். குழந்தைகளைக் கவரும் முறையில் கோட்டை கொத்தளங்கள் எனத் தொடங்கும் மர்மக் கதைகளே குழந்தைகளுக்குத் தரப்படுகின்றன.

தெய்வபக்தி ஊட்ட வேண்டும் என்ற நிலையில் மூடநம்பிக்கைகளுக்கு ஆக்கந்தரும் முறையிலே குழந்தைக் கதைகள் தரப்படுகின்றன. இக்குறைகளை அனசனின் கதைகள் தீர்க்கும் என நம்பலாம். அக்கதைகளின் வழியே நம் குழந்தைகள் சுவை உணர்வைப் பெறமுடியும்.

- இவ்வாறு தாய் என்ற டேனிஷ் மொழி பெயர்ப்புக் கதைத் தொகுதிக்குத் தாம் எழுதிய முன்னுரையிற் குறிப்பிடுகிறார் தமிழகத்துப் பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான ஞானி அவர்கள். கோவையைச் சேர்ந்த பழனிச்சாமி என்ற இயற்பெயரையுடைய ஞானி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்ற ஆசிரியர் என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும்.

அண்டர்ன் என்ற டென்மார்க் எழுத்தாளரின் பதினாறு சிறுகதைகளை டேனிஷ் மூலத்திலிருந்தே மொழிபெயர்த்துச் சிறகதைத் தொகுதியாகத் தந்திருக்கிறார். த. தர்மகுலசிங்கம் என்ற எழுத்தாளர். அவர் நம்மவர். யாழ்ப்பாணம் வடமராட்சிக்காரர்.

அத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளுள் ஒன்றான சக்கரவர்த்தியின் புத்தாடைகள் என்ற கதையை நான் இடைநிலை வகுப்புகளில் ஆங்கிலத்திற் படித்திருக்கிறேன். அதே நூலில் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்ற கதையும் இருந்தது. அந்தக் கதையைப் போலவே சக்கரவர்த்தியின் புத்தாடைகள் என்ற கதையும் அரபிக் கதையாகத்தான் இருக்கும் என அப்போது எண்ணிக் கொண்டேன். ஆனால் அக்கதை ஹான்ஸ் கிறிஸ்ரியன் அண்டர்சன் என்ற டேனிஷ் எழுத்தாளரால் எழுதப்பட்டது எனப் பல்லாண்டுகளின் பின்னர் அறிந்தேன். மொழி. பெயர்ப்பாசிரியர் தர்மகுல சிங்கம் அவர்கள், டென்மார்க்கிலே அவரை யாரும் அண்டர்சன் என்பதே கிடையாது. அனசன் என்றுதான் சொல்கிறார்கள் என்று சொன்னார். அவர் கூறியதுபோல நாமும் அனசன் என்றே அவரைச் சொல்வோம். பெயரில் என்ன இருக்கிறது?

தொகுதியில் முதற்கதை பேனாவும் மைக்கூடும் என்பது.

என்னிலிருந்து புறப்படும் சங்கதிகள். அவை புதினந் தான். அந்த ஆள் என்னிலிருந்து எடுக்கத் தொடங்கும்போது, அடுத்து என்ன வரும் என எனக்கே தெரியாது. என்னில் ஒரு துளி, அது அரைப்பக்கத்துக்குப் போதும். அது எதைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாது? நான் மகாவிசேஷம். கவிஞரின் எல்லா எழுத்துக்களுமே என்னிலிருந்துதான் பிறக்கின்றன என்று ஐம்பமடிக்கிறது மைக்கூடு.

நீ எப்பொழுதுமே சிந்திப்பதில்லை. சிந்தித்தால் நீ திரவம் மட்டுமே. நான் என்னை வெளிப்படுத்துவதற்காக ஈரத்தை அளித்து, நான் எழுதவிரும்பும் விஷயங்களைத் தாளிலே, பதிவு செய்வதற்கு நீ உதவி செய்கிறாய். எழுதுவது நானேதான் என்று கெப்பர் அடித்தது பேனா. ஆனால் மைக்கூடும் பேனாவும் எதையுமே எழுதுவதில்லை. இறைவன்தான் படைப்பாளிக்குள்ளிருந்து சிருட்டிக்கிறான் என்ற தத்துவத்தைச் சொல்கிறது இந்தக்கதை!

எழுத்தாளனுக்குள்ளிருந்து, சமூகந்தான் தன்னை எழுதிக் கொண்டிருக்கிறது என்று இன்றைய விமர்சகர்கள் சொல்வதற் கும் அனசனின் கருத்துக்கும் நிறைய ஒற்றுமையுண்டு.

ஒரு பேரரசன் நிர்வாணியாக இருக்கிறான் என்பதை ஒரு குழந்தை சொல்லித்தான் தெரிந்து கொள்கிறது ஒரு சமூகம் அரசனும் அவனது உத்தியோகத்தர்களும், மக்களும் தாங்கள் மடையர்கள் அல்லது அவரவர் உத்தியோகங்களுக்குத் தகுதியற்றவர்கள் ஆகிவிடுவோம் என்ற அச்சத்தில் உண்மையை மறைக்கும் கோழைகளாகிவிட்டதை சக்கரவர்த்தியும் புத்தாடைகளும் என்ற கதை அருமையாகச் சித்திரிக்கிறது. இக்கதை அவரவர் மனப் பரிமாணத்திற்கேற்ப வளர்ச்சி அடையக்கூடியதான நவில்தொறும் இனிமை பயக்கும் ஓர் அமர இலக்கியம்.

தம்பலினா பெருவிரல் அளவேயான சின்னஞ்சிறு பெண் பூவிலே பிறந்து பூவிலே வளர்பவர். அவளை ஒரு தவளை தனக்கு மருமகளாக்கிக் கொள்ள முயன்றது. தவளையிட மிருந்து, மீன் குஞ்சுகள் அவளை மீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைதூரம் கொண்டு போய்விட்டன. அங்கும் ஒரு பூச்சி அவளைத் தூக்கிச் சென்றது. ஆனாற் தம்பலினாவுக்கு இரண்டு கால்கள்தானே உள்ளன இவள் அழகற்றவள் என்று பூச்சியின் சகாக்கள் அவளை ஒதுக்கிவிட்டன.

அவள் குளிரால் நடுங்கிச் சிரமப்பட்டு ஒரு எலி வளையண்டை வருகிறாள். அந்த எலி குளிர்காலம் முழுவதும் தம்பலினாவைத் தன்வளையில் வைத்துக் காப்பாற்றியது. ஆனால் அவ்வழியால் வந்த பணக்கார மூஞ்சூறு தம்பலி னாவை மணக்க விரும்பியது. அந்த மூஞ்சூறு தன்வளைக்கும் பூமிக்குமாக ஒரு சுரங்கம் தோண்டியது. அச்சுரங்கத்தின் வழியாகப் பயணஞ் செய்யத் தம்பலினாவையும் எலியையும், மூஞ்சூறு அனுமதித்தது. அவ்வழியே பயணஞ் செய்கையில் தம்பலினா ஒரு செத்த பறவையைக் கண்டாள். அப் பறவையைக் கதகதப்பான வைக்கோலில் படுக்க வைத்து அதற்கு உணவூட்டினாள். மயங்கிக் கிடந்த அப்பறவை உயிர்பெற்றது. பிரதியுபகாரமாக நான் உன்னை என் முதுகிற் சுமந்து கொண்டு வெகு தொலைவிற் கொண்டு விடுகிறேன் என்றது. தம்பலினா அதை விரும்பவில்லை. வயல் எலி வருந்துமே என எண்ணினாள்.

கோடைகாலம் முடிவடைகையில் மூஞ்சூறு தம்பலி னாவைக் கல்யாணம் செய்யும்படி வற்புறுத்தியது. தம்பலினா அழுதாள். பறவையின் முதுகில் அமர்ந்து கொண்டு வெப்ப நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தாள். பறவை அவளை அழகான வெள்ளைப்பூ ஒன்றின் இதழிலே இறக்கிவிட்டது. அப்பூவிலே அழகான சின்னஞ்சிறு சம்மனசு. அச்சமனசு தன் கிரீடத்தைத் தம்பலினாவின் தலையிற் சூடியது.

பறவை டென்மார்க்கிற்குச் சீசன் முடிந்ததும் பறந்து சென்று அங்கே இக்கதையைச் சொல்லிற்று எனக் கதையை முடிக்கிறார் அனசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய், தன் மைந்தனை மீட்கப்பட்ட அத்தனை பிரயத்தனங்களையும் தன் குழந்தையை மீட்பதற்காகப் பிரயத்தனப்பட்டாள். ஆனால் அவள் குழந்தையை மீட்டாளா? கடைசியில் அந்தத் தாய் இழவு விடம் அழுது கொண்டே கேட்கிறாள். என் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய்விடு. இறைவனின் சாம்ராச்சியத்துள் அவனைக் கொண்டுபோ. என் கண்ணீரை மறந்துவிடு. என் கெஞ்சுதல்களை மறந்துவிடு.

இப்படிக் கதறிய தாய் முழந்தாட்படியிட்டு எக்காலத்திலும் மிகச்சிறந்ததேயான உன் சித்தத்திற்கு எதிராக நான் செய்யும் பிரார்த்தனையை உன் செவிகளில் வாங்கிக் கொள்ளாதே என்று இறைவனிடம் பிரார்த்திக்கிறாள்.

முடிவாக இழவு அவள் குழந்தையுடன் கானான் தேசம் சென்றான் எனக் கதை முடிகையில் நாம் கண்ணீர் விடுகி றோம். கற்பனை பொங்கி குமிழியிடும் அருமையான கதை!

புதுவருடப் பிறப்புக்கு முன்தினம் தீக்குச்சி விற்கச் சென்ற பெண்ணின் கதையும் நமக்கு அழுகையைத் தருகிறது. சிவப்புச் சப்பாத்து அணிந்த கரேன் என்ற பெண்ணுக்கு என்னைவிட அழகானவர் யார்? என்ற மமதை மனதில் ஏற்படுகிறது. மிடுக்குடன் நடமாடிக் கொண்டே இருக்கிறாள். கடைசியாகச் சம்மனசு அவள் கால்களை வெட்டுகிறது. அவளுக்கு நிம்மதி வருகிறது. புலன்கள் நம்மை இழுத்து அலைக்கழிக்கையில், நாம் மீண்டும் சுயநிலைக்கு வர இப்படி ஏதாவது நேர்ந்தாக வேண்டும் என்ற தத்துவத்தைச் சிவப்புச் சப்பாத்து சொல்கிறது.

இத் தொகுதியில் மிகச் சிறந்த கதை கடற்கன்னிதான் என்பது என் தீர்ப்பு. முன்னூறு ஆண்டுகள் கடலில் வாழ்ந்து மரித்தபின் கடல் நுரையாக மாறிவிடும் வாழ்க்கை ஒழிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைப்போல தானும் அழியாத ஆத்மாவைப் பெற வேண்டும் என்ற ஆசையிற் கடற்கன்னி தன் நாவையே பலி கொடுத்து, பூமிக்கு வந்து அரச குமாரனைக் காதலித்து....

ஆனால் அழியாத ஆத்மா பெறக் காதலனைக் கொல்ல வேண்டும்! கொன்றாளா? அவளுக்கு அழியாத ஆத்மா கிடைத்ததா? அற்புதமான கதை!

கடைசியாக இக்கதைகள் குழந்தைகளுக்கு மட்டுந்தானா? பெரியவர்களையும் மனதில் வைத்தே அனசன் இக்கதைகளை எழுதியிருக்க வேண்டும்!

இறுகிப்போன சோஷலிஸ யதார்த்தத்தில் நின்று நம்மை விடுவித்துக் கொள்ளவும் நவீனத்துவம் என்ற சமகால இலக்கிய அலையை அறிந்து கொள்ளவும் நாம் அனசனைப் படிக்கத்தான் வேண்டும். தொகுதியில் நிழல் என்ற நீண்ட கதை நவீனத்துவத்தின் வீச்சை மிகத்துல்லியமாக வெளிப்படுத்து கிறது. நம் இளம் எழுத்தாளர்கள் இத்தொகுதியை அவசியம் படிக்க வேண்டும் என்பது என் ஆசை! நூலுக்கு இந்த ஆண்டு மொழி பெயர்ப்புக்கான சாகித்ய மண்டலப் பரிசும் கிடைத்துள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம்
## மலையக நாவல்

**சரணம்** ஓர் புகலிட நாவல் என்றுதான் நாவலாசிரியர் கோபால் காந்தி தன் நாவலுக்குப் பேரிட்டிருக்கிறார். அப்படிப் பெயரிடப்பட்டமைக்கு நாவலாசிரியர் உள் அட்டையில் விளக்கமும் தருகிறார்.

இந்நாவலின் பெயராக அமைந்த சரணம் என்ற சமஸ்கிருதச் சொல் புகலிடம், அடைக்கலம் என்ற அர்த்தங்களைக் கொண்டது. ஆனால் அவைகளுக்கும் மேலாக (வாழ்க்கைப்) பயணத்தின் இறுதியிடம் என்ற அர்த்தத்தையும் கொண்டுள்ளது.

சிங்கள மக்கள் சரணம் என்ற பாளி மொழிச் சொல்லை பௌத்தம், தம்மம், சங்கம் என்ற மும்மணிகளிடமும் அடைக்கலம் பெறுவதற்காகப் பயன்படுத்துகின்றனர். அதே அர்த்தத்திற்தான் தமிழ் மக்களும் சாமியே சரணம் ஐயப்பா என ஆர்ப்பரிக்கின்றனர்.

இக்கதையில் வரும் ஒவ்வொரு முக்கிய பாத்திரமும் இச்சரணத்தையே தேடுகின்றன. ஒருவர் ஆத்மார்த்தமாக அதனைத் தேடலாம். ஆனால் இக்கதையில் வரும் சாதாரண பாத்திரங்கள் வானக் கூரையின் கீழ் தேடுமிடமோ நம்பிக்கையற்றது. பொருளற்றது.

கோபால் காந்தி 1978 ஆம் ஆண்டு தொடக்கம் 1982 ஆம் ஆண்டு வரையும் இலங்கை இந்தியத் தூதரகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது காரியதரிசியாகக் கண்டியில் பணிபுரிந்தவராவர். 1964 இல் ஏற்பட்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி 5,25,000 இலட்சம் இந்திய மக்களும் அவர்களின் பிள்ளைகளும் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படவிருந்தனர். அப்படித் திருப்பி அனுப்பப்படுபவர்கள் தாயகத்தில் நிரந்தரமாக வசிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பணியைக் கோபால் காந்தி செய்ய வேண்டியிருந்தது.

நூலுக்கான தமது முன்னுரையில் எழுதுகிறார்.

எஸ்ரேற் பங்களாக்கள் விசாலமானவை. அவை சூழவர அழகான பூந்தோட்டங்களைக் கொண்டதாக விருக்கின்றன. குறைந்த வேதனத்திற் பல பணியாளர்களை அங்கு வேலைக்கமர்த்தக் கூடியதாகவும் இருந்தது. சமூகவாழ்வு தோட்டத்திலுள்ள கிளப்களோடு மட்டும் குறுகியுள்ளது. அக்கிளப்களில் ரென்னிஸ் விளையாட்டுத் திடல் உண்டு. அங்கே தோட்டத்துரைமார்கள் கூடி பிரிட்ஜ் விளையாடி, கூடிக்கதைத்து, குடித்துக்களித்து பிலியட்டும் ரென்னிஸும் விளையாடி மகிழ்வர். எழுத்தாளர் சோமர்செற்மோமிற்கு நாவல் எழுத இதைவிட மிக அருமையான இடம் கிடைக்கமாட்டாது என்று முன்னாள் இலங்கையின் அமெரிக்கத் தூதுவர் பிலிப்குறேஸ் தன் நினைவுகளை எழுதும்போது குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதே தேயிலைத் தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களைப் பற்றியும் நாவல் எழுதலாம் என அவர் நினைவுகளிற் குறிப்பிடாதது எனக்கு வியப்பாக இருக்கிறது என எழுதிய கோபால் காந்தி மேலும் தன் முன்னுரையில் எழுதுகிறார்.

கண்டி நகரின் பிரசித்திபெற்ற தெப்பக்குளத்தின் முன்பாக எனது காரியாலயம் அமைந்திருந்தது. அதனருகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தலதா மாளிகையும் இடம் பெற்றிருந்தது. இரண்டு விதமான மக்கள் நீரோட்டம் அங்கு பாய்ந்து கொண்டிருக்கும். ஒன்று தலதா மாளிகையைச் சேவித்து மும்மணிகளின் ஆசியைப் பெறச் செல்லும் பௌத்த மக்களின் கூட்டம். மற்ற நீரோட்டத்தில் தம் தாய் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட இருந்தவர்கள் தமது நலனுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இந்தியத் தூதராலயம் செல்லும் மக்களைக் கொண்டிருந்தது. பெரும்பான்மையினராகத் தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்தினர், தாம் கேள்விப்பட்டிருந்த தம் தாய் நாட்டிற்கான பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க அங்கு நாளாந்தம் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் இலங்கையின் மத்திய மலை நாட்டிலுள்ள தோட்டங்களிற் பிறந்தவர்கள். வெளியுலகு பற்றி அவர்களுக்குத் தெரிந்தது மிகச் சொற்பமே. தமது எதிர்கால நம்பிக்கையான தம் தாய்நாட்டுப் பயணத்தை ஓர் வித தடுமாற்றத்துடனும், பயத்துடனும் எதிர் கொண்டனர். அவர்களது மனத்திலே கர்மம் என்ற விதி பற்றிய எண்ணம் மிக ஆழமாக வேரூன்றியிருந்தது. அதனாற் தயக்கமும் பயமும் கூட அவர்களை விட்டுப் போயிருந்தது. திட்டமிடப்பட்ட இந்த மனித வெளியேற்றத்தின் வாய்ப்பைத் தவறவிடக்கூடாது எனவும் அவர்கள் நினைத்தார்கள். நான் அம்மக்களின் ஆவலைப் பூர்த்தியாக்க வேண்டிய கடப் பாடுடையவன். அங்கு நான் உணர்ந்து கொண்டவைகளையும், இடம் பெயர்ந்துபோக வந்துள்ள அம்மக்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டவைகளையும் சேர்த்தே இந்நாவல் உருவாகியது.

இப்படியாக எழுதிய கோபால் காந்தி தன்னைச் சந்தித்தபோது தான் உரையாடிய நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கும் தேரவாதப் பிரிவைச் சேர்ந்த சங்கைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய பிக்கு நியான போனிக மகாதேரருக்கும், புளோரென்ஸ் அலுவிஹார, கொட்வின் சமரரட்ன, சங்கரகுமாரன், அருட்திரு. போல் கஸ்பர்ஸ் எஸ்.ஜே. என்ற கத்தோலிக்கக் குரவர்க்கும் குருநாகல் பிஷப் லக்ஸ்மன் விக்கிரமசிங்க முதலிய பலருக்கும் இலங்கையின் பன்முகப் பாரம்பரியத்தைத் தான் விளங்கிக் கொள்ள உதவியமைக்காக நன்றி தெரிவித்திருக்கிறார்.

நூலுக்கு ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாயா மிகவும் நேர்த்தியான அணிந்துரை ஒன்று எழுதியிருக்கிறார். அது ஆசிரியரது ஆங்கில நடையின் ரசிக விமர்சனமாகவும் அமைந்துள்ளது.

அவர் சொல்வதிலும், சிறிது பார்ப்போம்.

இந்நூலை நாவல் என்றா, கதை என்றா, விவரணச் சித்திரம் என்றா எப்படிப் பேரிட்டழைப்பது?

SAGA என்ற சொல் - காலம் - வரலாறு பற்றிய காப்பியம் - என்பது பொருத்தமாக இருக்கலாம். தோட்டத்துக் கூலிகளான ஆண்களும், பெண்களும் தங்கள் நாளாந்த சீவனத்திற்காகக் கொழுந்து எடுக்கிறார்கள். இறப்பர் பால் சேகரிக்கிறார்கள். ஜனனமும், மரணமும் எல்லாருக்கும் போல அவர்களிடையேயும் ஏற்படுகிறது. ஆனால் அந்த விவகாரங்கள் யாவும் ஒரு மேம்பட்டதான அசாதாரணமான நடையிற் சொல்லப்படுகிறது. வாழ்க்கை நடைமுறைகள் எல்லாம் சாதாரணமாகவும், பொதுவாகவும் இருப்பினும் ஆசிரியரின் எழுத்துகளில் ஒவ்வோர் சொல்லும் நமக்குள்ளே ஒரு அதிர்வை உண்டாக்கிப் பலப்பல அசைவுகளையும், அர்த்தங்களையும் கொள்ளவைக்கின்றது. சொற்கள் மூலம் இரசவாத வித்தை பண்ணுவது ஆசிரியருக்கு கைவந்த கலையாக அமைந்துள்ளது. அவரது மனக்குகையிலிருக்கும் புதையல்கள் மணம்பரப்பி மெல்ல மெல்ல வெளிப்பட்டு ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டங்களாக விகசித்து விரிகின்றன. நான் நூலை நுனிப்புல் மேய்ந்த போதும், கருத்தூன்றிப் படித்தபோதும், தரித்து நின்று இரசித்த போதும் அனுபவித்தவைகளை வேறெந்த நூலுடனும் ஒப்பிடமுடியாததான தனித்தன்மையை இந்நூலிற்காண்கிறேன். அவரது எழுத்துக் கோலங்களின் மூலாதாரமான பட்டன் இருக்குமிடத்தை வரையறுத்துச் சொல்ல என்னால் முடிய வில்லை. எனது அகோரப்பசியான வாசிப்புக்குச் சுவையான உணவைக் கொடுத்தேனா, எனது காய்ந்து வரண்ட தொண்டைக்குள் புத்தம் புதிய குளிர்பானத்தை ஊற்றினேனா என்பதைக் கூட என்னால் சொல்ல முடியாமலிருக்கிறது.

எனச் சிலாகிக்கிறார் ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத் யாயா.

சென்ற ஆண்டு சென்னையில் நான் இருந்த போது புதியன என்ற இலக்கியச் சிற்றேட்டின் ஆசிரியரான இலக்கிய நண்பர் ஸ்ரீரெங்கன் இந் நூலை எனக்குப் படிக்கத் தந்தார். நான் நூலின் தலைப்பையும் பின் அட்டையிலுள்ளதையும் படித்துவிட்டு மிக்க ஆவலோடு புத்தகத்தைப் படித்தேன். 1987 இல் இந்தியாவில் பதிக்கப்பட்ட இந்த நாவலை இலங்கையில் நான் காணவில்லை. ஆகவே மிக்க ஆர்வத்தோடு படித்தேன் என் ஆர்வத்தைக் கண்ட ஸ்ரீரெங்கன் நூலை எனக்கு அன்பளிப்பாகவே தந்துவிட்டார். கையோடு இலங்கைக்குக் கொண்டு வந்துவிட்டேன்.

கோபால் காந்தி அவர்கள் டெல்ஹி சர்வகலாசாலையில் ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் வாராந்த ஆய்வு இதழுக்கு ஆசிரியராக இருந்தவர். அவருடைய நடை கவர்ச்சிகரமான தாகவும் ஆனால் சற்றே கடினமானதாகவும் இருந்தது. ஆனாலும் நாவலைப் பல தடவைகள் படித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆங்கில மருத்துவம், மேனாட்டு இசை ஆகியவை பற்றி எழுதியிருப்பவைகளை முற்றாக விளங்கிக் கொள்ள என்னிடம் வைத்திய அறிவும் இல்லை. மேனாட்டு இசைஞானமும் இல்லை. கந்தன், வள்ளியம்மை வேலு, பெருமாள், பெருமாயி என்ற தோட்டக் கூலிகளோடு தோட்டத் துரைமார், டாக்டர், மேனாட்டுக் கத்தோலிக்கக் குரு போன்ற மேல்தட்டு மக்களும் நாவலிலே பாத்திரங்களாக வருகின்றனர். ஆனாலும் கமலாதேவி சட்டோபாத்யாயா தன் அணிந் துரையின் இறுதியிற் குறிப்பிடுவதுபோல கதையின் மிகத் துன்பம் தருவது 9,75,000 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்கள் ஆனதே. இது கற்பனையல்ல, மிகக் கொடூரமான உண்மை!

இந்த நாவலை மலை நாட்டு இலக்கியம் பற்றி எழுதுபவர்கள் குறிப்பிடாதது எனக்கு ஆச்சரியமாக இருக் கிறது. என் மலையக எழுத்தாள நண்பர்களை விசாரித்துப் பார்த்தேன். பலருக்கு இந்த நாவலைப் பற்றித் தெரியவில்லை.

மலையக இலக்கியத்தில் ஆர்வமுள்ள இலக்கியப் புரவலர்கள், தக்காரைக் கொண்டு இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து மலையக இலக்கியத்தை இன்னமும் செழுமைப் படுத்த வேண்டும் என்பது என் அவா.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பறவையின் பாடல்

**கடுகைத்** துளைத்து ஏழ் கடலைப் புகுத்திக் குறுகத் தறித்த குறள் என்று குறள் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது. ஏழே சீர்களில் ஒன்றே முக்கால் அடிகளிற் பெரிய விஷயங்களைச் சொல்வதால், குறளைப்போல மிகச் சிறிய கதைகளும் பாரத ராமாயண காவியங்களைப் போலப் பெரிய விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஈசோப், கலீல் கிப்ரான், தென்னாலிராமன், அவாந்தி, பீர்பால் என எத்தனையோ பேர்களின் குட்டிக் கதைகளை நாம் படித்திருக் கிறோம். அந்தவகையிற் சமீபத்தில் குட்டிக்கதைகள் நூற்றுக்கும் மேற்பட்டவைகளை ஒரு பறவையின் பாடல் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார் அந்தோனி டி மெல்லோ எஸ்.ஜே. என்ற கத்தோலிக்க குரவர் ஒருவர்.

பெயரைப் பார்த்தால் அவர் கோவானியராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. 1982 இல் குஜராத் மாநிலத் திலிருந்து வெளியான அக் குட்டிக் கதைகள் கொண்ட நூல் 1993 இல் பதின்மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. தன் கதைகளைப் பற்றி அருட்டிரு அந்தோனி டி மெல்லோ இப்படிச் சொல்கிறார்.

இந்நூல் எல்லா மதத்தினருக்காகவும் மத நம்பிக்கை யற்றவர்களுக்காகவும் எழுதப்பட்டது. ஆனாலும் நான் ஒரு கத்தோலிக்கக் குரு என்பதை வாசகர்களுக்கு மறைக்கவில்லை. நான் கிறிஸ்தவமில்லாத மறையியற் பாரம்பரியங்களோடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தோடு பரிச்சயப்பட்டுச் சில தத்துவங்களாற் கவர்ச்சிக்கப்பட்டேன். ஆனாலும் கிறிஸ்தவம்தான் என் ஆத்மீகத் தாயகம் அதன் எல்லைகளும் குறுகலான நோக்குகளும் எனக்கு நன்கு தெரியும். கிறிஸ்தவம் தான் என்னை இன்று நான் இருக்கும் நிலைக்கு உருவாக்கியது. எனவே இந்நூலை அவளுக்கே அர்ப்பணிக்கின்றேன்.

இப்படிச் சொல்லும் மெல்லோ அடிகளார் தன் கதை களை ஒரு முறை படித்துவிட்டு அடுத்த கதைக்குப் போனீர் களானால் அது உங்கட்கு முஸ்பாத்தியாக இருக்கும்.

கதையை இருமுறை படித்து வாழ்க்கையோடு பொருத்தி யோசித்தால் அது உங்கட்கு மதம் பற்றிய படிப்பாக அமையலாம்.

கதையை மீண்டும் படித்து உனக்குள் ஒரு மௌனத் தைச் சிருஷ்டித்துக் கொண்டு சிந்தித்தால் கதை உன் மன ஆழத்தில் பல அர்த்தங்களைத் தரலாம் என அறிவுறுத்துகிறார்.

இக்கதைத் தொகுதியிலே பௌத்த, கிறிஸ்தவ, ஜைன, ஹசிடிக், ரஷ்ய, சீன, இந்து, சூபி ஆகிய புதியதும் பழையது மான தத்துவக் கதைகள் அடங்கியுள்ளன.

இக்கதை நூலை விட இதன் ஆசிரியர், சாதனா, ஒரு நிமிட அறிவு, ஒரு நிமிட விழல், தவளையின் பிரார்த்தனை ஆகியவற்றோடு வேறு பல நூல்களையும் எழுதியுள்ளதாகத் தெரிய வருகின்றது. சிறந்த இறையியல் அறிஞர் இளவயதிலேயே இறையடி சேர்ந்தும் விட்டார்.

அவர் நூலின் முதலாவது கதையே, கதைகளை எப்படிப் படிக்க வேண்டும் என்பதற்கான வழி காட்டியாகவும் எச்சரிக்கையாகவும் உள்ளது. இதுதான் அந்தக் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் கேட்டான்

நீங்கள் கதைகள் சொல்கிறீர்கள். ஆனால் ஒரு போதும் அதன் அர்த்தத்தைச் சொல்வதில்லையே.

குரு சொன்னார்!

இன்னொருவர் பழத்தை மென்று உனக்குத் தந்தால் அப்பழத்தை நீ விரும்புவாயா?

பறவையின் கீதம் என்ற நூலிலிருந்து மேலும் சில கதைகளைப் பார்ப்போம்.

**காற்பந்துப் போட்டியில் யேசு**

யேசுகிறிஸ்து நாதர் காற்பந்து விளையாட்டை என்றுமே பார்த்ததில்லை. நானும் என் சிநேகிதர்களும் அவரை ஒரு காற்பந்து விளையாட்டுப் போட்டிக்கு அழைத்துச் சென்றோம். புரெட்டெஸ்தாந்தரின் பஞ்சேர்ஸ் கோஷ்டிக்கும், கத்தோலிக்கரின் குருஸாடேர்ஸ் கோஷ்டிக்கும் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

குருஸாடேர்ஸ் கோஷ்டியினர் முதலிற் கோல் அடித்தனர். யேசு சந்தோஷித்து உரக்கக் கூவி, தன் தொப்பியை மேலே எறிந்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பின்னர் பஞ்சர்ஸ் குழவினர் கோல் போட்டனர். அப்போதும் யேசு முன்போலவே சந்தோஷித்து உரக்கக் கூவித் தன் தொப்பியை மேலே எறிந்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அவருக்குப் பின்னாலிருந்தவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவர் யேசுவின் தோளிற் தட்டி எந்தக் கோஷ்டியை நீர் ஆதரிக்கிறீர்? என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானா? நான் எந்தக் கோஷ்டியையும் ஆதரிக்கவில்லை. விளையாட்டை ரசிக்கிறேன் என்றார் யேசு.

கேள்வி கேட்டவர் தன் பக்கத்திலிருந்தவரிடம், ஒரு நிரீச்சுரவாதி என்றார்.

விளையாட்டுப் போட்டி முடிவடைந்ததும் நாங்கள் யேசுவிடம் நீங்கள் எந்தக் கோஷ்டியையும் ஆதரித்துப் பழக்கமில்லையா? எனக் கேட்டோம்.

நான் மதங்களை விட மக்களை நேசிக்கிறேன். ஓய்வு நாட்களை விடவும் மனிதர்களைத்தான் நேசிக்கிறேன்.

**ஓ! மகிழ்ச்சியான பாவமே**

யூத ஞானி பால் ஷேம் இறைவனை விசித்திரமாக வணங்கினார்.

இறைவா! நீர் எனக்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவே நானும் உமக்கு வேண்டும். நீர் இல்லாவிட்டால் நான் யாரை வணங்குவேன்? அதுபோல நான் இல்லாவிட்டால் யார் உம்மை வணங்குவார்கள்?

நான் பாவஞ் செய்யாவிட்டாற் கடவுளுக்கு மன்னிக்கச் சந்தர்ப்பமின்றிப் போய்விடும் என்ற நினைவு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

**உத்தியோகம்**

முதலாவது விண்ணப்பதாரி நுழைகிறார்.

நீர் விண்ணைப்பித்திருந்த வேலையை உமக்குத் தரமுன் நாங்கள் ஒரு இலகுவான பரீட்சை நடத்துகிறோம் என்பது உமக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்

நல்லது. இரண்டும் இரண்டும் எத்தனை?

நான்கு

இரண்டாவது விண்ணப்பதாரி வருகிறார்

பரீட்சைக்குத் தயாரா?

ஆம்

நல்லது. இரண்டும் இரண்டும் எத்தனை?

எத்தனை என்று முதலாளி சொல்கிறாரோ அத்தனை.

இரண்டாம் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டார்

முதலில் வந்தது எது? உண்மையா; குருட்டு நம்பிக்கையா?

## ஹேபெற்ஸ் செயிம்

கடந்த நூற்றாண்டில் அமெரிக்க உல்லாசப் பயணி ஒருவன் புகழ் பெற்ற போலந்து ஞானி ஹேபெற் செயிம்மைச் சந்தித்தான்.

ஞானியின் புத்தகங்கள் நிறைந்த ஒரே அறையைக் கண்ட உல்லாசப் பயணிக்கு ஆச்சரியமாக இருந்தது. அங்கே ஒரு மேசையும் ஒரே ஒரு பெஞ்சும்தான் தளபாடங்கள்.

குருவே! இவைமட்டுந்தானா தங்களின் தளபாடங்கள்? எனக் கேட்டான் உல்லாசப் பயணி.

உங்களுடையவை எங்கே? எனக் கேட்டார் குரு.

என்னுடையவைகளா? நான் பயணி இங்கே ஒரு விசிற் மட்டும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அப்படித்தான் என்றார் குரு.

**திருப்தியுள்ள மீன்பிடிகாரன்**

ஓர் ஆலைச் சொந்தக்காரன், தன் தோணிக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு மிக உல்லாசமாகச் சுங்கான் புகைத்துக் கொண்டிருந்தபடி மீனவனைப் பார்த்துக் கேட்டான்.

நீ ஏன் மீன் பிடிக்கப் போகவில்லை?

ஏனென்றால் இன்று தேவையான அளவு மீன்களைப் பிடித்து விட்டேன்.

ஏன் இன்னமும் பிடிக்கக் கூடாது?

அதைக் கொண்டு நான் என்ன செய்வது?

இன்னும் பணம் உழைக்கலாம். உன் தோணிக்கு ஒரு எஞ்சின் வாங்கிப் பூட்டிக் கொண்டு ஆழ்கடல் சென்று இன்னும் அதிகமாக மீன்பிடிக்கலாம். அது மேலும் பணத்தைத் தரும். அப்பணத்திற்கு நைலோன் வலைகள் வாங்கலாம். மேலும் பணம். விரைவில் நீ இன்னும் இரண்டு தோணிகள் - ஏன் பல தோணிகளையே வாங்கலாம். என்னைப்போல நீயும் பணக்காரனாகலாம்.

அதன் பிறகு?

பிறகு நீ வாழ்க்கையை நன்றாக அனுபவிக்கலாம்.

நான் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று நீர் நினைக்கிறீர்?

ஆங்கிலத்திலுள்ள இக்கதைகள் தமிழிலும் வெளிவர இருப்பதாக அறிகின்றேன்.

வாசகர்களும் இந்நூலைப் படிக்க வேண்டும் என்பது என் ஆசை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியரசன் நாடகம்

92ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். திருகோணமலைப் பட்டினத்தில் நான் அகதி. ஆனாலும் என் வாசிப்புப் பழக்கமும் எழுத்துத் தவமும் என் ஈனக் கவலைகளை மறக்கடித்துக் கொண்டிருந்தன. அவையிரண்டும் எனக்கு ஒரு ESCAPISM.

ஒருநாள் வழக்கம் போல வாசிக சாலைக்குச் சென்றேன். அப்போது திருகோணமலை நகராட்சிமன்ற வாசிகசாலை இடம் பெயர்ந்து நெல்சன் தியேட்டர் மண்டபத்திலிருந்தது.

வாசிகசாலையைச் சேர்ந்தபோது. வாசிகசாலை உத்தியோகத்தர்களில் ஒருவரான செல்வசோதி, மாஸ்ரர் அகிலேசபிள்ளை 1887 ஆம் ஆண்டு எழுதிய கண்டியரசன் நாடகம் என்ற நாடகத்தின் கையெழுத்துப் பிரதியைச் சிரமப்பட்டுச் சேர்த்தெடுத்துத் தொட்டால் ஒடிந்துவிடும் போல இருந்த கடதாசிகளைப் பின்பக்கமாக ஒட்டிப் புகைப்படப்பிரதி எடுத்து வைத்திருக்கிறேன். அதை அச்சுவாகனமேற்ற ஒருவர் முன் வந்திருக்கிறார். ஆனால் அச்சுக்கோர்ப்பதற்கு வசதியாக மீண்டும் அதைப் பிரதிபண்ண வேண்டும். அதைப் பிரதிபண்ணித் தருவீர்களா? என்று என்னைக் கேட்டார்.

வே. அகிலேசபிள்ளை திருகோணமலைக்குப் பெருமை தேடித் தந்த தமிழறிஞர்களில் ஒருவர். அவருடைய வெருகற் சித்திரவேலாயுதர் காதல் என்ற பாடல்களிற் சிலவற்றைப் படித்திருக்கிறேன். 1912 ஆம் ஆண்டில் கொட்டியாபுரப்பற்றுத் தலபுராணமான திருக்கரைசைப் புராணத்தைப் பதிப்பித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புராணம் கிடைக்காத நிலையிற்தான், எனக்குக் கிடைத்த ஒரே ஒரு ஏட்டுப் பிரதியைக் கொண்டு 1975ல் நான் மீண்டும் அதை வெளியிட்டேன். வே. அகிலேசபிள்ளை திருக்கோணாசல புராணம் எழுதிய பண்டிதராசர், சோ. கேசவர் கல்வெட்டு எழுதிய கவிராசர், தி.த. கனகசுந்தரம் பிள்ளை ஆகிய புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டிய திருகோணமலைப் புலவர். அன்னாரது நாடகம் அச்சுவாகன மேற நான் உதவி செய்வது எனக்குக் கிடைத்த பெரும் பேறு என்றெண்ணிக்கொண்டே நான் அவர் கேட்டுக் கொண்டதற்கு உடனடியாக ஒப்புக் கொண்டேன்.

ஆனால் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்தபோதுதான் அதைப் பிரதி எடுப்பதிலுள்ள சிரமத்தை உணர்ந்தேன். பல இடங்களில் எழுத்துக்கள் துலக்கமாகத் தெரியவில்லை. சில இடங்களில் எழுத்துக்களே இல்லை. சொற்களைப் புணர்த்தியே எழுதப்பட்டிருந்தது. அதிகமான மெய் எழுத்துக்களுக்குப் புள்ளிகளேயில்லை. ஆனாலும் வலப்பக்கம் சற்றே சாய்ந்த அழகான கையெழுத்து!

இந்நிலையில் நூலை மிக அவதானமாகப் படித்து எதுகை, மோனை, சந்தம் இவற்றின் துணைகொண்டு இல்லாத எழுத்துக்களைக் கண்டுபிடித்து சொற்களைப் பிரித்துப் பொருளுணர்ந்து படித்து முடித்த பின்னர் பிரதிபண்ணத் தொடங்கினேன்.

கண்டியரசன் நாடகம் நமக்கெல்லாம் தெரிந்ததுதான். நாடக மேடைகளில் அந்நாடகத்தை நான் பார்த்திருக்கிறேன். ஆசிரியர் பிறப்பதற்கு முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த சரித்திரத்தை நம்மைவிட அதிகமாகவே அகிலேச பிள்ளை அறிந்திருப்பார். ஊரறிந்த அந்தக் கதையைத்தான் வழமை போலக் காப்பு, துதி, அவையடக்கம் எல்லாம் பாடிய பின்னர் கட்டியக்காரன் வரவுடன் நாடகம் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன், ஏலப்பளை மனைவி போன்றோர் சிங்களம் பேசுகிறார்கள். சிங்கள வாக்கியங்களைத் தமிழிலேயே எழுதியிருக்கிறார். சில இடங்களில் சிங்கள வசனம் எனத் தலையங்கமிட்டு எதையும் எழுதாமலே வெற்றிடமாக விட்டிருக்கிறார். ஆசிரியருக்குச் சிங்களம் தெரியாதென நாம் ஊகிக்க வேண்டியுள்ளது.

தேசாதிபதி பிறவுன்றிக், படைத்தளபதி ஹார்டி ஆகியோர் ஆங்கிலத்திலும் பேசுகிறார்கள். ஆங்கிலப் பேச்சுக்களைத் தமிழில் எழுதிப் பின்னர் அவைகளை மிக்க அழகான கையெழுத்தில் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். ஆம், நாடக ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்!

ஆங்கிலப் பாத்திரங்கள் பாடும் விருத்தங்களிலும் தருக்களிலும் ஆங்கிலச் சொற்கள் அதிகம் காணப்படுகின்றன. நூல் முழுக்க ஆசிரியரின் சுப்ரமணிய பக்தியைக் காணக் கூடியதாகவுள்ளது. ஏலப்பளையின் மனைவி ஆற்றிலமிழ்ந்தி இறக்க முன்னர் பாடும் நீண்ட அகவலிலும், கண்டி மன்னன் கைதியாகச் சென்னையிலிறங்கி வேலூருக்குச் செல்லும் வழியிற் குமரகோட்டஞ் சென்று சுப்பிரமணியர் துதிபாடும் கலி வெண்பாக்களிலும் இதனைக் காணலாம். அவர் வணங்கும் முருகன் அவரே காதல் பாடிய வெருகற்சித்திர வேலாயுதரல்ல. நம்நாட்டு நல்லூர்க் கந்தனோ, கதிர்காமக் கந்தனோ கூட அலல. திருச்செந்தூர் முருகனே நாடகத்திற் பாடப்படுகிறார். வே. அகிலேசபிள்ளை அவர்களின் முன்னோர் தமிழ் வளர்த்த தென் பாண்டி நாட்டுக்காரர்களா? அல்லது 'குரை கடலோதம் நித்திலங்கொழிக்கும் கோணமாமலை'யினரான ஆசிரியர் தன்னூரைப் போலவே கடலலைகளைத் தழுவி நிற்கும் திருச்செந்தூரை நேசிக்கிறாரா?

நாடகத்தைப் படித்து முடித்தபோது எனக்கு குற்றாலக் குறவஞ்சியையும், இராம நாடகக் கீர்த்தனைகளையும் படித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி ஏற்பட்டது. நாடகம் அகவல், கலிவெண்பா, கலித்துறை, விருத்தம், வெண்பா ஆகிய பாவினங்களாலும், கீர்த்தனங்களாலும், வசனங்களாலும் நகர்த்தப்பட்டுச் செல்கிறது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

1. கட்டியக்காரன் விருத்தம்

மட்டிலாப் புகழ்படைத்த மன்னவன் கீர்த்தி சிங்கன்
சட்டமாய்க் கொலுவில் வாற சங்கதியாவுஞ் சொல்ல
எட்டியே நடந்து செங்கோல் எழிலுறு கருத்திற்கொண்டு
கட்டியக்காரன் மெத்தக் களிப்புடன் வருகின்றானே.

2. விநாயகர் தரு

இராகம் - முகாரி அடதாளம்

பல்லவி

வேதவிநாயகர் வந்தார். - மூலாதார
வேத விநாயகர் வந்தார்

அனுபல்லவி

சோதி மகுடம் மின்ன
தொப்பை வயிறு துன்ன - வேத

சரணம்

கந்தமாலைகளாடக் காலிற் சதங்கையாடக்
கணநாதர் புடைசூழக் - கயமுகத்தான்
முந்தி முறித்தகோடும் அங்குசபாசத்தோடும்
மோதகமுந்துலங்க - அழகுவாய்ந்த
தொந்தியின் மீதினிலிருந்த முப்புரிநூல்
சுடரவன் போலிலங்கத் - துணைவியாக
சுந்தரவல்லவை மேவத்தூய பிராமணந் தாவிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்து நின்றாசிபேச - அடியவர்கள்
வந்து மலரடிவீழ்ந்து சிந்தை மகிழ்வுடன் சூழ்ந்து
வந்தனை செய்துநிற்க மறிகடல்தனைப்போல
துந்துபி ஐந்தும் ஒலிக்க
தூயவதனஞ் சொலிக்க
சந்தத மடியேற்கிடர்
வந்துறா தருள்பாலிக்க - வேத

3. ரஞ்சித பூஷணி வருகை

இராகம் : அசாவேரி ஆதிதாளம்

பல்லவி

பூரணமிஞ்சிய மதிமுக ரஞ்சித
பூஷணியிதோ வந்தாள்

அனுபல்லவி

வாரணி தனமதில் வாசனையாழவும்
மட்டவிழ் தாரதில் வண்டுகள் வீழவும்
இட்டமுடனே பெண்கள் இரு புடைசூழவும் - பூர

சரணம்

சொல்லற்கரிதாமிவளங்கம் - மிகு
துய்ய பத்தரை மாற்றுத் தங்கம்
வல்லமையான ரணசிங்கம் - இடை
வாய்ந்த மோகரச வில்லங்கம்
அல்லி முல்லையைப் போன்ற பல்லினிரையைக் கண்டு
சொல்லும் முனிவர்களும் வில்லங்கம் மிகக் கொண்டு
அஞ்ச நடையுள்ள வஞ்சி தனைநிதம்
மிஞ்சுமயலொடு கெஞ்சுமெழிலுரை - பூரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கண்டியரசன் பூஷணியைக் கண்டு மோகித்துப் பாடுதல்

இராகம் : சாவேரி ஆதிதாளம்

பல்லவி

மங்கையிவளாரோ அறியேன் - இவ்வூரில் வாழ்
சிங்களப் பெண்ணோ தெரியேன்

அனுபல்லவி

செங்கை வளைகள் கிலுங்க - செண்டு முலைகள் குலுங்க
சீதளசுந்தரி வாச மிணைந்திடு
செண்பக மல்லிகை முல்லையணிந்திடு - மங்கை

சரணம்

பல்லு மலராத முல்லையோ - இவளையான்
புல்லுவது மிக வல்லையோ
சொல்லற் கரிய வங்கம் - துங்கம் மிகுந்த தங்கம்
சுடரவனனென ஒளி மருவாய் குயிலாள்
மட மயிலெனவரு திடமுள ஒயிலாள் - மங்கை

5. கொழும்பு ராசா வரவு விருத்தம்

சுந்தரமான குதிரை மேலேறுந் துருப்பு வீரர்கள் புடைதொடர சோல்சர் சிப்பாசியோடு தில்லேரித் தொகுதிகள் மருங்கினிற் சூழ, விந்தைசேர் பீரங்கிகள் வெகுதொனியாய் வெடிகளைத் தீர்த்திட மிகுந்த பட்டாளத்தினை அணி அணியாய் நடத்தி முன் செல்ல, அந்தமாய் பிறய்வேற் செக்ரெறி கூட அருகினில் ஏயிடிகொங் நாட அரியவேன் தம்பூர் எங்கணும் ஒலிக்க அரையில் வாள்தொங்கி ஆட செந்திருவதன விலாச உல்லாச சேர் றபேட் பிறவுண்றிக்கு ராச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்மிகு கொலோனியல் செக்ரெறியதுடனே திகழ்சபை தன்னில் வந்தார்.

6. குடிமக்கள் வரல்

**வசனம்** : அஃதெப்படியென்றால் கொழும்புராசன் தேசவிசாரஞ் செய்ய போனபின்பு, கண்டியை ஆளும் மன்னன் குடிசனங்களுக்குச் செய்யும் கொடுமைகளைச் சகிக்காதவர்களாய் ஏலப்பனை யதிகாரத்துடன் முறையிடும்படி குடிசனங்கள் வரும் விதங் காண்க.

விருத்தம்

**மாத்தயாதன்னைக் காணவடிவுடன் போவோமென்று**
**நேர்த்தியாயுடுத்து வேட்டி நெய் தயிருடன் பால் முட்டி**
**சேர்த்திடுவதைத் தேன்கட்டி தித்திக்கும் கித்திற்பட்டி**
**காத்தடிதனிலே கட்டிக் களிப்புடன் வந்திட்டாரே.**

கடைசியாய்க் கண்டி மன்னன் ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன் ஆங்கிலேயராற் கைது செய்யப்பட்டு வேலூர்க்குச் சிறைக்குக் கொண்டு போகக் கப்பல் புறப்படுகிறது.

7. கப்பற் பாட்டு

பல்லவி

**ஏலேலோ ஏலேலோ தத்தெய்யா ஏலேலோ ஏலேலோ**

சரணம்

**திருமருவுங்கண்டி நகராண்ட சிங்க மகிபாலனையும்**
**கருமருவு மனைவியையும் கவனமுடனே கெபினிட்டு**
**பெருமையுறு செயிலரைக் காவலாய்வைத்து**
**பேசரிய ஷிப்ஸ் கம்பனி பளின் பண்ணி**
**துரிதமாய்த் தவறாவை றெடி பண்ணிவைத்து**
**சொல்லரிய எங்கரைச் சீக்கிரமிழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.... என ஆங்கிலச் சொற்கள் விரவிச் செல்லும்

கப்பற்பாட்டின் பின், இந்தியக் கரையிற் கண்டி மன்னன் குமரக்கோட்டத்திற் கந்தனைத் தோத்தரித்து முடிந்ததும், விநாயகருக்கும், கொன்றை வேணியருக்கும், சர்க்கரபாண யற்கும், மலர் வேந்தனுக்கும், சடாட்சரநாதனுக்கும், சரஸ்வதி, லட்சுமி, பூமாதா, பர்வதவர்த்தினி ஆகிய சகல தேவர்களுக்கும், இக்கதையை முன் சொல்லியவருக்கும், திருகோணமலை யூரினுக்கும் சகல சீவான்மாக்கட்கும் மங்களஞ் சொல்லித் தன் நாடகத்தை முடிக்கிறார் அகிலேசபிள்ளையவர்கள்.

இந்நாடகமும் இன்னமும் அச்சாகாதது ஏனோ? நான் கேட்டபோது இன்றைய சூழ்நிலையில் இந்நாடகம் தமிழ் மன்னனான கண்டியரசன் சிங்கள ஏலப்பளையின் மனைவி மக்களைச் சித்திரவதை செய்தது கொலை செய்தமை பேரினத்தார்க்குச் சினத்தைத் தரலாம், பிறகு பார்ப்போம் என்று சொல்லப்பட்டது?

சரிதான்! அலை அடங்கிய பிறகு கடலில் குளிக்கலாம் என்ற கதைதான். எனக்கென்னவோ குற்றாலக் குறவஞ்சிக்கும் இராம நாடகத்திற்கும் இணையான இந்நாடகம் அழிந்து விடாமல் அச்சேற்றப்படவேண்டும் என்பது என் ஆசை. திருகோணமலையார் அதைச் செய்வார்களா?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெ.பொ.சி. கவிதைகள்

1950 தொடக்கம் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகவும், கணித ஆசிரியராகவும் கடமைபுரிந்தவரான பெரியதம்பி பொன்னையா சிவசேகரம் தமிழிலும் மிக்க பாண்டித்திய முள்ளவர். திருக்கோணமலையின் திருவள்ளுவர் கழகம் என்ற கழகத்தினை ஆரம்பித்து அதன்மூலம் தமிழ்ப் பணியும், சைவப் பணியும், சமூகப் பணியும் புரிந்தவர். பழந்தமிழ் இலக்கிய நூல்களைக் கற்பிப்பதற்காக பாடசாலையல்லாத நேரங்களில் வகுப்பு நடத்தியவர். கழகப் புலவர் என்ற பேராலேயே நன்கு அறியப்பட்டவர்.

இத்தகைய பெரும் புலவர் சுமார் கால் நூற்றாண்டு களுக்கு மேலாக அவ்வப்போது பாடிய பாடல்களையெல்லாம் கழகப் புலவர் பெ.பொ.சி. கவிதைகள் என்ற தலைப்பில் நூலாகத் தொகுத்துத் தந்திருக்கின்றனர். திருமலை ஈழத்து இலக்கியச் சோலையினர். அவர்களது எட்டாவது வெளியீடான இந்நூல் இருநூற்றெழுபது பக்கங்களைக் கொண்ட மிக அழகான தொகுப்பு நூல். ஆனால், விலையோ கொள்ளை மலிவு. திகைக்காதீர்கள். ஆக ஐம்பது ரூபாதான் விலை. தன் தந்தையாரின் ஆக்கங்களையெல்லாம் வெளிக்கொணர வேண்டும். அது எல்லார் கைகளிலும் இருக்க வேண்டும் என்று கவிஞரின் மைந்தன் கொண்ட ஆசைதான் இக்கொள்ளை மலி வுக்குக் காரணம் போலும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் தாயார் மூதூர் கிளிவெட்டியைப் பிறப் பிடமாகக் கொண்டவர். அவ்வூரிற் கோயில் கொண்டவள் மாரியம்மை. தாய்வழி இனத்தவர் குடியிருக்கும் சம்பூரிற் பத்திரகாளி கோயில் கொண்டிருக்கிறாள். கவிஞர் வாழ்ந்த திருமலை வீட்டிற்கருகாமையிலும் பத்திரகாளி கோயில்! இத்தகைய காரணங்களால்தான் பெ.பொ.சி. காலமெல்லாம் மகாகவி பாரதியைப் போல

**சக்தியென்று பேர் சொல்லித்**
**தமிழ்க் கவிதைபாடி**
**பக்தியுடன் தொழுது நின்றார்**

போலும். எடுத்த எடுப்பிலேயே என்னைக் கவர்ந்த கவிதை காளி கவிமாலைதான். தமிழ்க் கவிதை மரபும், தமிழ் இலக்கணமும் தெரிந்தவரான கவிஞர் பெ.பொ.சி. இக்கவி மாலையை நூறு கட்டளைக் கலித்துறைகளாக அநாயாசமாகப் பாடியுள்ளார். காளி கவிமாலையிலிருந்து ஒரே ஒரு பாட்டை எடுத்துக் காட்டுவாம்.

**யாப்பும் பொருளும் அணியும் நலம்பெற யாவையுமே**
**பாப்பண் ணிசையுடன் பாடிட நல்லருள் பாலிக்குஞ்**
**சொற்**
**காப்பும் கவசமும் நீயன்றோ பத்திரகாளியுனைக்**
**கூப்புங்கரங்கொண்டு கும்பிட்டேன் நாவிற் கொழிதமிழே**

திருக்கோணமலைப் பத்திரகாளியம்மையை மட்டுமல்ல கோணை நகர்க் கோணேசரையும் மற்றும் அந்நகரத்தில் பல்வேறு கோயில்களில் உறையும் தெய்வங்களையும் பாடியுள்ளார். அது மட்டுமல்ல நகருக்கு வெளியேயுள்ள தம்பலகாமம் கோணைநாயகர், வெருகற் சித்திர வேலாயுதர், சம்பூர்ப் பத்திரகாளி, சித்தாண்டி முருகன், மண்டூர்க்கந்தன் ஆகியோர் பேரிலும் பாக்கள் இசைத்திருக்கிறார் பெ.பொ.சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு தழுவிய பல ஊஞ்சற் கவிதைகளும் இத்தொகுப்பு நூலில் உள்ளன.

ஆக தெய்வங்களை மட்டுமே பாடினாரல்லர். பெ.பொ.சி. தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டு பல கவிதைகளைப் பாடியுள்ளார். வீதி என்ற கவிதை மிக அருமையான எளிமையான கவிதை. வீதி சொல்கிறது.

**காறி என்மேற் துப்பிடினும்**
**கஞ்சல் குப்பை கொட்டிடினும்**
**சீறியவர்மேற் சினங்கொள்ளேன்**
**தினமும் அவர்க்காய்இரங்கிடுவேன்**

ஆசிரியப்பாவால் அமைந்த முகில் என்ற கவிதையும் பொருள் பொதிந்த அற்புதமான படைப்பு அக் கவிதையில்

**வற்றி வரண்ட வாவிகளில் மேதிகளும்**
**நெற்றி தெரிய நிறை நீரில் நின்றாடும்**

என்ற வரிகளைப் படிக்கையில் குளங்களிற் சோம்பிக் கிடக்கும் எருமைகளைக் கவிஞர் எத்தனை அவதானத்துடன் பார்த்திருக்கிறார் என்பதை எண்ணி மகிழ்ந்தேன்.

கோயில்களில் ஒலிபெருக்கிகள் சப்தமிட்டுக் கோயில் களின் தூய்மையையும், சாந்தியையும், கலைப்பதையும் கவிஞர் வெறுப்போடு பாடுகிறார். விலைவாசி ஏற்றம் பற்றி இன்னோர் கவிதையில் வெம்புகிறார். இல்லை எழில் என்ற கவிதையைப் படிக்கையில் நான்மணிக் கடிகையைப் படிப்பது போலி ருக்கிறது.

இப்படியாகச் சமூகத்தைப் பற்றிய கவிதைகளோடு, தமிழ் வளர்த்த பெரியார்களைப் பற்றிப் பாடிய பல பாடல் களும், விழாக்களிற் பாடிய வாழ்த்துப் பாடல்கள் பலவும், கவியரங்குகளிற் பாடிய பாடல்களும் இத் தொகுப்பிலே இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருக்கின்றன. ஆனால், இவைகளுக்கெல்லாம் சிகரமாக நடராஜா என்ற கவிதை அமைந்துள்ளது. எவ்வின் ஹூட் என்ற ஆங்கிலப் புலவர் எழுதிய ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கமே இக்கவிதை. நடராஜதத்துவம் பற்றி இக் கவிதை மிக அழகாக, ஆழமாகச் சொல்கிறது. ஆங்கில மூலக் கவிதையை அப்படியே தந்து அதன் பின்பு அதன் மொழி பெயர்ப்பையும் தந்துள்ளார்.

பெ.பொ.சி. ஒரு மரபுக் கவிஞர். இலக்கணந் தெரிந்தவர். உமர் கையாமின் ருபயாத்தைப் பிற்செரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழுக்குத் தந்த தேசிக விநாயகம் பிள்ளையைப்போல மரபுக் கவிதையாக எவ்லின்ஹூட்டின் கவிதையை நமக்கு மொழி பெயர்த்துத் தரவில்லை. மாறாக ஹரீந்திரநாத் சட்டோபாத்யாவின் கனல்கக்கும் கவிதைகளைத் தமிழில் வசனமாகவே மொழி பெயர்த்துத் தந்த வி.ஆர்.எம். செட்டியாரைப் போல, பெ.பொ.சி. எவ்லின்ஹூட்டையும் நமக்கு வசனமாகவே மொழி பெயர்த்துத் தந்துள்ளார். அப்படிச் செய்தாற்தான் மூலக்கவியின் கருத்தை முழுமையாகக் கொண்டு வரமுடியும் என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்.

Thandava! Ballet of born and reborn
Thandava! Separate time and space torn

Raw from the bossom of Brahma
Thandava! spin into thythm
the sky and the ocean, even
the spherical cosmos
it self, thy still centre

என்று தொடங்கும் ஆங்கிலக் கவிதையை பெ.பொ.சி

தாண்டவா! பிறப்பின் ஆட்டமாய் இருப்பவனே!
தாண்டவா! பிரம்ம அந்தரங்ககத்திலிருந்து புத்தம்
புதிதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழித்தெறியப்பட்ட காலமும் இடமுமாக நிற்பவனே
தாண்டவா! விண்ணையும் கடலையும்
ஏன்? கோளவடிவான பிரபஞ்சத்தையும் கூட
மோனத்தவநிலையிலிருந்து ஒழுங்கு நியதி
யாகிய லயத்துடன் தோற்றுவித்தவனே!

என்று தமிழாக்கியிருக்கிறார் பெ.பொ.சி. எட்டுப் பக்கங்களில் ஓடும் ஆங்கிலக் கவியையும், அதன் மொழி பெயர்ப்பையும் பொருத்திப் படித்தபோது, பெ.பொ.சி. யின் ஆங்கிலப் புலமையையும் அவர் உள்ளத்தின் உள்ளொளியையும் தரிசித்து மலைத்தேன். கலாயோகி ஆனந்த குமாரசாமியின் சிவதாண்டவம் என்ற ஆங்கிலக் கட்டுரையைப் படித்த பின்னரும் தரிசிக்க முடியாத சிவதாண்டவ தத்துவத்தை பெ.பொ.சி.யின் நடராஜா மூலம் தரிசித்தேன்.

இறுதியாக எம்மோடு சுமார் அறுபத்திநான்கு ஆண்டுகள் வாழ்ந்த பெ.பொ.சி. பேரையும் புகழையும் விரும்பாதவராய் மிக மிக அமைதியாக அடங்கி வாழ்ந்து அமரரானார். அன்னார் தம் புலமையையும், ஆற்றலையும் இன்னும் சற்று விகசித்து எமக்குப் பேரிலக்கியம் ஒன்றைத் தந்து செல்லாதது எனக்குப் பெரிய குறையாகவே படுகின்றது. வாராது போல வந்த மாமணியைத் தோற்றுவிட்டோம் என்று பாரதியார் வாக்கிற் பாட அன்னாரது படைப்பாக இந்தத் தொகுதியாவது வெளிவந்ததே, அதுவே பெரிய காரியமாகத் தோன்றுகிறது.

இத் தொகுப்பிலுள்ள கவிதைக்கான காலமும் தெரியவில்லை. சிரமப்பட்டுப் படித்தால் அவைகள் எனக்குச் சற்றுப் புலனாகின்றன. தொகுத்தவர்கள் சிரமமெடுத்து அக்கவிதைகளின் காலத்தைத் தேடிக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அது ஒரு குறையாகவே எனக்குத் தோன்றுகிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர நாவல்

**இன்றைக்கு** நிகழ்ந்து கொண்டிருப்பவை நாளைய சரித்திரம். பேரினவாத அரசாங்கமும் அகில உலக அரசியற் சண்டியர்களான அமெரிக்கரும் பயங்கரவாதம் என முத்திரை குத்தினாலும் இன்று நடந்து கொண்டிருப்பது தமிழினம் மற்றைய இனங்களோடு சரிநிகர் சமானமாக வாழ நடத்தும் உரிமைப்போர் என எதிர்கால சரித்திரம் சொல்லத்தான் போகிறது. அந்தச் சரித்திரம் நாளாந்தம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால் அந்த உரிமைப்போரை நமது எழுத்தாளர்கள் நாவலாக இன்னமும் எழுதவில்லை. நீண்ட பயணம், லங்காராணி என்ற ஓரிரண்டைத் தவிர, கவிஞர்கள் காவியங்கள் பாடவில்லை.

ஆனால் இந்தக் கறையை புலம் பெயர்ந்த எழுத்தாளரான ஏ. சிவானந்தன் நினைவுகள் மடிகையில் என்ற நாவலை எழுதிப் போக்கியுள்ளார். 1958 இல் நாட்டைவிட்டு இங்கிலாந்துக்குப் புலம் பெயர்ந்த திரு. சிவானந்தன் அங்கே கறுப்பு இனத்தாரதும் மூன்றாம் உலக நாட்டு மக்களதும் உரிமைக்காகப் போராடினார். இனத் தொடர்புகளுக்கான இயக்கத்தின் தலைவராகவும் பணியாற்றுகிறார். ஏற்கனவே ஈழத்து இதழ்களில் அவர் சிறுகதைகள் வெளியாகியுள்ளன. என நூலின் பின் அட்டை சொல்கிறது. இந்த ஆண்டில் when memories - dies என்ற அவரது ஆங்கில நாவல் இங்கிலாந்தில் வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் உரிமைப் போராட்டம் 1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு முன்னால் நடந்த சத்தியாக்கிரஹப் போராட்டத்துடன்தான் தொடங்கியது என நம் எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் சிவானந்தன் அதற்கும் பின்னால் தனிச் சிங்களச் சட்டம் வருவதற்கான பின்னணிகளை விளக்குவதற்காக 1920 ஆம் ஆண்டிலிருந்தே நாவலை ஆரம்பிக்கிறார். 1985 ஆம் ஆண்டு வரை இந்நாட்டில் நடந்த சம்பவங்கள் மூன்று பாகங்களாக நானூற்றிப் பத்துப் பக்கங்களில் மூன்று கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு சொல்லப்படுகின்றது. ஒவ்வோர் பாகமும் ஓர் தலைமுறையின் கதை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சண்டிலிப்பாய்க் கிராமத்திலே ஒரு சாதாரண விவசாயி பாண்டியன். அவனுடைய மகன் சகாதேவன் கொழும்பு சென்ற் பெனடிக்ற் கல்லூரிக்கு வருகிறான். கொழும்பிலே தன் உறவினர் வீட்டிலிருந்து பாடசாலை போகிறான். இடைநிலைப் படிப்பை முடித்து வீட்டுக்கு வந்தபோது தன்மேலே குடும்பப் பாரம் முழுவதும் சுமத்தப்பட்டிருப்பதை உணர்கிறான். கிளறிக்கல் சோதனை சித்தியடைந்து கொழும்புக்கு வந்து தபாற் திணைக்களத்தில் வேலை செய்கிறான்.

சம்மறிகளில் தங்கியிருந்து கடைசியாக விஜயபால என்பவரின் வீட்டில் போடராகிறான். விஜயபால பழைய தொழிற்சங்கவாதி. ரெயில்வேத் திணைக்களத்தில் பாதை சீரமைப்புப் பிரிவில் வேலை செய்பவர். கிறிஸ்தவராகத் தற்போதிருந்தாலும் கிறிஸ்தவர்கள் செய்து கொண்டிருக்கும் மதமாற்றத்திற்கும், வெள்ளையர் ஆட்சிக்கும் பரமவைரி. அவருடைய பெறாமகன் திஸ்ஸவும் அடிக்கடி விஜயபால விடம் வருகிறான். அதனால் சகாதேவனிடமும் நட்பாகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள் சண்டிலிப்பாயிலிருந்து வந்த சகாதேவனின் தம்பி (தன் தந்தைக்கு வேறு பெண் மூலம் பிறந்தவன்) பராவும் கொழும்பு வந்து டிறாமில் வேலைக்குச் சேர்கிறான்.

அந்தக் காலம் குணசிங்காவின் தொழிற்சங்க காலம். திஸ்ஸ, குணசிங்காவின் வலது கரமாக விளங்குகிறான். தன் உத்தியோகத்தையும் விட்டு விட்டு முழுநேரம் தொழிற்சங்க வாதியாகிறான். அடிக்கடி வேலை நிறுத்தங்கள்!

சகாதேவனின் தாய் சாகிறாள். சகாதேவன் சண்டிலிப் பாய் சென்று வருகிறான். திணைக்களப் பரீட்சையிற் சித்தியடைந்து போஸ்ற் மாஸ்ரராக உத்தியோக உயர்வு பெறுகின்றான். பராவுக்கும் ரெயில்வேயில் வேலை கிடைக்கிறது.

வேலை நிறுத்தம் நடந்தபோது திஸ்ஸவின் நண்பன் சுல்தான் பொலிசாராற் கொல்லப்படுகிறான். பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் மக்டொனால்டும், இந்தியத் தலைவர்கள் சரோஜினி நாயுடு, மகாத்மா காந்தி ஆகியவர்கள் ஒருவர் பின் ஒருவராக இங்கு வருகிறார்கள்.

குணசிங்கா இங்கிலாந்து செல்ல விரும்புகிறார். ராமசாமி என்ற தொழிலாளியின் விடயத்தை அவர் கையாண்ட முறையினால் சகாதேவன் மனமுடைகிறான். ராமசாமி கருங்காலி ஆக்கப்பட்டு அவன் குடும்பமே இந்தியா செல்கிறது.

சகாதேவன் போஸ்ற் மாஸ்ரராகக் கண்டி செல்கிறான். அவனுக்கு மணமாகிவிட்டது.

கண்டியிலே சகாதேவனின் மகன் ராஜன் பாட சாலைக்குச் செல்கிறான். பின்னர் சென்ற் யோசப் கல்லூரியிற் படிக்கக் கொழும்பு வருகிறான். பரா சித்தப்பா வீட்டிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை செல்கிறான். பாடசாலைப் படிப்பு முடித்துச் சர்வகலாசாலை செல்கிறான். சர்வகலாசாலையில் லால் என்ற வைத்திய மாணவன் அவனது நண்பன். தீவிர இடதுசாரி. சூரியமல் இயக்கத்தோடும் பின்னால் சமசமாஜக் கட்சியோடும் நெருக்கமானவன்.

1954 இல் ஹர்த்தால் நடக்க இருக்கிறது. ஹர்த்தாலுக்கு முதல் நாள் ராஜன் தெமட்டகொடவிற்கு லாலிடம் செல்கிறான். அங்கு பல தோழர்கள்! சேனாவும் அவர்களில் ஒருவன்.

லாலின் தங்கையை ராஜன் காண்கிறான். அவளில் மனம் விழுகின்றது!

ஹர்த்தாலின்போது பன்னிருவர் பொலிசாரால் சுடப் படுகிறார்கள். சேனாவும் அவர்களில் ஒருவன். சில நாட்களின் பின்னர் ராஜன், லாலின் தங்கை லலியிடம் தன்னை மணம் செய்யுமாறு கேட்கிறான். அவள் முற்றாக மறுக்கிறாள். மனம் உடைந்த ராஜனுக்குப் பட்டப்படிப்பிலும் கிளாஸ் கிடைக்கவில்லை! அதனால் தனியார் பாடசாலை ஒன்றிற்கு ஆசிரியனாகி நுலரெலியா செல்கிறான். அங்கு குடிக்கிறான்!

லீவில் கொழும்பு வந்தபோது லலியைப் பிள்ளையுடன் காண்கிறான். தான் சேனாவைக் காதலித்ததாகவும், ஹர்த்தாலுக்கு முதல் நாள் அவனோடு உடலுறவு வைத்துக் கொண்டதாகவும் லலி சொல்கிறாள். 1955 இல் ராஜனுக்கும் லலிக்கும் திருமணம் நடைபெறுகிறது. சேனாவிற்கும் லலிக்கும் பிறந்த மகன் ராஜன் மகனாகவே வளர்கிறான்.

1956 இற் தேர்தல் வந்தது. அதைத் தொடர்ந்து சிங்களம் மட்டும் சட்டம். தமிழரை நிந்திப்பது சிங்களவரின் தேசியக் கடமையாகக் கருதப்பட்டது. இந்த நிலையில் லலியும் ராஜனும் சண்டிலிப்பாய் போகின்றனர். லலி சரளமாகத் தமிழ் பேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாருடனும் பழகினாள். ஊர் திரும்பிய பின் பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுகின்றது. லால் மனமுடைந்து போகிறான். தீவிர இடதுசாரியான அவன் இன உணர்வும், மத உணர்வும் வர்க்க ரீதியான போராட்டத்தை அழித்து விட்டன. இந்தப் புழுக்கைகள் வர்க்க ரீதியான மீட்பினை என்றைக்குமே இந்நாட்டிற் காணமாட்டார்கள் என்று புழுங்கினான்.

வவுனியா மகாநாடு, அதற்கு வந்த மட்டக்களப்பு ரயில் புரட்டப்பட்டது. பொலநறுவையிலிருந்து வந்த லலி அவள் தமிழ்ப் பெண் எனக் கருதப்பட்டுக் காடையர்களால் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொலை பண்ணப்படுகிறாள். மனமுடைந்த ராஜன் இங்கிலாந்து செல்கிறான்.

லலியின் மகன் விஜே குருநாகல் மத்திய மகாவித்தியாலயத்திற் படிக்கிறான். சிங்கள இளைஞர்களின் பிணங்கள் களனி கங்கையில் மிதந்த காலம். விஜேயும் விடுதலை முன்னணியிற் சேர்கிறான். ஆனால் அவன் தமிழன் என்பதற்காக இயக்கத்திலிருந்து இடைநிறுத்தப்படுகிறான். விடுதலை முன்னணியின் ஐந்தாவது வகுப்பு இந்திய விஸ்தரிப்பு ஆகி, இந்தியத் தோட்டத் தொழிலாளரின் மீது வகுப்புவாதத்தைக் கொட்டியது. இதுவும் விஜேக்குப் பிடிக்கவில்லை. சர்வகலாசாலை சென்று பட்டதாரியாகிறான். 1977 தேர்தல் வருகிறது. தனது மாமனார் லாலைச் சந்திக்கிறான். மலையகத்திற் தன் தந்தையின் உடன் மாணவனான சஞ்சியின் மகள் மீனாவையும் சந்திக்கிறான். மீண்டும் குருநாகல் வந்து ஆசிரியனாகிறான். மானெல் என்ற ஆசிரியையை மணம் புரிகிறான். பாடப்புத்தகங்களில் வகுப்புவாதம் கக்கி எழுதப்பட்டமை அவனைத் துன்புறுத்துகிறது. மாணவரது கைகளிலும் யார்யாரோ எழுதிய வகுப்புவாதத் துண்டுப்பிரசுரங்கள்! விஜேக்கு ஒரு குழப்பம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் காணிவலில் கலவரம்! மானிப்பாய் வங்கிக் கொள்ளை. யாழ்ப்பாண நூலக எரிப்பு. 1981 இல் நடத்தப்பட்ட பொதுசன வாக்கெடுப்புத் தினத்தன்று விஜே சாதாரண உடையில் வந்தவர்களால் பிடிக்கப்பட்டு 4 ஆம் மாடிக்கும் பின்னர் வெலிக்கடைச் சிறைக்கும் கொண்டு போகப்படுகிறான். வெலிக்கடைச் சிறை உடைப்பு காயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்ட விஜேயை மனைவி வந்து ஊருக்குக் கூட்டிப் போகிறாள்.

நாட்டிலே குழப்பம். மலையகத் தமிழர்கள் பலர் அகதிகளாகிறார்கள். சஞ்சேயும் மீனாவும் அகதிகளாகி வருகிறார்கள். அவர்களை அகதி முகாமிற் சந்தித்த விஜே அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிப்போகிறான். மானெலுக்கு இது பிடிக்கவில்லை. வாய்க்கு வந்தபடி பேச மீனா வீட்டை விட்டுக் கிளம்புகிறாள். அவளைத் தேடி விஜேயும் கிளம்புகிறான். மீனாவை ஏற்கனவே சந்தித்த விஜேயின் நண்பர்கள் அவளைப் புகையிர தானத்தில் மறைத்து வைத்திருந்தார்கள்.

யாழ்ப்பாணம் போக இருக்கும் ரயிலில் ஏற்றுவது அவர்களின் திட்டம். ஸ்தானத்திற் தரித்த ரயிலில் அவர்கள் மீனாவை ஏற்றியபோது விஜேயும் அதில் பாய்ந்து ஏறிக்கொண்டான்.

யாழ்ப்பாணத்திற் பழைய நண்பர் நடேசனைச் சந்திக்கிறான். அங்கிருந்து சண்டிலிப்பாய் செல்ல முயல்கிறான். அவனுக்கும் மீனாவுக்குமாகப் பையன்களிடம் பாஸ் எடுத்துப் புறப்படுகையில் ஏதோ குழப்பம். நடேசனின் வீடு சோதனை யிடப்படுகிறது பொடியன்களால். குகன் என்ற கால்முடமான பழைய போராளி படையினருக்குத் தகவல் கொடுத்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கொலைக்குத் தீர்ப்பளிக்கப்படுகிறான். அதைத் தடுக்க முயன்ற விஜேயும் குண்டுபட்டுச் சாகிறான்.

இப்படிச் சகாதேவன், மகன் ராஜன், ராஜனின் மகன் விஜே ஆகிய மூன்று தலைமுறைப் பாத்திரங்கள் ஊடாக 1920 தொடக்கம் 1985 வரையுள்ள கதை சொல்லப்படுகின்றது. டக்ரர் டேவிட், ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, அருட்திரு லெகொக், ஐவர் ஜென்னிங்ஸ் ஆகியோரதும் இன்னும் பலரதும் பெயர்கள் ஏன் நாவலில் மாற்றப்பட்டுள்ளன என்பது விளங்கவில்லை. சென்ற் ஜோசப் கல்லூரி ஆசிரியர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய விவரிப்பும், ராஜன், லோனா முனசிங்கா என்ற கிறிஸ்தவப் பெண்ணைக் காதலிப்பதும் கதைக்குத் தேவையற்றவை. ஆனாலும் இடதுசாரிக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட அருமையான சரித்திர நாவல் நினைவுகள் மடிகையில் என்பது. இந்நாட்டில் வகுப்புவாதம் வளர்ந்த கதையைச் சொல்வதில இந்நாவல் வெற்றியடைந்திருக்கிறது. நாவலை எழுதிய சிவானந்தன் பாராட்டுக்குரியவர். ஆனால் இந்நாவல் தமிழிலும் வெளிவரவேண்டும் என்பது என் ஆசை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கடைக் காப்பு

(6-5-98 ந்திகதி அருட்திரு வெ. யூஜின் அ. மதி அவர்களுக்கு அவர் பிறந்த ஊரான மூதூரில் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் ஆற்றிய உரை.)

**பங்குக்** குரவர்களே, அருட் தந்தையர்களே, சங்கைக்குரிய சகோதரிகளே திருக்கோணமலை மட்டக்களப்பு மறை மவாட்டத்தில் அமலமரித்தியாகிகள் சபையின் இரண்டாவது குருவாகவும், மூதூர்ப் பங்கின் அமலமரித்தியாகிகள் சபைக்கு முதலாவது குருவாகவும் சென்ற 02-05-98ல் திருநிலைப்படுத்தப்பட்ட வெனடிக் யூஜினை இப்பங்கின் சார்பாக வரவேற்பதில் பெருமகிழ்வு எய்துகிறேன்.

எமது மூதூர்ப் பங்கு மிக மிகப் பழமை வாய்ந்தது. 1695ம் ஆண்டிற் சங்கைக்குரிய யோசேப்வாஸ் முனிவர் இங்கு வருகை தந்தபோது, நம்மூரில் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஓர் பங்கு இருந்ததாக, இலங்கையிற் கத்தோலிக்க திருச்சபை என்ற பாரிய நூலில், அருட்திரு பேணியோலா அவர்கள் குறிப்பிடுகிறார். கடலோடிகளாக இங்கு வந்து பிறமதத்தினர் மத்தியில் தமது பாரம்பரியத்தைக் கைவிட்டு விடாமல் வாழ்வதற்கு நம் முன்னோர் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. தாம் கொண்ட மதத்தை அநுட்டிப்பதற்காக அவர்கள் பல கஸ்டங்களை அனுபவித்தனர். எத்தனை கஸ்டங்கள் இருப்பினும் தம் மத அனுஷ்டானத்தில் அவர்கள் தீவிர பற்றுடையவர்களாக இருந்தனர். ஒல்லாந்தர் கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியில் நாட்டிலே கத்தோலிக்க குருமாரே இல்லாத காலத்திலும் நம் முன்னோர் வைராக்கியத்தோடு தம் மதத்தை அனுஷ்டித்து வந்தனர். அயலிலுள்ள மக்களோடு கலந்தால் தம் மத அனுஷ்டானத்திற்குக் கேடுவரும் என்பதை உணர்ந்தவர்களாக தமக்குள்ளேயே திருமணம் செய்தனர். தென்பாண்டி நாட்டுக் கடலோரக் கிராமங்களிலிருந்து வந்தவர்களாகச் சொல்லிக் கொண்ட நம் முன்னோருக்குக் காலகதியில் தம் தாய் நாட்டோடு எந்தத் தொடர்பும அற்றுப்போயிற்று. தாய் நாட்டோடு மட்டும் என்ன, மன்னார், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த தம் இனத்தாரோடும் தொடர்பற்றவர்களாக இருந்தனர். இப்படித் தனித்த வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தாலும் தீவிர மதப் பற்றுக்கொண்டே வாழ்ந்தார்கள். தம் மூரிற் கோயில் கொண்ட புனித அந்தோனியார் பேரில் வாசகப்பா என்ற பிரபந்தங்களை யாத்தார்கள். பலவிருத்தங்களைப் பாடினார்கள். தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், யாழ்ப்பாணத்து அந்தோனிக் குட்டி அண்ணாவியார் போன்றாரது பாடல்களை நம் முன்னோர் மனனம் பண்ணியே வைத்திருந்தார்கள். தமக்கு நோய் நொடி எற்பட்டால் இங்கே அடக்கம் பண்ணப்பட்ட கோவையைச் சேர்ந்த மிக்கல் தெ. மெல்லோ அடிகளாரின் கல்லறை மண்ணை எடுத்துக் கரைத்துத் தெளிய வைத்துக் குடித்தார்கள். விஷக்கடிக்கு அவர் கல்லறை மண்ணைக்குழைத்து கடிவாயிற் பூசினார்கள். தங்கள் பிள்ளைகளைத் தாய்மார் தாலாட்டுகையிற்

**சாந்தூஸ் மணி கிலுக்கச்**
**சம்மன சோர் பூசை சொல்ல**

என்றுதான் பாடினார்கள்.

இப்படி மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக வைராக்கியம் கொண்ட கத்தோலிக்கராக நம் மக்கள் வாழ்ந்தாலும், நம்மிடையே ஒரு குரு கூட உதயமாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நமக்குப் பெரிய குறையாகவே நீண்ட நாட்களுக்கு இருந்தது. 'கொட்டியாரத்தார் சாமிமாரோடு நெடுகச் சண்டை பிடிப்பார்கள். அதுதான் ஆண்டவன் சாபம். அதால அங்கே ஒரு குரு கூட வெளிவாறதில்லை' என்று வேறு பங்கிலுள்ள மக்கள் நம்மை ஏளனஞ் செய்தனர். ஆனால் நாமோ மெசாயாவின் வருகைக்குக் காத்திருந்த யூதகுலத்தாரைப் போல ஒரு குருவை வேண்டி நீண்ட நாட்கள் தவமிருந்தோம்.

கடைசியாய் எம் மன்றாட்டுக் கேட்கப்பட்டது. 1992ல் அருட்திரு அருள்வரதன் நம்மூரின் முதலாவது குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். தொடர்ந்து என் மகனும், மகனைத் தொடர்ந்து என் மச்சானின் மகனும் குருவானார்கள். ஆம், அடைபட்டிருந்த ஊற்றுக்கண் திறந்தேவிட்டது. இனிமேல் அந்த ஊற்றைத் தடுத்து நிறுத்தவே முடியாது என்பதை எண்பிப்பது போல நாலாவதாக என் தம்பியின் மகன் குருவாக நம்முன் நிற்கிறான். நம்மூரின் அமலமரித்தியாகிகள் சபையின் முதலாவது குருவாக வெளிவந்த அவரை வரவேற்றுப் பேச எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னோர் விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணத்து கரம்பொன் என்ற ஊரிலிருந்துதான் வந்தனைக்குரியவர்களான எமிலியானுன் பிள்ளை, தீயோகுப்பிள்ள்ளை, L.R. அந்தோனி, கிங்ஸ்லி சுவாம் பிள்ளை ஆகிய மேற்றிராணிமார்கள் வந்தார்கள். இன்னொரு வர் மலேசியாவில் மேற்றிராணியாராக உள்ளாராம். இப்படியாகக் கரம்பொன் கிராமத்திலிருந்து எல்லா மேற்றிராணிமார்களும் வந்ததைப் போல இதுவரை மூதூரிலி ருந்து வந்த நான்கு குருக்களும் ஒரே குடும்பத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்தவர்கள். இருவர் என் மருமக்கள். இருவர் மக்கள். பெருமைக்காகச் சொல்கிறேன் என நீங்கள் எடுத்துக் காண்டாலும் உண்மையும் இதுதான்!

இன்று புதிதாக நம்மிடையே வந்திருக்கும் குருவுக்கு இறைவன் சகல ஆசிகளையும் பொழிந்து அவரை வழி நடத்த வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இந்த வேளையில் நமது தாய்மார் பாடும் தாலாட்டுப் பாடல் அடிகள் என் நினைவுக்கு வருகின்றன. அவர்கள் தாலாட்டும்போது

**(நாங்கள்)**
**மலைக்கு மலை நேர்ந்தோம்**
**மலை உயரம் பொன் நேர்ந்தோம்**
**மாதா இரங்கி மாதாமனமிரங்கித்**
**தந்த பிச்சை**
**தந்த பிச்சை ஈடேறத்**
**தயவுபண்ணும் தாய்மரியே**
**கொடுத்த பிச்சை ஈடேறக்**
**கூட நில்லும் தாய் மரியே**

என்று பாடுவார்கள். அத்தாலாட்டுப் பாடலையே மீண்டும் பாடி, அமலமரித்தாய் உம்மை வழிநடத்தவேண்டும் என அத்தாயிடம் மன்றாடி என் பேச்சை முடிக்கிறேன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசிகமணி: காண்டீபன் கவிதைகள் - பக் 81.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

**நாவல்கள்:**

கொழுகொம்பு.
கிரௌஞ்சப் பறவைகள்.
ஒருவெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது.
மண்ணிற் சமைந்த மனிதர்கள்.

**சிறுகதைத்தொகுதிகள்:**

தோணி.
ஒரு காவியம் நிறைவு பெறுகிறது.

**கவிதை:**

பூவரசம் பூ.
(மொழிபெயர்ப்புக் கவிதை)

**கட்டுரை:**

இலக்கிய நினைவுகள்.

**சரித்திரம்:**

மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் வரலாறு.
திருக்கரசைபுராணம் (பதிப்பித்தமை)

PRINTING DEPARTMENT
026 22151
NORTH - EAST PROVINCE
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org